www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

ஜூன்.30–ஜூலை.06,1996


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 159

# மாபெரும் கெரில்லாப் போர்

## தடைகளும் தந்திரங்களும்

எக்ஸ்ரே ரிப்போர்ட்



விணிதா விரக்தியால்

காதல் மன்னன் கவுண்டமணி

எலிசபெத் ராணியின்

## அதிசயப் படங்கள்!



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## செய்யவேண்டியது என்ன?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

யாழ்-குடாநாட்டுக்கு
அமைச்சர்கள் பலர்
அடிக்கடி சென்று வருகின்றனர்.
நிலமைகளைக் கண்டனர்;
திட்டமிட்டனர்; உத்தரவு போட்டனர்
என்றெல்லாம் செய்திகள் வருகின்றன.

ஆனாலும், அங்கு
அரிசி விலை யானை விலை;
கறுப்புச்சந்தையில்
மண்ணெண்ணெய்கூட தங்கவிலை;
என்றெல்லாம் அறிய முடிகிறது.

பொருட்கள் பற்றாக்குறையானால்தான்
பதுக்கலும், கறுப்புச்சந்தையும்
அமோகமாக ஆரம்பமாகின்றன.

யாழ்-குடாநாட்டில்
கறுப்புச்சந்தை வியாபாரம்
கொடிகட்டிப் பறக்கிறதென்றால்
அத்தியாவசியப்
பொருட்களின் பற்றாக்குறைதான்
அதற்குக் காரணம்.

யாழ்-குடாநாடு
அரச கட்டுப்பாட்டில் உள்ளதால்
அங்கு அத்தியாவசியப் பொருட்கள்
தட்டுப்பாடின்றிக் கிடைக்க
உடனடியாக ஆவன செய்வது
அரசாங்கத்தின் பொறுப்பு!

யாழ்-குடாநாடு
கட்டுப்பாட்டில் இருப்பதை
வெளிப்படுத்தும் தீவிரம்
பொருட்களின் தட்டுப்பாட்டை
நீக்குவதிலும் இருக்க வேண்டாமா?

யாழ்-குடாநாட்டில்
தொழிற்சாலைகள் திறக்கப்படும்;
தொலைபேசிகள் இயக்கப்படும்;
கோடி கோடியாக
புனரமைப்புத் திட்டங்கள்
தீட்டப்படும் என்றெல்லாம்
செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்-குடாநாட்டில்
கைத்தொழிற் பேட்டையை
திறக்கப்போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
மின்சாரமே இல்லாத நிலையில்
தொழிற்சாலைகளை எப்படி
அங்கே திறக்கப்போகிறார்கள்?

திட்டங்களில்
உடனடித்திட்டங்கள்
நீண்டகாலத்திட்டங்கள் என்று
இரு வகைகள் இருக்கின்றன.

அரசாங்கம் சொல்வதெல்லாம்
நீண்டகாலத் திட்டங்கள்.
உடனே கவனிக்க வேண்டியது-
அன்றாட வாழ்க்கையின் சுமைகளை
எப்படி இறக்கிவைக்கலாம்
என்பதைப் பற்றித்தானே!

ஏற்கெனவே யாழ்-குடாநாட்டில்
கைத்தொழில், விவசாயம், மீன்பிடி
போன்றவை பொருளாதாரத் தடையாலும்
பின்னர் ஏற்பட்ட இடம்பெயர்வாலும்
சீர்குலைந்துள்ளன.

அவற்றை சீரமைக்க
உதவுதல்தான் உடனடித் தேவை.
அதன் மூலம்தான்
நிவாரணப் பொருட்களுக்கான
தவம் கிடத்தல் ஒழிந்துபோகும்.
கையேந்தும் வாழ்க்கைக்கு
முற்றுப்புள்ளியிடக் கூடியதான
புனர்வாழ்வு நடவடிக்கைகளே
இன்று அவசர- அவசியத் தேவை.

புதிய தொழிற்சாலைகளை
நிறுவுவது இருக்கட்டும்,
முதலில் ஏற்கெனவே உள்ள தொழில்கள்
மீளத்தொடங்கப்படுவதற்கு
ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படட்டும்!

அரசாங்கமும், அமைச்சர்களும்
வெளிநாட்டு உதவிகளைப்
பெறக்கூடிய பெரும் திட்டங்களை
குறிவைத்தே செயற்படுவதாகத் தெரிகிறது.

வடக்கு-கிழக்கு
புனர்வாழ்வு, புனரமைப்புக்கு
வெளிநாடுகள்
தாராளமாக உதவத் தயார்.
அதனைப் பெறுவதற்கு ஏற்ப
திட்டங்கள் தயாரித்துக் கொடுத்தால்
போதும் என்று கருதப்படுகிறதோ?

அதுதான் உண்மையானால்,
புனர்வாழ்வு நடவடிக்கைகளும்
ஆரவார அறிவிப்புக்களும்
வெளிநாட்டு நிதி பெறுவதற்கான
தூண்டில் என்று அர்த்தமாகிவிடும்!

யாழ்-குடாநாட்டை
குட்டிச் சொர்க்கமாக்கியே தீருவது
என்று அரசு நினைத்தால்
அதற்கு யார்தான் குறுக்கே நிற்பர்?
ஆனால், உடனடியாக தேவையானது
நரகத்திலிருந்து வெளியே வர
உதவும் புனர்வாழ்வுத் திட்டங்கள்தான்!
அதன்பின்னர் 'சொர்க்கத்தை
நிர்மாணித்துக் கொள்ளலாமே!'

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## உன்னை மறப்பதில்லை

மறதி.. பல மனிதர்கள் உபயோகிக்கும் கைத்தடி..

"என் மகனை இந்நிலைக்குக் கொண்டு வர எவ்வளவு கஷ்டப்பட்டேன். இப்போது அதையெல்லாம் மறந்து என்னை எதிர்த்துச் சென்றுவிட்டானே" என்று அங்கலாய்க்கும் உள்ளங்கள் எத்தனை!

"வீட்டு எசமானுக்காக எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தேனே, இன்று எல்லாவற்றையும் மறந்து விட்டாரே" என்று வேதனைப்படும் உள்ளங்கள் கோடி....

எனது மேலதிகாரி கூறும் ஒவ்வொரு வேலைகளையும் தட்டாது சரிவரச் செய்து வந்தேனே... நான் செய்த எல்லா வேலைகளையும் மறந்து விட்டாரே..." என்று வேதனைப்படும் உள்ளங்கள் எத்தனை...!

ஆனால் எம்மை என்றும் மறவாத ஒருவர் உள்ளார் என்பதை நாமும் மறந்து விடுகிறோம். அவர் யார்? எம்மை உண்டாக்கிய தேவன். ஏசா. 44.21 கூறுகிறது- "நான் உன்னை உருவாக்கினேன், நீ என்னால் மறக்கப்படுவதில்லை." ஆம் அவர் எம்மை என்றும் மறப்பதில்லை. ஆகவே மனிதர் எம்மை மறந்தால் வேதனைப் படாதிருப்போம்.... எம்மை மறவாத தேவன் எம்மோடிருக்கிறார் என்பதை நாம் மறந்துவிடாது இருப்போம்...

ஜே.புளோரன்ஸ், அம்பக்கோட்டை, கெங்கல்ல.



## வாக்குறுதியும் வள்ளல் நபியும்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு மனிதனின் நல்ல பொருளும் மிகக் கெட்ட பொருளும் நாவே என்று கூறினார்கள்.

"அல் அமீன்" என்ற பட்டம் பெற்ற அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நாவைப் பேணி வாக்குறுதி மீறாத வள்ளல் நபியாக திகழ்ந்தார்கள்.

இன்று வாக்குறுதி ஜோக் குறுதியாக மாறிவிட்டது. செல்வந்தர்கள் தொழிலாளர்களையும் ஏழைகளையும் தம் நாவலிமையால் ஏமாற்றுகின்றனர்.

இப்படிப்பட்டவன் மறுமையில் இறைவனிடம் இருந்து தப்ப முடியாது. ஏனென்றால் அல்லாஹ் அவன் அருள்மறையில் பின்வருமாறு கூறுகிறான்:

வாக்குறுதியைப் பூரணமாக நிறைவேற்றுங்கள். நிச்சயமாக வாக்குறுதியைப் பற்றி விசாரணை செய்யப்படும். அல் குர் ஆன் (17:34)

எனவே உத்தம நபியின் உம்மத்தினராகிய நாம் நபி வழியைப் பின்பற்றி நாவைப் பேணுவோம்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

# கவிதைப் போட்டி இல. 156

## பரிசுக்குரிய கவிதை



### தினம் சுமப்பாள்

வானம் கறுப்ப தெப்போ?
வாணி குடம் வைப்ப தெப்போ?
கூனல் மனங்க ளெல்லாம்
கோணல் தவிர்த்தா லன்றி
வானம் பொழி யாது!
வாணி சுமை மாறாது!

நிஜந்திக்கா கனகசிங்கம்-
கல்லடி, மட்டக்களப்பு.

## இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### குதூகலம்

கிட்டாத நீரின்று
கிட்டிவிட்ட கிளுகிளுப்பில்
குட்டியின் வதனத்தில்
குதூகலிக்கும் மின்சாரம்!

தி.சுகந்தி- மட்/துறைநீலாவணை-05.

### எப்போது விடியும்?

நீருக்கு எங்கே போவது?-நாட்டின்
நீர்த்தேக்கம் எப்போ நிறைவது?
இருளும் எப்போ அகல்வது?-எங்கள்
இல்லம் எப்போ விடிவது?

ச.மகாலிங்கம்-வெலிமடை குருப்-வெலிமடை.

### வரட்சி

வாழ்க்கையும் பொய்த்தது,
வான் மழையும் பொய்த்தது!
வரிசையில் நின்று வாங்கிய தண்ணி
வதன மதி பூத்து போகின்றாள் கன்னி!

திரு.சா.காந்தன்- சென்றல் கேம்ப. (கி.மா)

### தண்ணீர் தட்டுப்பாடு

மின்வெட்டு கூடியதால்
மேல்மாடி நாறவிட்டோம்;
கால்மட்டும் கழுவுதற்கு
கருணையுடன் நீர் தருவாய்...!

சதா கணபதி- உடபுஸ்ஸலாவ.

### மின் வெட்டு

சும்மாட்டில் வைத்து சுமந்தொரு குடமும்..
கக்கத்து அணைப்பில் கவிழாது மறுகுடமும்-
சிதறாமல் நீர் அள்ளி சிரித்தே செல்கின்றாள்!
அத்தனை நீருமே அவளிரு குடங்களிலே..
அதனால் தான் நம் நாட்டில்
மணிக்கணக்கில் மின்வெட்டு...!

என்.சஹாப்தீன்- ஒட்டமாவடி.

### தாகம் தீர்ந்ததடி

மின் நிறுத்த
பரிதவிப்பில்
பருக நீ(ர்) இன்றி
நான் தவிக்க..
சும்மாடு சுமையோடு...
அம்மாடி-நீ
நிற்கும் போது-என்
தாகம் தீர்ந்ததடி!

சோ.ஸ்ரீதரன்- பொகவந்தலாவ.

### 'புதிய ஞானம்'

நான் வாழும் தலை நகரில்
நாட் கணக்காய் மின்சாரம்
தடைப்பட்டுப் போன பின்பு
தலையிலொன்று.. கையிலொன்றாய்
தண்ணீர் குடம் சுமக்கும் நிலை
வந்த பின்தான் உணருகின்றேன்..
வடக்கு மக்கள் படும் துயரை..!

ஏ.ஆர்.எம்.றிஸ்வான்- ஏறாவூர்-03.

### அகதி

கொஞ்சம் கைகொடுங்கள்
இறக்கிவைக்க...!
தலைச்சுமையை-அல்ல
மனச்சுமையை!

சுபா வரன்- கண்டி.

### மின்சாரச் சிரிப்போ....?

மின்னலடிக்கும் உன்
சிரிப்பினிலே..
மின்சாரம் பாயுது என்
நெஞ்சினிலே..
மின்வெட்டான
போதினிலும்....!

அமிர்தஷாந்தி மகாலிங்கசிவம்- மட்/கல்லடி.

### மேகக் குடம்!

கார் மேகக்
குவியலைத்
தலை மீது
சுமந்து
இலங்கைத்
திரு மாதா
இள நகை
புரிவதெப்போ(து)?

ரேணுகா றியாஸ்தீன்- ஏறாவூர்-02.

### மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்படமுடிந்தவர்கள்:

* கே. புவனலோஜினி, இறக்குவானை.
* வி. நித்தியஹாசன், நாரம்மல.
* ரோகினி தில்லைநாயகம் முறக்கொட்டாஞ்சேனை.
* செல்வி. சுந்தரம் சுபத்ரா, கோளாவில்-02.
* நா. மதிவதனம், ஊறுவத்தை.
* எம்.எம். முகம்மது லாகிர், சாய்ந்தமருது.
* எம்.எஸ். முபாரக், அட்டாளைச்சேனை-05.
* நேசன்குமார், அட்டன்.
* இளையதம்பி உதயகலா, முறக்கொட்டாஞ்சேனை.
* எம்.என். ரிஸ்வானுல்லமான், தெமட்டகொடை.
* என்.ரீ. அமீனுதீன், அக்கரைப்பற்று-06.
* ஐ. சக்காரியா, புல்மோட்டை.
* எம். ஸாலிஹ் அஸீம், புத்தளம்.
* எஸ். யுவராணி, பிட்டக்கந்த.
* சி. தயானந்தன், பேத்தாழை.
* ஜெ.எஃப். யேசுதாசன், அப்புத்தளை.
* அ. வேல்முத்து, உடப்பு.
* செல்வி. சிவாஜினி சதாசிவம், மாத்தளை.
* ரபீகா ஹசன் சாலிஹ், வாடியகொட.
* பர்ஷான் இஸ்மைல், கண்டி.
* சா. சர்வேஸ்வரன், ரொரன்ரோ,கனடா.
* இ. காண்டீபன், சவுதி அரேபியா.
* ஜெ. தங்கேஸ்வரன், அவுஸ்திரேலியா.
* கு. அருட்பிரகாசம், கண்டி.
* செல்வி. தமயந்தி சுப்பிரமணியம், திருக்கோணமலை.
* கே. அல்பிரட், நீர்கொழும்பு.
* வி. பர்சான், பாணந்துறை.
* எல். நிருத்திகா, குருநாகல்.
* வே. மனோகரன், கொழும்பு-11.



# கவிதைப் போட்டி இல-159



**கவனியுங்கள்** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி 06.07.1996

-முகவரி-
கவிதைப் போட்டி இல.159
தினமுரசு வாரமலர்
த.பெ. இல-1772
கொழும்பு.

### என்ன பார்வை?

அன்னக் குஞ்சென
அழகு நடையில்
தண்ணீர்க் குடத்தை(த்)
தலையில் வைத்து(ச்)
சின்ன விழிகள்
என்ன பார்க்குது.......?

மதிபாலா.பு.-
கொழும்பு-13.

### மழையெங்கே?

வெயில் கொட்டுது
நீர்நிலை வற்றுது
மின்சாரம் நிற்குது
குடம் சுமந்தெனக்கு
தலையும் வலிக்குது!

டிசேந்திரன் சர்மா,
குடிம்பிமலை,புலிபாய்ந்தகல்.

### பெறுமதி

சிரிப்பை மட்டும்
சிந்தி விட்டுப் போ கண்மணி!
மறந்தும் கூட
தண்ணீரை மட்டும் சிந்தி விடாதே!
இன்று,
தண்ணீர் சமமல்லவோ,
தங்கத்திற்கு.....?

மனசு- பிரியமுல்லை, நீர்கொழும்பு.

# வாசக(ர்) சாலை

கார்லோஸின் தொடர் ரொம்ப ரொம்பச் சூடுதான் போங்க சார்........! என்றாலும் கிறிஸ்டா கார்லோஸிடம் கடைசியாகச் சொன்ன அன்பு சொட்டும் வார்த்தைகள் கண்ணீரை வரவழைத்தன.

அஹமட், தெஹியங்கை, கண்டி.

**இனம் காட்டு**

தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமையில்லை என்பதைவிட, தமிழ் கட்சிகள் தங்களுக்குள் ஒன்றுபடுவதே அவசரமாகும். ஒன்றுபடுவது என்பது தங்கள் சொந்த அரசியல் நலன்களுக்காக என்று நினைத்துவிடுகின்றன தமிழ் கட்சிகள். அன்று முதல் இன்றுவரை ஒற்றுமைகள் மணல் கோட்டையானது அதனால்தான். 'முரசு' ஒற்றுமைக்கு எதிரானவர்களை இனம் காட்டவேண்டும்.

கே. விக்னேஸ்வரன், இலண்டன்.

**நாசம் யாருக்கு**

'கந்தன் கருணைப் படுகொலைகள்' அரசியல் தொடரில் என்னை உலுக்கியது. ஏன்தான் நமக்குள் நம்மையே அழிக்கும் வக்கிரம் தோன்றியதோ? விரல் கண்ணைக் குத்துவதுண்டு. அது தற்செயல். விரல் கண்ணையே நாசம் செய்யலாமா? சகோதர மோதல்களால் நாசம் யாருக்கு? இப்போதாவது சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

எம். திவாகரன், கொழும்பு-3.

**நிறுத்தவேண்டும்**

அரசியல் தொடரில் இயக்க மோதல் பற்றிய தகவல்கள் நெஞ்சில் தாங்கமுடியாத வேதனையை ஏற்படுத்துவதாக அமைந்தன. சேர, சோழ, பாண்டியர்கள் காலத்திலிருந்து தீராத பகையும், தேவையற்ற அழிவும் நம் காலத்திலும் தொடர்கிறது. நிறுத்திக்கொள்ளா விட்டால் அழிவு அனைவருக்கும்தான்.

செல்வி. காயத்திரி அருளானந்தம், பசறை.

அன்பின் தினமுரசிற்கு!
சினிமா, அரசியல், பலதரப்பட்ட தகவல்களுக்கும் நன்றி.

சினிமாவைப் பொறுத்தவரையிலும் பொதுவாக எல்லாப்பத்திரிகைகளும் இந்திய சினிமா பற்றியே தகவல் தருகின்றன. முரசு அவ்வாறு இல்லாமல் ஹொலிவுட் திரைப்படங்கள் பற்றிய தகவல் தந்தால் என்ன? இருவாரங்களுக்கு ஒருமுறையாவது கொஞ்ச இடமாவது ஒதுக்கினால் என்ன? தமிழ்படத்திற்கு அடுத்ததாக ஆங்கிலப்படத்தைத்தான் நம்மவர்கள் பார்க்கிறார்கள்.

பிரபாகரன், கொழும்பு-12.

இலக்கிய நயத்தை நயம்பட அழகாகத் தரும் ரசிகன் எப்போது முரசு ரசிகர்களுக்கு முகவரி காட்டுவாரோ?

செல்வி. சுபாஷினி வேலாயுதம், டொரிங்டன் எவன்யு.

கார்லோஸ் புரிந்த அட்டகாசங்களைப் பார்க்கையில் எப்போது சாவான் என்றிருக்கிறது. இப்படிப்பட்ட பயங்கரப் பேர் வழிகள் நம்மிடையே நடமாடிக்கொண்டு தானே இருப்பார்கள். அவர்களை எப்படி இனங் காணுவது? இராமாயணம் "தினமுரசி"ல் தான் நாங்கள் வாசித்தறிகிறோம். ஆரம்பதில் அரைகுறையாகத்தான் அறிந்திருந்தோம். நன்றி தினமுரசு உனக்கு.

இப்திகார் பர்வீன், பர்ஸான்.மடவளை பஸார்.

என் அன்பிற்கினிய முரசே!
உனது அத்தனை அம்சங்களும் சூப்பர். அதிலும் என்னைக் கவர்ந்த ஆக்கங்கள். காதிலை பூ கந்தசாமி, சிறுகதைகள், தொடர்கதை நீ நீயா. படு ஜோர்.

ஆர். வசந்தி, கண்ணகி புரம், உவர்மலை.



படிப்பகம்

www.padippakam.com

# புலிகள்–கலைஞர் மத்தியில் நல்லுறவுக்கு முயற்சி ?

## புலிகளின் இலண்டன் ஆதரவாளர்களுக்கு இந்தியா விசா மறுப்பு!

**தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியைச் சந்தித்து புலிகள் இயக்கம் சார்பாக பேச்சு நடத்த இலண்டனில் உள்ள தமிழர் தகவல் நிலையம் ஊடாக பலத்த முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. "போராளி அமைப்புக்களுக்கு ஆதரவு இல்லை; இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுப்போம்" என்று கலைஞர் தொடர்ந்து கூறிவருகிறார்.**

தமிழக முதலமைச்சராக கலைஞர் கருணாநிதி பொறுப்பேற்றவுடன் அவரை சந்திக்க இலண்டணில் உள்ள புலிகள் இயக்கத்தினர் முயற்சி செய்தனர்.

தமிழக முதல்வர் தரப்பில் இருந்து சாதகமான பதில் கிடைக்காமையால் அந்த முயற்சி தடங்கலானது.

அதன்பின்னர் இலண்டனில் உள்ள 'தமிழர் தகவல் நிலையம்' கலைஞருக்கும், புலிகளுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது.

புலிகள் இயக்க தலைமைப்பீடத்தின் அனுமதியுடன்தான் 'தமிழர் தகவல் நிலையம்' தனது முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இலண்டனில் புலிகள் அமைப்பின் தீவிர ஆதரவாளரான டாக்டர் சச்சிதானந்தம், மற்றும் டாக்டர் சோமசுந்தரம், கதிரேசன், ரட்ணசிங்கம் உட்பட ஒரு குழுவினராக சென்று தமிழக முதல்வரைச் சந்திக்க திட்டமிட்டனர்.

தமிழகம் செல்வதற்காக இலண்டனில் உள்ள இந்தியத் தூதரகத்தில் விசா கேட்டு அவர்கள் விண்ணப்பித்தனர். விசா வழங்க இந்தியத் தூதரகம் மறுத்துவிட்டது.

அதனால் தமிழக முதல்வரை நேரில் சந்திக்க அவர்களால் முடியாமல் போய் விட்டது.

### சென்னையிலும் முயற்சி

சென்னையில் காந்தளகம் என்னும் புத்தக வெளியீட்டு நிறுவனம் ஒன்று இருக்கிறது. இலங்கைத் தமிழரான சச்சிதானந்தம் என்பவருக்கு அந்த நிறுவனம் சொந்தமானது.

சென்னையில் தங்கியுள்ள சச்சிதானந்தம் மூலமாக தமிழக முதல்வரோடு தொடர்பு கொள்ளவும் இலண்டனில் உள்ள 'தமிழர் தகவல் நிலையம்' முயற்சி செய்துவருகிறது.

'காந்தளகம்' சச்சிதானந்தம் தமிழக முதல்வரைச் சந்திக்க மேற்கொண்ட முயற்சிகள் இதுவரை பலனளிக்கவில்லை. தொடர்ந்தும் அவர் முயற்சிகள் செய்துவருகிறார்.

புலிகளுக்கு ஆதரவு இல்லை என்று கலைஞர் திரும்பத் திரும்ப சொல்லிவருகிறார். குறைந்தபட்சம் அவ்வாறு கூறுவதை என்றாலும் அவர் நிறுத்திக்கொள்ளவேண்டும் என்பதுதான் புலிகள் அமைப்பினரதும், புலிகளின் ஆதரவாளர்களதும் விருப்பமாகும்.

புலிகள் உள்ளிட்ட எந்தவொரு போராளி அமைப்பையும் ஆதரிப்பதாக தமது நடவடிக்கைகள் இருக்காது. அதே சமயம் இலங்கைத் தமிழர்களது துயர் துடைக்கப் பாடுபடுவோம் என்பதுதான் கலைஞர் கருணாநிதியின் உறுதியான நிலைப்பாடாக இருக்கிறது.

### உத்தரவில் கையொப்பம்

சம்பத்தில் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியா சென்றிருந்தார். இந்திய வெளிநாட்டமைச்சரையும் சந்தித்து உரையாடினார்.

அதனையடுத்தே இலங்கை தமிழ் மாணவர்களுக்கு கல்வி மற்றும் உயர்கல்வி கற்க அனுமதி வழங்கும் உத்தரவில் கலைஞர் கருணாநிதி கையொப்பம் இட்டார்.

இலங்கைத் தமிழர் பிரச்சனை, மற்றும் இலங்கைத் தமிழர்கள் மீதான தமது அக்கறையை யாரும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை தமிழக அரசு வெளிப்படுத்தும் நடவடிக்கையே அது என்று சொல்லப்படுகிறது.

இலங்கை வெளிநாட்டமைச்சரின் விஜயம் இலங்கைத் தமிழர் தொடர்பான தி.மு.க. மாநில அரசின் நிலைப்பாட்டில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதை வெளிப்படுத்தவே, கல்வி, உயர்கல்விக்கு அனுமதி வழங்கும் உத்தரவை உடனடியாக தயார்படுத்துமாறு கூறி, அதில் கையொப்பமிட்டார் தமிழக முதல்வர் என்று தி.மு.க. உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தந்தை செல்வநாயகத்தின புத்திரரான சந்திரஹாசன் தற்போது சென்னையில் இருக்கிறார். 'ஈழ அகதிகள் மறுவாழ்வுக் கழகம்' என்ற அமைப்பை நடத்திவருகிறார்.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு கல்வி வாய்ப்பை அனுமதித்ததுக்கு திரு. சந்திர ஹாசன் ஈழ அகதிகள் மறுவாழ்வுக் கழகம் சார்பாக நன்றி தெரிவித்துள்ளார்.

யுத்தம் காரணமாக இலங்கையின் வடக்கு-கிழக்கில் பொருளாதாரம், கல்வி என்பன மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் தமிழக அரசு வழங்கியுள்ள உத்தரவு வரவேற்கப்படவேண்டியதாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## அரசியல் தீர்வுக்கு புதிய யோசனை

## கூட்டணி வழங்கிய இரகசிய ஒப்புதல்!

வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பாக அரசாங்கத்திற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையே இரகசிய இணக்கம் ஒன்று ஏற்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

வடக்கையும், திருமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தையும் இணைத்து ஒரே மாகாணமாக்குவது. அம்பாறை தொகுதியை தனியாக எடுத்துவிட்டு, அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்களுக்கு தனியான ஒரு நிர்வாக அலகை ஏற்படுத்துவது என்ற யோசனைக்கு கூட்டணி தனது உடன்பாட்டை தெரிவித்துள்ளது.

சம்பத்தில் ஜனாதிபதி சந்திரிக்கா, நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரை கூட்டணி தனியாகச் சந்தித்திருந்தது. அச் சந்திப்பு தொடர்பாக வெளியே கருத்துக்கூற கூட்டணி வட்டாரங்கள் மறுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஏனைய தமிழ் கட்சிகளை குறிப்பிட்ட யோசனைக்கு அரசாங்கம் உடன்பட்டச் செய்யுமானால், தமது ஆதரவைப் பகிரங்கமாகத் தெரிவிக்க தயார் என்று கூட்டணி சார்பாக அரசாங்கத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐந்து தமிழ் கட்சிகளான புளொட், ஈரோஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகள் வடக்கு-கிழக்கு மாகாணம் தற்போது எப்படி இருக்கிறதோ அவ்வாறுதான் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகின்றன.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு காணும் முயற்சிகள் பயன்தராது என்று கூட்டணி தலைவர் மு.சிவசிதம்பரம் கருத்துக் கொண்டிருக்கிறார்.

கூட்டணியின் முக்கிய பிரமுகரான நீலன் திருச்செல்வம் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் முறையாக இருக்குமானால் விட்டுக்கொடுக்கலாம் என்று கருதுகிறார் என்று கூறப்படுகிறது.

## முன்னணியின் கோரிக்கை மீது நடவடிக்கை

**1000** குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகரை நியமிப்பது சம்பந்தமாக மலையக மக்கள் முன்னணி முன் வைத்த கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதற்கிணங்க இதன் முதல் கட்ட வேலைகள் துவங்கியுள்ளன.

1000 குடும்பங்களைக் கொண்ட கிராமசேவகர் பிரிவு ஒவ்வொன்றையும் அடையாளம் கண்டு அதன் விபரங்களை தனது அமைச்சுக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு சகல தோட்ட நிர்வாகங்களையும் பெருந்தோட்டத் துறை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு பணித்துள்ளது.

தோட்டப் பகுதிகளில் தமிழ் கிராமசேவகர்கள் நியமிக்கப்படுவது தொடர்பாக தாம் முன்வைத்த கோரிக்கைகள் பற்றி மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தோட்ட வீடமைப்பு பொது வசதிகள் பிரதி அமைச்சருமான பெ. சந்திரசேகரன் பெருந்தோட்டத் துறை, பொது நிர்வாக பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரை சம்பத்தில் சந்தித்தபோது மேற்படி தகவல்களை தெரிவித்த அமைச்சர், இப்பதவிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரும் வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படுமென்றும் உறுதி கூறியதாக பிரதி அமைச்சர் சந்திரசேகரன் மேலும் தெரிவித்தார்.

## யாழ் கைதுகள்! ஈ.பி.டி.பி. கண்டனம்!

**யா**ழ்ப்பாண குடாநாட்டில் கைது செய்யப்படும் இளைஞர்களும், யுவதிகளும் கொழும்புக்கு கொண்டுவரப்படுவது தொடர்பாக ஈ.பி.டி.பி. ஜனாதிபதியிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பா.உ. இது தொடர்பாக ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

"யாழ்ப்பாணத்தை சமாதான நகரமாக்கப் போவதாக தாங்கள் அறிவித்துள்ளீர்கள். யாழ் குடாநாட்டு மக்களும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். சமாதானமானது கௌரவமான, நிம்மதியான வாழ்க்கையை உத்தரவாதம் செய்வதாக இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இளைஞர்களும், யுவதிகளும் கைதுசெய்யப்பட்டு ..கொழும்புக்கு கொண்டுவரப்பட்டு சிறைவைக்கப்படுகின்றனர்.

கைதுசெய்யப்படுவோர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்படுவதும், அல்லது நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படுவதும் அவசியமாகும். விசாரணையின்றி தடுத்து வைக்கப்படும் நடைமுறையானது மக்களிடம் நம்பிக்கையீனங்களையே உருவாக்கும்.

அதுமட்டுமல்லாமல், கைது செய்யப்படும் இளைஞர்களும் யுவதிகளும் கொழும்புக்கு கொண்டுவரப்படுவதால் அவர்களது பெற்றோர்களும், உறவினர்களும் அவர்களை பார்வையிட வருவதற்கும் பலத்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது." இவ்வாறு தனது கடிதத்தில் டக்ளஸ் தேவானந்தா பா.உ. சுட்டிக்காட்டியுள்ளார்.

## அத்தியாவசிய சேவைகள் மட்டும் போதும்

## அரச அதிகாரிகளுக்கு புலிகள் உத்தரவு!

**யா**ழ்-குடாநாட்டில் உள்ள அரசாங்க அதிபர் உள்ளிட்ட சிவில் அதிகாரிகளுக்கு புலிகள் ஒரு செய்தி அனுப்பியுள்ளனர்.

யாழ்-குடாநாட்டில் உள்ள மக்களுக்கு அத்தியாவசிய சேவைகள் வழங்குவதில் மட்டும் ஈடுபடுங்கள். புனரமைப்பு வேலைகள், மற்றும் பாரிய திட்டங்கள் எவற்றிலும் ஈடுபடவேண்டாம் என்று புலிகள் தமது செய்தியில் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் உள்ள சிவில் நிர்வாக அதிகாரிகள் சிலரை தாம் நேரில் சந்திக்க விரும்புவதாகவும் புலிகள் தகவல் அனுப்பி வருவதாகக் கூறப்படுகிறது.

யாழ்-குடாநாட்டில் பாரிய புனரமைப்பு வேலைகள் எதனையும் மேற்கொள்ளவிடாமல் புலிகள் தடுக்கவே செய்வர். யாழ்-குடாநாட்டில் சகஜ நிலை திரும்பிவிட்டதாக அரசாங்கம் பிரசாரம் செய்யும் வழிமுறைகளை தடுப்பதே புலிகளின் நோக்கம் என்று தெரிகிறது.

## மட்டக்களப்பில் சீர்குலைந்து வரும் நிர்வாகம்

## அதிகாரிகளின் அசமந்தப் போக்கே பிரதான காரணம்!

**த**ற்சமயம் மட்டக்களப்பின் சகல நிருவாகப் பிரிவுகளிலும் பொது வசதிகள் சீர்குலைந்துள்ளன. போக்கு வரத்து, தொலைபேசி, தபால் தந்தி, மின்சாரம், குடிநீர், வைத்திய சேவை, கல்வி என்பனவே இச்சீர்குலைவு நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

இந்த அவல நிலைக்கு அதிகாரிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள உட்பூசல்களும், அசமந்தப்போக்குமே பிரதான காரணங்களாக உள்ளன.

முற்றிலும் குழாய்நீர் விநியோகத்தை நம்பியிருக்கும் மட்டக்களப்பு நகர்ப்பகுதி மக்களுக்கு காலையும் மாலையும் அரை மணி நேர தண்ணீர் விநியோகம் கிடைக்கிறது. எனினும் விநியோகிக்கப்படும் நீர் மிகக் குறைந்ததாகவே உள்ளது. நகருக்குள் இருக்கும் ஒரு சில கிணறுகளில் மக்கள் வரிசை மிக நீண்டதாக உள்ளது. நீரைத் தேடி மக்கள் அலைகிறார்கள். போதியளவு நீரை விநியோகிப்பதற்கு ஜெனரேற்றர் பழுது எனக்காரணம் கூறுகிறார்கள். ஆனால் நீண்டகாலமாகவுள்ள இக்குறையை நிவர்த்தி செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

போக்குவரத்துச் சேவைக்குப் பெரும்பாலும் தனியார் வாகனங்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. இ.போ.ச.டிப்போவில் ஏற்பட்டுள்ள உட்பூசல்களும் போதாக்குறைக்குப் படையினரதும் புலிகளினதும் நடவடிக்கைகளும் சீரான பஸ் சேவைக்குத் தடையாகவே உள்ளன.

தொலைபேசிச் சேவையை ஒரு வீதம் கூட நம்பியிருக்க முடியாதளவிற்கு முற்றாகச் சீர்குலைந்துள்ளது. அங்குள்ள அதிகாரிகளின் அசமந்தப்போக்கே அதற்கு பிரதான காரணமாகும். தொலைத்தொடர்பு பிரதி அமைச்சர் கூட தொலைபேசிச் சேவை மட்டக்களப்பில் சீர் குலைந்துள்ளதை ஏற்றுக் கொண்டுள்ளார். 2ம் தொடரிலிருந்து 4ம் தொடர் தொலைபேசி இலக்கத்துடனோ வெளியூர்களுக்கோ முற்றாகத் தொடர்பு கொள்ள முடியாத அவல நிலையுள்ளது. பிரதான நிலையத்திலிருந்து தந்திகள் தபால் மூலமே அனுப்பப்படுகிறது. இத்தபாலகத்தில் கடமையாற்றும் பரிச்சயமற்ற அலுவலர்களின் நேர வீணடிப்பு பெரும் தொல்லையாக உள்ளது.

மட்டக்களப்பில் அளவுக்கு மிஞ்சிய நேரமின்வெட்டு விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்தில் மேற்கொள்ளப்படுகிறது. பல பகுதிகளில் நாளெல்லாம் மின்சாரம் தடைப்படுத்தப்படுவதுமுண்டு. இதனிடையே மட்டக்களப்பின் பல வீதிகளில் தெருமின் விளக்குள் பகலிலும் கவனிப்பாரின்றி எரிந்த வண்ணமுள்ளன.

## மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்துக்கு முன்னெச்சரிக்கை!

இம்மாத(ஜூன்) சம்பளத்துடன் தமக்குத் தரவேண்டிய ஆபத்து உக்குவிப்புக் கொடுப்பனவு வழங்காவிடில் அடையாள வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவதாக மட்டக்களப்பு மாவட்ட ஆசிரியர் நலன் புரிச்சங்கம் தெரிவித்துள்ளது.

பொது நிருவாக அமைச்சின் 29/95 ஆம் இலக்கம் 22.09.95ந் திகதிய ஆபத்து ஊக்குவிப்புக் கொடுப்பனவுச் சுற்று நிருபத்தின்படி சகல திணைக்களங்களிலுமுள்ள அனைத்துத் தரத்திலான ஊழியர்களுக்கும் பாகுபாடின்றி இக் கொடுப்பனவு வழங்கப்பட்டுப் பல மாதங்களாகின்றன. இதே போல் மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் பணியாற்றும் பணிப்பாளர்கள், எழுதுவினைஞர்கள் உட்பட சகலரும் இக் கொடுப்பனவை நிலுவையுடன் பெற்றுப் பலமாதங்கள் கடந்து விட்டன. எனினும் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றும் எந்தவொரு அதிபர், ஆசிரியருக்கும் இன்னமும் இக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

எனவே ஜூன் மாத சம்பளத்துடன் இக்கொடுப்பனவை கல்வி திணைக்களம் தமக்கு வழங்காது இழுத்தடிக்கும் பட்சத்தில் எதிர்வரும் 01.07.96 அன்று மட்டக்களப்பு மாவட்ட அதிபர்களும், ஆசிரியர்களும் ஒரு நாள் சுகவீன லீவில் நின்று தமது எதிர்ப்பைத் தெரிவிக்கப்போவதாக மட்டக்களப்பு மாவட்ட ஆசிரியர் நலன்புரிச் சங்கம் கல்வித் திணைக்களத்திற்கு முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது.

## 5 வருடங்களின் பின் பரீட்சைச் சான்றிதழ்!

(ஏறாவூர் நிருபர்)

கடந்த 1991ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சா/த பரீட்சை முடிவின் சான்றிதழ்கள் 1996ம் ஆண்டு ஜூன் மாதம் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஐந்து வருடங்களின்பின்னர் இச் சான்றிதழ் அனுப்பிவைக்கப்பட்டிருப்பது கண்டு பரீட்சார்த்திகள் ஆச்சரியப்படுகின்றனர். இப்பொழுது அனுப்பி வைக்கப்பட்டுள்ள சான்றிதழில் பரீட்சை ஆணையாளர் 1991.12.19 என்ற திகதியிட்டே கையொப்பமிட்டுள்ளார். பரீட்சைத் திணைக்களத்தின் நத்தைவேக நடவடிக்கைகளுக்கு அரை தசாப்தகாலம் செல்கிறது.

## திருமலை மக்களுக்கு புலிகளின் பிரசுரம்

'திருமலை வாழ் தமிழ் மக்களுக்கு' என்ற தலைப்பிட்டு புலிகள் அமைப்பினரால் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

"திருமலைபூமி தமிழர்களுக்கு சொந்தமாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்பட்டது. 04 பற்றுக்களைக் கொண்டிருந்த திருமலை மாவட்டம் இன்று 11 பற்றுக்களாகி, அதிலும் 03 மட்டுமே தமிழர்களுக்கு என்றாகிவிட்டது.

காலம் காலமாய் ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த ஆக்கிரமிப்பை உணராமல் உறங்கிக் கிடந்தால், நாளை உங்கள் சந்ததிக்கு திருமலையில் இடம் இருக்கப்போவதில்லை," என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சலுகைகளுக்காக விடுதலைப் போராட்டத்தை காட்டிக்கொடுக்கும் செயல்களில் ஈடுபடவேண்டாம் என்றும் புலிகள் தமது பிரசுரத்தில் கூறியுள்ளனர்.

## அதிகாரப்பரவலாக்கல் அலகுகள் எவை?

## அரசாங்கத்திடம் கேட்கிறார் ரணில்

**வ**ட-கிழக்குக்கான அதிகாரப் பரவலாக்கலுக்குரிய அலகுகள் எவை என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்தவில்லை. ஆனால் அரசாங்கம் தெரிவித்துள்ள யோசனைகளையொட்டி ஐக்கிய தேசியக்கட்சி தனது கருத்தைத் தெரிவிக்கவில்லையே என்று குறை கூறப்படுகிறது. அரசாங்கம் திட்டவட்டமாக அதிகாரப் பகிர்வு பற்றிய முழு விவரங்களையும் வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் ஐ.தே.கட்சி தனது கருத்தையும் வெளியிட வசதியாக இருக்கும். இவ்வாறு அண்மையில் நடைபெற்ற ஐ.தே.கட்சி பாராளுமன்றக் குழுக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் திரு.ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

அரசியல் யாப்பின் 13 வது திருத்தம் கொண்டுவரப்பட்டபோது சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் ஒரு முடிவு கிடைக்கும் வரை வட-கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்த நிர்வாக அலகாக இருக்கும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி அதிலிருந்து இதுவரை மாறுபடவில்லை, என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொதுஜன முன்னணி நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையினை ஒழித்துக்கட்டப் போவதாக மக்களிடம் கூறியது. ஆனால் இதுவரை எதுவிதமான நடவடிக்கையும் அது தொடர்பாக எடுக்கவில்லை. தான் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற வேண்டும் என்று ஜனாதிபதி சிந்தித்துப்பார்ப்பதாகவே தெரியவில்லை என்றார் அவர்.

## அடுத்த தேர்தலில் அணி மாறலாம்!

## சிறிமணி அத்துலத்முதலி தெரிவிப்பு

"**அ**டுத்து வரும் தேர்தலில் எந்தக்கட்சியைச் சார்ந்து தேர்தலில் நிற்பது என்பதை இப்போது கூற முடியாது. திறந்த மனதுடன் தான் அதனை அணுகுவோம்" என்று ஜனநாயக ஐக்கிய தேசிய லலித் முன்னணியின் தலைவியும் சுற்றுச்சூழல், போக்குவரத்து மற்றும் மகளிர் விவகார அமைச்சருமான சிறிமணி அத்துலத் முதலி தெரிவித்தார்

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியின்போதே இதனை அவர் கூறினார். அடுத்த தேர்தலின்போது, மக்களின் அபிலாசைகளை எந்த அரசியற்கட்சி தீர்க்கக்கூடும் என்று DUNLF கருதுகிறதோ அக்கட்சியையே சார்ந்து நிற்போம் என்றும் அமைச்சர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்தார், ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் சேர்ந்து போகும் நிலையினையும் அவர் முற்றாக நிராகரிக்கவில்லை.

"தவறானவை என்று எவற்றைக் கண்டோமோ அவற்றைத் திருத்தும் நோக்குடனேயே பொதுஜன முன்னணி அரசாங்கத்தில் இணைந்து உதவினோம். கட்சி விட்டுக்கட்சி தாவுவதில் எனக்கு நம்பிக்கையில்லை, ஆனால் தேர்தல் காலத்தில் அரசியல் நிலபரங்களை அனுசரித்து அக்காலகட்டத்தில் எக்கட்சி சிறந்ததென அனுமானித்து அதன்படி ஆதரவளித்தோம். இந்த அடிப்படையிலேயே எமது பணி நடை பெறுகிறது." என்றார் அவர்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்துடன் தொடர்ந்து மோதல் ஈடுபட்டுவருவதாக பரவலாக நம்பப்படுவது தொடர்பாக அமைச்சரிடம் வினவியபோது, அவர், பொதுஜன முன்னணி போன்ற அமைப்பில் பலதரப்பட்ட கருத்துக்களை உடைய பலகட்சிகள் இருப்பதனால், அவற்றின் கருத்துக்களுடன் மாறுபடும் நிலமைகள் ஏற்படத்தான் செய்யும். இவற்றைச் சமாளித்துக் கொண்டு போவது அரசாங்கத்தின் செயற்பாட்டில் தான் தங்கியிருக்கிறது" என்றார்.



படிப்பகம்

www.padippakam.com

# இதமான இன்னிசை விருந்து
## 'தமிழ் வேதம்' ஒலிப்பேழை செவிக்கு உணவு

இலங்கையில் பல்வேறு பல்கலைக் கழகங்களிலும், இவைபோன்ற உயர் கல்வி நிறுவனங்களிலும் பயிலும் மாணவர்கள் ஒன்றிணைந்து ஏற்படுத்திய ஓர் அமைப்பு 'வித்திய கலாலயா.' இவ்வமைப்பின் முதற்பணியாக தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ் ஆகியவற்றிலிருந்து 20 திருமுறைகளைப் பொறுக்கி எடுத்து தெவிட்டாத இன்சுவை விருந்தாக- 'தமிழ் வேதம்' என்று தலைப்பிட்டு ஒலிப்பேழையில் பதிந்து வெளியிட்டிருக்கிறார்கள்.




தமிழ்த் திருமுறைகளுக்கே உரிய பண் இசை மரபு தவறாமல்-மேலதிக ஆர்ப்பாட்டமோ, சொற்சிதைவோ, பொருள் மாறுபாடோ இல்லாமல், 'சங்கீத சாகரம்' யோகானந்தம் யாதவன் திருப்பதிகங்களைப் பாடியிருக்கிறார்.

நெறியாள்கையைக் கையேற்ற பி.கண்ணன், புல்லாங்குழலிசையையும் வயலினிசையையும் ஒரே சமயத்தில் மாறி மாறி வழங்கிய முறை பாராட்டுக்குரியதே. பாடல் தொடங்குவதற்கு முன்னர் இராகத்தை புல்லாங்குழலில் இசைத்து, பாடல் தொடங்கியதும் பின்னணியில் வயலின் இசை வழங்கிய சீர்மை மிகச் சிறப்பாகவே அமைந்திருக்கிறது.

ஞானசம்பந்தரும் அப்பரும் சுந்தரும் மணிவாசகப் பெருமானும் அருணகிரிநாதரும் அழகு தமிழில் அருளிய திருமுறைகளை அவற்றுக்குரிய பண் இசை மரபுகளிலிருந்து மாறுபட்டு, உரிய இராகங்களில் பாடாமல்- மெட்டுக்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதற்காக-சொற்களைச் சிதைத்தும், உரிய பாவத்தைக் கெடுத்தும் வெறுமனே பாடுவோரைத்தான் அனேகமாகப் பார்த்திருக்கிறோம். தமிழ் வேதத்தில் இக்குறைபாடுகள் காணப்படவில்லை. யாதவன் தெளிவான சாரீரத்தில் பதிகங்களைப் பாடியிருக்கிறார்.

துள்ளல் இசையில் கருத்துப் புரியாத பாடல்களைக் கேட்டுப் புளித்தும் போன காதுகளுக்கு தமிழ்வேதம் இதமான இன்னிசை விருந்தாக அமைகிறது.

# நடத்துனராகும் சாரதிகளும் அதிகாரிகளும்

(மன்னார் நிருபர்)

மன்னார் இ.போ.ச. டிப்போவில் கடமை புரியும் சாரதிகளும், அதிகாரிகளும் பஸ் நடத்துனராக பணி புரிய வேண்டிய அவல நிலையிலுள்ளனர்.

இங்கு சாரதிகளும், அதிகாரிகளும் அதிகளவில் இருப்பதாக எண்ணிவிட வேண்டாம். நடத்துனர்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இதற்கான பிரதான காரணமாகும்.

இந்த பற்றாக்குறையினால் சில வேளைகளில் நடத்துனர்களின்றி முக்கியமான இடங்களுக்குரிய பஸ் சேவைகள் திடீரென ரத்துச் செய்யப்படுகின்றன. இதனால் ஆசிரியர்களும் ஏனைய அரச ஊழியர்களும் தம் கடமைக்கு உரிய வேளையில் சமூகம் கொடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

இப் பகுதியில் சாலைப் பரிசோதனைகள் படு சுறு சுறுப்பாக நடைபெறுவதால், அதிக சன நெரிசல் உள்ள பஸ்களில் கடமை புரியும் இந்த 'திடீர் நடத்துனர்கள்' அவசரமாக டிக்கட் வழங்க முடியாமல் திணறுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதனால் கூடுதலான நடத்துனர்கள் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவது அவசியம் என சுட்டிக்காட்டப்படுகிறது. இந்நிலை தொடருமானால் சாலை முகாமையாளரும் டிக்கட் புத்தகம் ஏந்த வேண்டிய நிலை ஏற்படலாம்.

# மன்னாரில் சீரான தொலைத் தொடர்பு

(மன்னார் நிருபர்)

இது காலவரையிலும் மன்னாருக்கும் வெளியிடங்களுக்குமிடையில் சீரற்றுக் காணப்பட்ட தொலைத் தொடர்பு சேவை தற்போது சீரடைந்துள்ளது.

இதனால் பாவனையாளர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். முன்னர் வெளியிடங்களுக்கு அழைப்புகள் பெற மணிக்கணக்கில் தாமதிக்க வேண்டியிருந்தது. தற்போது விரைவாக அழைப்புகள் பெறக் கூடியதாகவுள்ளது.

மன்னார் ரெலிகொம் நிறுவனம் சுறுசுறுப்பாக இயங்கிவருவதே இதற்கான காரணமாகும். தற்போது இங்கு வேறிடத்தில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதனால் ஒரே நேரத்தில் 15 அழைப்புகள் உள்ளே வரவும், வெளியே செல்லவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் தீபகற்பத்துக்கான தொலைபேசி இணைப்புகளும் இங்கிருந்தே வழங்கப்பட்டுள்ளன.

இக்கட்டான வேளையிலும் சிறப்பாக இயங்கிவரும் மன்னார் ரெலிகொம்மின் பணிப்பாளராக திரு.பீ.எப்.பவானுராஜ் கடமை புரிகிறார்.

# தரம் உயர்த்தினால் என்ன?

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் அஞ்சல் அலுவலகத்தின் கீழ் இயங்கி வரும், கொத்தாந்தீவு உப அஞ்சல் அலுவலகம் 7 கிராம சேவகர் பிரிவுகளுக்கு தபால் விநியோகம் செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இவ் உப அஞ்சல் அலுவலகத்திற்கு அதிக வேலைகள் இருப்பதனால் தபால் தந்தித் தொலைத் தொடர்புகள் அமைச்சர் கௌரவ மங்கள சமரவீர அவர்களுக்கு மகஜர் கூட அனுப்பப்பட்டது- இவ் உப அஞ்சல் அலுவலகத்தை "அஞ்சல்" அலுவலகமாக தரம் உயர்த்தி தரும்படி.. ஆனால் இன்று வரை எதுவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக இல்லை. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கும்படி முரசு மூலம் மக்களின் சார்பாக வேண்டுகிறேன்.

கொத்தாந்தீவு-யூனூத்.

# வாயில் வாளோடு தோன்றும் பெண்?
## ரூபவாகினியில் வணக்கம் சொல்லும் வனிதாமணி

ரூபவாகினி தொலைக்காட்சியில் தமிழ் பிரிவில் தரமான நிகழ்ச்சிகளுக்கு மட்டுமல்ல, தரமான அறிவிப்பாளர்களுக்கும் பஞ்சம்[illegible].

தினமும் இரவு 9.30 மணிக்கு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் முடிவடையும்[illegible] மும்மொழிகளிலும் வணக்கம் சொல்லு[illegible]கள். தமிழிலும் ஒரு பெண்மணி தோன்றி வணக்கம் சொல்கிறார். அவரை எங்கிருந்து- எதற்காக தேடிப்பிடித்தார்களோ? சகிக்கவேயில்லை. தமிழ் கொலைக்காக உச்சபட்ச தண்டனை வழங்கலாம்.

தெளிவாகவும், அழகாகவும் தமிழை உச்சரிக்கக்கூடிய பலர் இருந்தும், வாயில் வாளோடு தோன்றும் சிலருக்கு எப்படி [illegible]ர்ந்து வாய்ப்புக் கிடைக்கிறது? மர்மம் என்[illegible]? தமிழ் பிரிவினர் இவற்றையெல்லாம் கவனிப்பதே இல்லையா? அவர்களுக்கு தங்கள் பதவி பற்றிய கவலை மட்டும்தானா?

பாவம், அந்தப் பெண்மணி. திறமையில்லாமல் அறிவிப்பாளராக எத்தனை தூரம் கஷ்டப்பட்டிருப்பாரோ? நகையும் அணிந்து, தினம் ஒரு சேலையுடன் காட்சிதருகிறாரே தவிர, தமிழிலும் தேர்ச்சி பெற்றால் நம் செவியிலும் தேன் பாயுமல்லவா? அம்மணி கவனியுங்கள்!

# பதிப்பக திணைக்களம்மீது புகார்

(திருமலை நிருபர்)

சோலைவரிப் பதிவுப் பேரேடுகள் இன்றி பிரதேச சபைகளின் அலுவல்கள் பாதிப்படைந்துள்ளன. திருக்கோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசசபை, மூதூர்ப் பிரதேசசபை ஆகியன ஜனவரி மாதம் தொடக்கப் பேரேடுகள் இன்றி பதிவேடுகளின் பின்பக்கம் குறிப்புகள் எழுதிக் காலத்தை தள்ளுவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந் நிலைமைக்கு வடக்கு-கிழக்கு மகாணப் பதிப்பகத் திணைக்களமே காரணம் என்று சொல்லப்படுகிறது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மூதூர் பிரதேச சபையும் அக்டோபர் மாதத்தில் திருக்கோணமலை பிரதேசசபையும் தத்தம் "ஓடர்களை" பதிப்பகத்திணைக்களத்துக்கு வழங்கியிருந்தும் இன்றுவரை பேரேடுகள் வந்து சேரவில்லை. பதிப்பகத் திணைக்களத்திலிருந்து கிடைத்த தகவல்களின் படி இப்போதைக்கு இவை வந்து சேரப் போவதும் இல்லை எனத் தெரிய வருகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணசபையின் சுற்று நிருபம் ஒன்றின்படி அரசதிணைக்களங்களதும், அரசு சார்ந்த அமைப்புகளதும் அச்சு வேலைகள் யாவும் பதிப்பகத் திணைக்களத்திலேயே செய்யப்பட வேண்டியவை என்பதால் எழுந்த சிக்கலே இது என்றார் பிரதேசசபை அதிகாரி ஒருவர்.

# வரம்புமீறும் விற்பனையாளர்கள்

கல்முனை மிருக கொல் களம் (மடுவம்) என்று அழைக்கப்படும் இடத்தில் உணவுக்காக ஆடு, மாடுகள் அறுக்கப்பட்டு விற்பனைக்காக எடுத்துச் செல்லப்படுகின்றன.

ஆனால் அவற்றை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் இதன் இறைச்சிகளை எடுத்து விட்டு எலும்புகளையும் இதர கழிவுப் பொருட்களையும் இம் மிருக கொல்களம் அமைந்துள்ள பகுதியில் வீசிவிட்டு செல்கின்றனர்.

இதனால் இப்பகுதியில் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுவதோடு சுகாதார சீர்கேடும் ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், இம்மடுவத்திற்கு எதிரே அமைந்துள்ள முஸ்லிம்களின் வழிபாட்டுத் தலத்திற்கும் இது பெரும் இடையூறாக உள்ளது.

எனவே இந்நிலை நீடிக்காமல் இத்தோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விற்பனையாளர்கள் மீது விழிப்பாக இருந்து இறைச்சிக்காக வெட்டப்படும் கால் நடைகளின் கழிவுப் பொருட்களை சேமிப்பதற்கு சிறந்ததொரு வழி முறையை செய்து கொடுக்க வேண்டும்.

எம்.சி.கலீல், ஹனிபா வீதி, கல்முனை-05.

# மாசுபடும் சுற்றாடல்

(கண்டி நிருபர்)

கண்டி நகரின் அவலம் அண்மைக் காலமாக அனைத்து வரியிறுப்பாளர்களையும் உல்லாசப் பயணிகளையும் வாட்டிவருகின்றது.

கண்டி நகரின் நடைபாதைகள் பிச்சைக் காரர்களின் உறைவிடமாக மாறிவருகின்றன. குடும்பமாக வந்து இவர்கள் நடைபாதைகளின் நடுவில் படுத்துறங்கி பாதசாரிகளுக்குக் கொடுக்கும் தொல்லைகள் பற்றி பொலிஸாரோ மாநகரசபை அதிகாரிகளோ கணக்கிலெடுப்பதாகத் தெரியவில்லை. உடல் ஊனமுற்றவர்களும் வயோதிபர்களுமாக நடைபாதைகளை ஆக்கிரமித்துள்ளனர். வருமானத்தைத் தேடிக்கொள்ளும் இவர்களின் நடவடிக்கையால் நகரின் சுற்றாடல் மாசுபடுகிறது.

# புகார் பெட்டி

# விடாமல் தொடரும் பதுக்கல் வியாபாரம்

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை சந்தர்ப்பமாகப்பயன்படுத்தி பதுக்கல் வியாபாரிகள் 1 போத்தல் பெற்றோலை 50 ரூபா முதல் 70 ரூபாயாகவும், 1 போத்தல் மண்ணெண்ணெயை 15 முதல் 20 ரூபாயாகவும் விற்பனை செய்துவருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் பதுக்கல் வியாபாரிகள்மீது நவடிக்கைகளை மேற்கொண்டு, வழக்குத் தாக்கல் செய்தபோதும் மீண்டும் மீண்டும் இவ் வியாபாரம் நடைபெற்றே வருகின்றது.

இதனால் அரச ஊழியர்களும், பொது மக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் மாவட்ட எரி பொருள் நிரப்பு நிலையங்களுக்கு வாரத்தில் இருநாட்கள் எரிபொருள் கிடைக்கின்றன. அவைகளையும் பதுக்கல் வியாபாரிகள் மொத்தமாகப் பெற்று, அதிக விலைக்கே விற்கின்றனர்.


**தேவை**

தலைநகரில் பிரபலமான நிறுவனமொன்றிற்கு எழுதுவினைஞர்கள் தேவைப்படுகின்றார்கள். கணக்கியல் துறையில் நல்லறிவும், ஆங்கில மொழியாற்றலும் உள்ளவர்கள் விரும்பப்படுவர்.

விண்ணப்பதாரர்கள் தங்களது தகைமை மற்றும் நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

**இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.**

| | |
|---|---|
| C-AD. 101 | சீ-ஏடி. 101 |
| C/O. THINAMURASU | மே/பா. தினமுரசு |
| P.O.BOX-1772 | த.பெ.இல. 1772 |
| COLOMBO. | கொழும்பு. |

**என்றும் சந்திக்கலாம்**

எங்களது வாடிக்கையாளர்களின் வீண் சிரமத்தையும் அலைச்சலையும் கருத்தில் கொண்டு திரு. P.K. சாமி அவர்களிடம் நுவரெலியாவிலும் கொழும்பிலும் வரும் வாடிக்கையாளர்கள் நேரடியாக அவரவர் பிரச்சனைகளைக் கூறி தீர்வுக்கான புதுமுறையாக செட்லைட் நெட்வோர்க், T.V. மூலம் திரு.P.K. சாமியுடம் கலந்துரையாடலாம்.

**மெய்ஞான ஜோதிட சிந்தாமணி**

மாதந்தோறும் வெளிவரும் திரு.பி.கே. சாமி அவர்களின் வெளியீடான மெய்ஞான ஜோதிட சிந்தாமணியை பெற முடியாதவர்கள் வருடசந்தா ரூ.240 அனுப்பினால் உங்கள் கை வசம் கிடைக்கப்பெறும். மெய்ஞான ஜோதிட சிந்தாமணி தொடர்பாக விற்பனை பிரதிநிதிகள் உடன் தேவைப்படுகின்றனர். தேவைகளுக்கு

ஆசிரியர்
இல.162, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13.

பி.கே. சாமி (J.D.G.A.N) JP அவர்களால் மாதந்தோறும் ஜோதிட ரீதியாக கணித்து வெளியிடப்படும் 'மெய்ஞான ஜோதிட சிந்தாமணி'யை பெற விரும்புவோர் தனிப்பிரதி ரூ27/=. வெளிநாட்டினருக்கும், உள்நாட்டினருக்கும் தபால் செலவுடன் வருட சந்தா ரூ. 360/= வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் ஏஜெண்ட் தேவை.
தொடர்புகளுக்கு :- பி.கே. சாமி (J.D.G.A.N) JP, No. 162, MAY FIELD RD, KOTAHENA. COLOMBO-13.



மீண்டும்
ஜூலை 1ம்
திகதி முதல்
**பூங்கா**
சிறுவர் பத்திரிகை
105-D, 1st Floor, Olcott Mawatha, Colombo 11.
Tel : 440507, 430132 Fax : 437615

வெளிவந்துவிட்டது...
வெற்றிக்கனி
ஆண்டு 5
இதழ் 7,8,9,10,11
கல்வி மஞ்சரி
O/L வினாவிடை
EFFECTIVE ENGLISH WITH GRAMMAR 1 & 2
BRIGHT BOOK CENTRE
S-27, First Floor, P.O. Box - 162
Colombo Central Super Market Complex
Colombo - 11. T.P. 434770



கலை அலங்கார வகுப்புக்கள்
* சிகை அலங்காரம்
* அழகுக்கலை
* மணப்பெண் அலங்காரம்
* 4 மாத கற்கைநெறி
எங்களிடமிருந்து உங்களிற்கு உங்களால் பல நூறுபேர்க்கு
FASNAZ BEAUTY SALON
இல. 142, டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை.
கொழும்பு-06.
தொலைபேசி: 589457




BRIGHT ன் தபால் மூலம் கல்வித்திட்டம்
முன்றே மாதங்களில்
ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத்தரப்படும்
விபரங்களுக்கு கீழ்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க
பெயர்: ..............
விலாசம்: ..............
BRIGHT TRAINING CENTRE
S-27, FIRST FLOOR, P.O. BOX. 162.
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO 11. TEL. 434770



"மந்திரயோகி" மாந்திரீக மருத்துவம்

காதல், திருமணம், கல்வி, தொழில், வெளி நாட்டுப்பிரயாணம் வேறு காரியங்களிலும் தடைகளும், காதலர்கள் ஒன்றுசேரமுடியாமை, கணவன்-மனைவி குடும்பப் பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், தீயசக்திகளின் தொல்லைகள் தீவினைகளினால் தீராத உடல்-மனநோய்களும் ஏற்படலாம் இவைகளுக்கு இறைவன் அருளி, முனிவர்கள் கையாண்ட, மர்மமான மருந்து, மந்திர ஜந்திர வசிய தாயத்துக்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ ஆண்-பெண் ஜனராஜ வசியங்கள், பாதுகாப்பு ரட்சைகள், வேறு நன்மையான காரியங்களுக்கு, வேண்டிய மந்திரம் வசியங்கள் செய்துகொள்ள அரசாங்கத்தினால் பதிவுசெய்யப்பட்ட மலையாளம் புகழ் மஹாசக்தி உபாசகர் மந்திரயோகியிடம் வரமுடியாதவர்கள், வெளி நாட்டவர்கள் சம்பந்தப்பட்டவர்களினதும், தாய் அல்லது தந்தையர்களினதும் பெயர்களுடன் தங்கள் கோரிக்கைகளை எழுதி 10 ரூபா 50 சத முத்திரைகள், 2 பதிவுத்தபாலில் வைத்து அனுப்பி தெய்வீகமருத்துவ ஆலோசனைகளை பதிவுத்தபாலிலும் இறை பரிகாரப்பொருட்களை (வி.பி.பி) பார்சல்களிலும் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றலாம், YOGI.DR.SACKTHYANANTHEBABA என்ற பெயருக்கு விரும்பிய குருதட்சணை (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் உடன் கவனிக்கப்படும். விலாசம்:-



YOGI.DR.SACKTHYANANTHEBABA
INDIAN CLINIC, GURUSACKTHY CENTRE
KALLADY-BATTICALOA (P.O)
குருசக்தி நிலையம், கல்லடி-மட்டக்களப்பு.



மின்சார வேக மலையாள மாந்திரீக சக்தி

ஆத்மாக்களின் எண்ணங்கள் எண்ணியபடி நிறைவேறினால் மாத்திரமே ஆத்ம திருப்தி அடைகிறார்கள். கேட்டவருக்கு கேட்டவரம் தரும் ஸ்ரீ துர்கா தேவியின் அற்புத அருள் கொண்ட உலக மாந்திரீக சக்கரவர்த்தி திரு.பி.கே.சாமி அவர்களை அணுகினால் கோரிக்கை கொடுக்கும் அன்பர்களுக்கு இத்தனையாம் திகதி இத்தனை மணிக்கு தங்கள் வேலை பூர்த்தியென சான்றிதழ் வழங்கப்படும். அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டதும் வரையறுக்கப்பட்ட தனியார் லிமிட்டட் கம்பனி இது ஒன்றேயாகும். எத்தனை யெத்தனையோ வெளிநாட்டவருக்கும் உள்நாட்டவருக்கும் எம்மால் வெற்றிபெற்ற சான்றிதழ்கள் ஆயிரக்கணக்கில் உண்டு. சான்றிதழ்களை நேரில் பார்வையிடலாம். எம்மாதமும் 20 முதல் மாதக் கடைசிவரை கொழும்பு ஸ்ரீதுர்க்கை தேவஸ்தானத்திலும் இதர நாட்களில் நுவரெலியா ஸ்ரீ துர்கை தேவஸ்தானத்திலும் திரு. சாமி அவர்களை சந்திக்கலாம். உள்நாட்டவர் நேரில் சந்திக்க ஆரம்ப அனுமதி கட்டணம். ரூ.250. வெளிநாட்டவர்கள் பிரச்சினைகளை கூறி பிறந்த திகதி மாதம் வருடம் இவைகளை குறிப்பிட்டு அனுப்பி ஆரம்ப கட்டணமாக ரூ.1000 அனுப்பினால் அவர்கள் வேலைக்குரிய கட்டணமும் எண்ணங்கள் பூர்த்தியாகும் திகதியும் கெரண்டி கார்டும் அனுப்பப்படும்.

Dr.பி.கே.சாமி (J.D.G.A.N)JP
பி.கே.சாமி அஸோஸியட் பிரைவேட் லிமிட்டட்
இல.162, மே பீல்ட் ரோட்,
கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13

கொழும்பு தொலைபேசி இல - 01342463-342464-344831-344832
- FAX-00941342464
நுவரெலியா தொலைபேசி இல - 052-2508-3093-3570-3336
- FAX-0094523093

**பண்டாரவளையில்**
**G.C.E(O/L) 1996**
கணிதம்
துரித மீட்டல் வகுப்பு
ஆரம்பம்: 1996. 06. 30 ஞாயிறு
காலை 10 மணி
கொழும்பு புகழ்
ஆசிரியர்:-"T.M.S.ஆனந்தன் "
இடம்:- சரசவி பட்டப்படிப்பு நிறுவனம்
සරසවි උපාධි පීඨය
SARASAVI UPPADI PEETAYA
270. பதுளை வீதி, பண்டாரவளை
(முதல் வகுப்பு அனுமதி இலவசம்)

**காண்டம்**
முனிவர் அருளிய ஏடுகளி[illegible]
அமைந்த காண்டம் எனு[illegible]
நாடி ஜோதிடத்தில்
உங்கள் பலன்களை
ரிஷி. S. மணி
மூலம் அறிய வாருங்கள்
சந்திரன்
144 2/1. காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6
T.P : 586218, 078-6361[illegible]
Fax : 503030




படிப்பகம்

www.padippakam.com

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# தொடரப்போகும் கெரில்லாப் போர் முடிவில்லாத யுத்தம்

**நாரதர்**

யாழ்-குடாநாட்டில் கெரில்லாப் போர் தீவிரமாகும் என்று புலிகள் வன்னியில் அறிவித்திருக்கிறார்கள்.

படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் புலிகளின் கெரில்லா அணிகள் ஊடுருவும் என்பதும், எங்கு வாய்ப்புக் கிடைக்கிறதோ அங்கு தாக்குதல் நடத்தப்படும் என்பதும் எதிர்பார்க்கக் கூடியது தான்.

ஆனால், புலிகள் அதனைப் பகிரங்கமாக அறிவித்திருப்பது இரண்டு நோக்கங்களுக்காக.

ஒன்று: வன்னியில் இருக்கும் இடம் பெயர்ந்த மக்களிடம் சொந்தப்பகுதிகளுக்கு திரும்பிச்செல்லும் எண்ணம் ஏற்படாமல் இருப்பதற்காக.

இரண்டு: வன்னியை நோக்கி படை நடவடிக்கைகள் துரிதகதியில் ஆரம்பிக்கப் படாமல் இருப்பதற்காக.

யாழ்-குடாநாட்டில் போர் மூளும் என்றால் அங்கு போகாமல் வன்னியில் இருந்துவிடுவதே மேல் என்று அங்குள்ள இடம்பெயர்ந்த மக்கள் நினைத்துவிடுவார்கள்.

வன்னியை நோக்கி தாம் நடவடிக்கையில் இறங்கினால், யாழ் குடாநாட்டில் இழப்புக்களை சந்திக்க வேண்டிவரும் என்று படையினர் தாமதம் செய்வார்கள்.

புலிகளின் பகிரங்க அறிவிப்புக்கு காரணம் அதுதான்.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பின்னர் தமது இராணுவபலம் தொடர்பாக மக்களுக்கு ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனம்தான் புலிகளுக்கு பெரும் பிரச்சனையாகியுள்ளது.

வன்னி நோக்கி படையினர் முன்னேறினால் புலிகளது அணிகள் தாக்குப்பிடிக்குமா? என்பது வன்னியில் உள்ள மக்களின் கேள்வியாகிவிட்டது.

முன்புபோல 'முடியும்' என்று ஒரே வார்த்தையில் புலிகளாலும் பதில் சொல்ல முடியவில்லை. மரபுப் போர் முறையில் தங்கள் பலவீனத்தை புலிகள் ஒப்புக் கொண்டேயாகவேண்டியுள்ளது.

ஒரு பகுதியை கைப்பற்ற நினைத்தால் எப்படியாவது அதனை சாதித்தே தீருவது என்றரீதியில் படைத்தரப்பினால் மூர்க்கமாக முடுக்கிவிடும் நடவடிக்கைகள் புலிகளின் பதில் தாக்குதல்களை சுலபமாக முறியடித்துவிடுகின்றன.

எந்தவொரு கெரில்லா அணியும் தமது சக்திகளை தமக்கு சாதகமில்லாத களத்தில் இழக்க விரும்பாது.

புலிகள் தற்கொலைத் தாக்குதல்களில் உலகில் முதலிடத்தில் உள்ள கெரில்லா இயக்கமாக இருக்கலாம். ஆனால் அந்தத் தற்கொலைத் தாக்குதல்கள் கூட குறிப்பிட்ட நடவடிக்கையை வெற்றிகரமாக்கும் வழிமுறையாகத்தான் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

படையினர் தம் பலத்தை திரட்டி முன்னேறும்போது தற்கொலைத்தாக்குதல்கள் பயன்கொடுக்காது. அவ்வாறான முயற்சிகளில் பெரியளவில் புலிகள் ஈடுபட்டிருந்தால், கெரில்லா போர் முறையையே தற்கொலைக்குள்ளாக்கும் நடவடிக்கையாக அவை அமைந்திருக்கும்.

கெரில்லாப் போரை தொடர்ந்து நடத்த ஆட்பலம், ஆயுதபலம் என்பற்றை விட ஆத்மபலம்தான் முக்கியமானது.

மரபுப் போர் முறை என்பது யானை மாதிரி. அது அசைந்து செல்லும்போது மூர்க்கமாக இருக்கும். ஆனால் அந்த யானை ஓரிடத்தில் ஓய்வாக அமரும்போது எறும்பால் அதன் காதில் புகுந்துவிட முடியும். கெரில்லாக்களை யானையின் காதில் புகும் எறும்போடும் ஒப்பிடலாம்.

ஆனால், கெரில்லாக்களால் எந்தவொரு பெரும் நிலப்பரப்பையும் நிரந்தரமாக தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது.

வேண்டுமானால் சிறிய கெரில்லா பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். அடிக்கடி தமது பிரதேசங்களை மாற்றிக்கொண்டே இருந்தால் தான் கெரில்லாக்களால் தமது சக்திகளை சேமித்துவைத்திருக்க முடியும்.

கெரில்லாக்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை விடுவிப்பது மூலம் கெரில்லாக்களை அழித்துவிடவும் முடியாது.

அதேபோல கெரில்லா நடவடிக்கைகள் மூலமாக பெரும் நிலப்பரப்பை மீட்டெடுத்து, அதனைப் பாதுகாத்து வைத்திருக்கவும் முடியாது.

புலிகளைப்பொறுத்தவரை கெரில்லாக்களாக மட்டுமல்லாது, நிரந்தர படைக்குரிய தன்மைகளையும் பெற்றுள்ளனர்.

ஆள் பலம், ஆயுதபலம், தரைப்படை தவிர, கடற்புலிகள் என்று நிரந்தரப் படையின் தன்மைகளைப் புலிகள் பெற்றிருந்தனர். ஆனால், மரபுப் போரில் ஈடுபடும்போது அரச படைகளுக்கு ஈடான படைக்கலபலம் புலிகளின் நிரந்தர படையிடம் இல்லை.

வான்படை, கடற்படை, தரைப்படை என்று அரசின் முப்படைகளும் நவீனமயப் படுத்தப்பட்டுள்ளன. மரபுப் போரில் தரைப்படையின் பாதுகாப்பு கவசமாக கவச வாகனங்கள் முன்செல்லும். வான்படை மேலே இருந்து உதவி செய்யும். கடற்படையும் ஒத்துழைக்கும். இந்த குணாம்சங்கள் இல்லாமல் மரபுப்போரில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெறமுடியாது.

வன்னி பெரு நிலப்பரப்பில் படையினர் ஒரு பாரிய நடவடிக்கையில் ஈடுபட்டால், பரந்த நிலப்பரப்பு அவர்களுக்கே சாதகமாக இருக்கும்.

எப்போதும் பரந்த வெளிகள், பெரு நிலப்பரப்புக்கள் மரபு யுத்தமுறையில் பலமாக உள்ள படைக்குத்தான் சாதகமாக அமையும்.

யாழ்-குடாநாட்டை புலிகள் உட்பட ஏனைய தமிழ் அமைப்புக்கள் தளப்பிரதேசமாக தெரிவு செய்த காரணமே அதன் நிலப்பரப்பு தன்மைதான்.

அடர்த்தியான குடிசனம் உள்ள பகுதிகள் என்பதால் யாழ் குடாநாட்டை கைப்பற்றுவதானால் பெரும் மக்கள் அழிவு ஏற்படும்.

உலக கண்டனங்களுக்கு பயந்து அரசாங்கம் அப்படியொரு நடவடிக்கைக்கு துணியாது என்றுதான் முன்னர் நம்பப்பட்டது.

குறிப்பாக இந்தியாவின் அனுதாபம் அப்போது தமிழர் தரப்புக்கு சாதகமாக இருந்தமையால், பேரழிவுக்கு துணிந்த நடவடிக்கைக்கு அரசாங்கம் திட்டமிடாது என்று நம்பியதில் தவறில்லை.

1987 இல் 'ஒப்பரேசன் லிபரேசன்' மூலம் டென்சில் கொப்பகெடுவ செய்ய நினைத்ததைத்தான் இப்போது படைத்தரப்பு செய்து முடித்துள்ளது.

'ஒப்பரேசன் லிபரேசன்' தொடராமல் தடுக்கப்பட்டதற்கு இந்திய தலைமீடுதான் பிரதான காரணம் என்பதை புலிகள் இதுவரை மறுத்தே வந்தனர். இந்தியா தலையிட்டிருக்காவிட்டாலும், உள்ளே வர விட்டு தாம் தாக்கியிருப்போம் என்றுதான் புலிகள் கூறிவந்தனர்.

'ஒப்பரேசன் லிபரேசன்' கட்டத்தில் புலிகள் தம்மால் முடிந்தளவு எதிர்த்தனர். மில்லரின் தற்கொலைத் தாக்குதல் படையினருக்கு அதிர்ச்சிவைத்தியமாக இருந்தது. அதெல்லாம் உண்மைதான்.

ஆனால், புலிகளால் படைத்தரப்பின் முன்னேற்றத்தை தாமதப்படுத்தியிருக்கலாமே தவிர தடுத்துநிறுத்தியிருக்க முடியாது.


அதனால்தான் மறைந்த டென்சில் கொப்பகெடுவ, தன் நண்பர் ஒருவருக்கு கூறினாராம், "இந்தியபடை வந்திராவிட்டால் நாங்கள் நினைத்ததை முடித்திருப்போம்"

இந்தியப் படை வெளியேறிய பின்னர் இலங்கை அரசாங்கத்துடன் பேசிக்கொண்டே படையினரை முகாம்களுக்குள் முடக்கி வைக்கும் வியூகத்தை மிக கச்சிதமாக செய்து முடித்தனர் புலிகள்.

புலிகளின் கெரில்லாத் தாக்குதல் உத்திகளும், தாக்குதல்களில் காட்டப்பட்ட திறமைகளும் புலிகள் தொடர்பான உளவியல் ரீதியான அச்சத்தை படைத்தரப்பினரிடம் ஏற்படுத்தியிருந்தன.

மனோபலரீதியில் படைத்தரப்பினரிடம் புலிகள் ஏற்படுத்திய தாக்கம்தான், யாழ் குடாநாட்டில் ஒரு பாரிய தாக்குதலை மேற்கொள்வது குறித்து அரசாங்கத்தையும், படையினரையும் தயக்கம் காட்டச் செய்தது.

அதுதவிர, மடுப்பகுதியில் உள்ள மக்களை ஒரு பொது இடத்திற்கு செல்லுமாறு கூறிவிட்டு, அங்கு பாரிய நடவடிக்கையை மேற்கொள்ள அன்றைய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜரத்தின திட்டமிட்டார்.



அந்த நடவடிக்கை தொடர்பாக சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் உட்பட, பல அமைப்புக்கள் கடும் கண்டனம் தொடுத்தன. அதனால் ரஞ்சன் தனது திட்டத்தை சுருட்டி வைக்கவேண்டியதாயிற்று.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பிரேமதாசா அரசாங்கம் மீது சர்வதேச கண்டனங்கள் இருந்தமையால் புதிய குற்றச்சாட்டுக்கள் எழாமல் பார்த்துக்கொள்வதில் பிரேமதாசா அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டி இருந்தது.

மனித உரிமை மீறல் விடயங்களால் புலிகளைவிட சர்வதேச அரங்கில் அரசாங்கம் பலவீனமாக இருந்த நேரம் அது.

எனவே மடுவில் மட்டுமல்ல, யாழ்-குடாநாட்டில்கூட ஒரு பலப்பரீட்சைக்கு பிரேமதாச அரசாங்கம் தயாராக இருக்கவில்லை.

அதுதவிர டென்சில் கொப்பக்கடுவ போன்ற தளபதிகளுக்கும் அரசாங்க தலைமைக்கும் இடையே குறிப்பிடத்தக்க நல்லுறவு நிலவவில்லை.

புலிகளை தோற்கடிப்பதைவிட, புலிகளை தோற்கடிப்பது மூலம் டென்சில் கொப்பக்கடுவ போன்றவர்கள் ஹீரோக்கள் ஆகிவிடக்கூடாது என்பதுதான் அப்போதைய அரசாங்கத்தின் அரசியல் சார்ந்த எண்ணமாக இருந்தது.

புலிகளுக்கும் தனக்கும் இரகசிய உறவு இருப்பதாக செய்யப்பட்ட பிரசாரங்களை முறையடிக்க மட்டுமே சில இராணுவ நடவடிக்கைகளுக்கு வடக்கு-கிழக்கில் அனுமதி கொடுத்துக்கொண்டிருந்தார் பிரேமதாசா.

பிரேமதாசாவைப் பொறுத்தவரை அவரது முதல் எதிரிகள் புலிகளல்ல. தென்னிலங்கையில் உள்ள அவரது அரசியல் எதிரிகள்தான். தனது அரசியல் எதிரிகளை பலவீனமாக்கும் அரசியல் அதிரடி நடவடிக்கைகளில்தான் பிரேமதாசாவுக்கு கூடுதல் ஆர்வம் இருந்தது.

புலிகளுடன் பிரேமதாசா அரசாங்கம் நடத்தியது தற்காப்பு யுத்தம்தான். ஏனெனில் தென்னிலங்கையில் உள்ள தனது அரசியல் எதிரிகளுடன் அரசியல்ரீதியான தாக்குதல் யுத்தம்தான் பிரேமதாசாவின் நிகழ்ச்சி நிரலில் முதலிடம் பெற்றிருந்தது.

எனவே-யாழ்-குடாநாட்டை புலிகள் நீண்டகாலமாக தமது தளப்பிரதேசமாக வைத்திருக்க முடிந்தமைக்கு நான்கு காரணங்கள் முக்கியமானதாக இருந்தன.

1. புலிகளின் தாக்குதல்கள் படையினரிடம் ஏற்படுத்தியிருந்த மனோரீதியான தாக்கம்.

2. தென்னிலங்கை அரசியலில் பிரேமதாசா அரசாங்கம் முகங்கொடுக்க வேண்டி இருந்த அரசியல் சூழ்நிலை.

3. படை அதிகாரிகள் மத்தியில் நிலவிய முரண்பாடுகள்.

4. சர்வதேச அரங்கில் பிரேமதாசா அரசாங்கம் சம்பாதித்து வைத்திருந்த கெட்ட பெயர். (ஜே.வி.பிக்கு எதிரான நடவடிக்கைகளின் போது நடைபெற்ற சம்பவங்களால்)

ஜனாதிபதி சந்திரிகா பதவிக்கு வந்ததும் மேற்கூறப்பட்ட நான்கு காரணங்களில் மூன்று காரணங்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன.

அந்த காரணங்கள் இல்லாமல் போனதுக்கும் புலிகள் பல வழிகளில் உதவியிருப்பதையும் மறுப்பதற்கில்லை.

தென்னிலங்கையின் முக்கிய அரசியல் தலைவர்களை ஒழித்துக்கட்டியது மூலம் ஜனாதிபதி சந்திரிக்காவின் அரசியல் எதிர் முகாமில் 'பவர் கட்'டை ஏற்படுத்தியவர் பிரபாகரன்தான்.

போர் நிறுத்தத்தை முதலில் முறித்தது மூலம் தம்மைப் பற்றிய முக்கிய குற்றச்சாட்டை சர்வதேச அரங்கில் ஜனாதிபதி சந்திரிக்கா சொல்லக்கூடிய வாய்ப்பையும், இராணுவ நடவடிக்கையை நியாயப்படுத்தவும் உதவியதும் புலிகள்தான்.

ராஜீவ் காந்தி கொலை மூலம், இந்திய அரசையும், இலங்கை அரசையும் நட்பாக்கி வைத்ததும் புலிகள்தான்.

யானை தன் தலையில் தானே மண் அள்ளிப்போட்டது போல, புலிகளும் தம்மை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு தாமும் காரணமாக இருந்திருக்கிறார்கள்.

ஆக, கடந்த கால அரசாங்கங்களுக்கு புலிகளின் தளப்பிரதேசத்தை கைப்பற்றுவதற்கு தடையாக இருந்த அரசியல் காரணங்களோ, சர்வதேச அபிப்பிராயம் குறித்த அச்சமோ ஜனாதிபதி சந்திரிகா அரசாங்கத்திற்கு கிடையாது.

எனவே, புலிகள் தமது இராணுவ பலத்தை மட்டும் நம்பியே அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கையை சந்தித்தாக வேண்டும். இந்தக் கட்டத்தில்தான் மரபுப் போரில் புலிகளின் பலவீனம் வெளிப்பட்டுள்ளது.

தமது பலத்தால் மட்டுமே யாழ்-குடாநாட்டை தம்மிடம் வைத்திருக்க முடிந்தது என்ற கூற்றை புலிகள் மறுபரிசீலனை செய்தேயாகவேண்டும். அப்படி செய்தால் தான் தாம் எங்கெங்கே தவறுகள் விட்டோம் என்பதை அவர்கள் கண்டுபிடிக்க முடியும்.

தற்போது வன்னியில் உள்ள தமது தளப்பிரதேசத்தை பாதுகாப்பதற்கும் புலிகள் சில காரணங்களை நம்பியிருக்கிறார்கள்.

1. வன்னியின் பரந்த நிலப்பரப்பு.

2. யாழ்-குடாநாட்டையும் பாதுகாத்துக் கொண்டு, வன்னியையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர படையினரின் எண்ணிக்கை போதாது.

பரந்த நிலப்பரப்பு புலிகளுக்கு எந்த வகையில் சாதகம்? நீண்டு நிலைகொண்டிருக்கும் படையினர்மீது கெரில்லாத் தாக்குதல் நடத்துவது சுலபம்.

புலிகளுக்கு எந்தவகையில் பாதகம்? மரபுப் போர் முறையில் கவசவாகனங்கள் சகிதம் படையினர் சுலபமாக முன்னேறிச் செல்வர்.

புலிகளைத் தேடிச்சென்று தாக்கிவிட்டு முகாமுக்குத் திரும்பும் நடவடிக்கையை படையினர் மேற்கொண்டால் கெரில்லாத் தாக்குதலுக்கு வாய்ப்புக்கள் குறையலாம்.

அதேநேரத்தில் வன்னி தமது தளபபிரதேசம் என்ற நிலையையும் புலிகள் இழக்க வேண்டி ஏற்பட்டுவிடும்.

எப்படித்தான் பார்த்தாலும் வன்னியின் ஒரு பகுதி படையினர் வசம் செல்வதுதான் அடுத்த கட்ட நடவடிக்கைகளின் விளைவாக இருக்கும். அதனை புலிகளும் ஓரளவு சொல்லத் தொடங்கியுள்ளனர்.

ஆக, மொத்தத்தில் முன்புபோல தமது பலத்துக்கு மீறிய அளவில் தளப் பிரதேசங்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வாய்ப்பு புலிகளுக்கு இல்லாமல் போய் உள்ளது.

தமது பலம் எந்தளவோ அந்தளவுக்கே புலிகளின் நடவடிக்கைகளும், அவர்களது தளப்பிரதேச அளவும் இருக்கும்.

அதேநேரம் படைத்தரப்பும் வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும் தனது கால்களை அகலப்பரப்பும்போது பெரும் இழப்புக்களை சந்தித்தேயாகவேண்டும்.

மரபுப் போர் பெரும் படைக்கு சாதகம். அந்த பெரும்படை நிலை கொண்டபின்னர் அதனை தாக்குவது கெரில்லாக்களுக்கும் சுலபம்.

அதாவது ஒரு பகுதியை கைப்பற்றும் போரில் பெரும் படையொன்று சந்திக்கும் இழப்பைவிட, கைப்பற்றிய பகுதியில் நிலை கொண்டபின்னர் அந்தப் படை சந்திக்கும் இழப்பு அதிகமாக இருக்கும்.

கெரில்லாக்களை பின்வாங்கச் செய்வது, கெரில்லாக்களை அழித்தொழிப்பது என்று இரண்டு கட்டங்கள் உள்ளன.

வடபுலப் போர்முனையில் கெரில்லாக்களை அழிப்பது சுலபமல்ல. பின்வாங்கிச் செல்ல வைக்கலாம். சென்றவர்கள் மீண்டும் வந்து தாக்கு வார்கள்.

எனவே- இறுதி வெற்றி என்பது இருதரப்புக்கும் எட்டாத தொலைவில்தான் இருந்து கொண்டிருக்கும்.

ஆனால் ஒன்று, அரசாங்கம் நினைப்பதைப் போல யுத்தம் முடிவுக்கு வருவது படையினரின் கைகளில் உள்ள விஷயமல்ல. விரைவில் முடிவுக்கு வரக்கூடிய யுத்தமுமல்ல.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைக்கு முன்பிருந்ததைவிட அரசியல், இராணுவரீதியில் புலிகள் பின்னடைவை சந்தித்திருக்கிறார்கள் என்பது உண்மை தான்.

ஆனால், தமது கெரில்லா நடவடிக்கைகள் மூலம் புலிகள் தமது தாக்குதல் திறனை வெளிப்படுத்தும்போது, புலிகளை ஒதுக்கிவிட்டு தமிழ் மக்களை கையாளமுடியும் என்ற அரசின் நம்பிக்கை பொய்த்துப்போகும்.

புலிகளின் உண்மையான பலத்தை மீறிய மாயைகள்தான் இப்போது தகர்ந்துள்ளன. புலிகளின் உண்மையான பலம் கெரில்லா நடவடிக்கைகள்தான். அதன் முழு வீச்சையும் புலிகள் பிரயோகிக்கும் போதுதான் போர் முனை நிலவரம் எப்படி மாறுகிறது என்று அறிய முடியும்.

---



## அதிரடி அய்யாத்துரை

வவுனியாவில் எங்கு திரும்பினாலும் காதில் விழும்பேச்சு 'பாஸ், பாஸ், பாஸ்' வவுனியாவுக்குள் வருவதற்கு பாஸ், வவுனியாவில் குடியிருக்க பாஸ். வீட்டில் யாராவது தங்கவந்தால் அவர்களுக்கு பாஸ் எடுக்க ஓட்டமும், நடையும். பேசாமல் வவுனியாவை பாஸ்னியா எண்டு பெயர் மாற்றலாம். நாள் ஒரு சட்டம். பொழுதொரு புது ரூல்ஸ். பாஸ் எடுக்க மாட்டாமல் மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க சனம் படும்பாட்டை அனுபவித்தால்தான் தெரியும். பாஸ் கொடுக்க இருக்கும் சிலருக்கு எழுத்து, படிப்பு வாசனையும் தெரியாதாம். சிவம் 'பாஸில்' சவம் எண்ட பெயரோடும் திரும்பவேண்டியிருக்கும்.

சொந்த வீடு திரும்பியவர் ஒருவர் கடிதம் போட்டிருந்தார். கடிதத்தில் ஒரு சுவாரசியமான சங்கதி. வீட்டில் உள்ள சுவர்களெல்லாம் இடிஞ்சுபோய் கிடந்தனவாம். ஒரே ஒரு சுவர் மட்டும் தாக்குப்பிடிச்சு நிண்டதாம். சுவரைப் பார்த்தவருக்கு அதிர்ச்சி. சுவரில் இருந்த மணிக்கூடு அத்தனை இடிபாடுகள் மத்தியிலும் சரியான நேரம் தவறாமல் காட்டிக்கொண்டிருந்ததாம். அது நூறுவருச பழமையான மணிக்கூடு. 'ஓல்ட் இஸ் கோல்ட்' எண்டு சொல்லுறது சரிதானுங்கோ.

நேரத்தை தள்ளிவைச்சாலும் பாராட்டு. நேரத் தள்ளிவைப்பால் ஏற்பட்ட சிரமங்களை சொல்லமாட்டினம். பிறகு பாடசாலை நேரத்தை மாற்றினாலும் பாராட்டு. அதனால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதை சொல்லமாட்டினம். பிறகு அலுவலக நேரத்தை மாற்றினாலும் பாராட்டு. அரச வெகுஜன தொடர்பு சாதனங்களின் சுதந்திரம் புல்லரிக்க வைக்குதோ இல்லையோ?! அதில பாருங்கோ, நேரமாற்றமும் கொண்டுவந்துபோட்டு, பிறகு அதை இதை தள்ளிவைச்சுப்போட்டுப்பார்த்தாலையும் கணக்கும் சரிதான். நேரத்தை மாற்றிப்போட்டு, பிறகு அந்த நேரமாற்றத்திற்கு தோதாக பள்ளி, அலுவலக நேரங்களை மாற்றியது, மூக்கை தலையைச் சுற்றி தொட்டமாதிரிப் போட்டுதல்லோ.

'சமாதான நகரத்தில்' கைதுகளும் தொடரத்தான் செய்யுது. அங்கே வைத்திருக்காமல் கப்பலில் ஏற்றி திருமலைக்கு கொண்டுவந்து, தலைநகரச் சிறைகளில் வைக்கப்படுகினம். சமாதான நகரமாக்கும் திட்டம் இருப்பதால் அங்கு சிறைகளில் ஆட்களை வைச்சிருக்கக்கூடாது எண்டு நினைக்கப்படுகிறதோ? உறவினர்கள் கப்பலில் அலைய வேண்டியதுதான்.

இந்தியா-பாகிஸ்தான் பிரச்சனைக்கு மத்தியஸ்தம் செய்யுமாறு பாகிஸ்தான் நம்நாட்டை கேட்டதாம். நம் நாடும் தீவிரமாக ஆழ்ந்து பரிசிலித்துப் போட்டு "வெளிசொறி' தலையிடுவதுமாதிரியில்லை." எண்டு சொல்லிப்போட்டுதாம். என்னதான் இருந்தாலும் பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் உப்பிடி ஜோக் அடிச்சிருக்கக்கூடாது. அந்த ஜோக்குக்கு சிரிக்காமல் நம்நாடும் சீரியசாக ஆராய்ந்ததுதான் பெரிய ஜோக். நம்ம பகுதியில் ஒரு பழமொழி இருக்கு. "மூஞ்சூறு தான் போக காணவேல்லையாம்......" ஒரு நாட்டுக்குள்ளேயே எங்களால் பிரச்சனையைத் தீர்க்க முடியேல்லை. எங்களிடம் வந்து...ஹி....ஹி....ஹி... உந்த ஜோக்தானே வேண்டாம் என்கிறது.

சனம் மெள்ள மெள்ள எல்லாவற்றையும் மறந்துபோடுமோ எண்டு ரெண்டு எழுத்தாருக்கும் ஒரு பலத்த யோசனைதான். அதனால் கடந்த காலத்தையெல்லாம் நினைவூட்டி துண்டுப்பிரசுரம் அடிச்சு விட்டிருக்கினமாம். எங்கிருந்தாலும் ஒன்றையும் மறக்க வேண்டாம் எண்டு சொல்லியிருக்கினமாம்.

ரெண்டு எழுத்தார் அறிமுகப்படுத்திய நடைமுறைகள்தான் இப்பவும் குடாநாட்டு சனத்துக்கு கைகொடுக்குது. மண்ணெண்ணெயில்தான் வாகனங்கள் ஓடுது. குப்பி விளக்குத்தான் தெருவிளக்காக எரியுது. மண்ணெண்ணெய் ஒரு போத்தல் ஆக. 120 ரூபாய். யாழ்ப்பாணத்தை சமாதான நகரமாக கட்டியெழுப்ப முன்னர் பொருட்களை கட்டுப்பாட்டு விலையில் கிடைக்கச் செய்தால் என்ன? இல்லையென்றால் வீடு கட்ட கொடுக்கிற பணத்தில் மண்ணெண்ணெய்தான் வாங்க வேண்டி இருக்கும்.

ரெண்டு எழுத்தாரின் ஆலோசகர் உற்சாக 'மூட்'வந்தால் தனக்கு தெரிந்த உள்விசயங்களை பொட்டு பொட்டென்று போட்டுடைச்சுப் போடுவாராம். உளவுப்பிரிவு மூலம் தலைவர் விஷயத்தை கேள்விப் பட்டுத்தான் கடிவாளம் போட்டிருக்கிறாராம்.

கிழக்கின் தனிக்கட்சி தொடங்குவதற்கு முன்னணியில் நிற்கும் ஒருவருக்கு பல சலுகைகள் வழங்கப்படும் என்று அதிகாரமுள்ள தரப்பு உத்திரவாதம் கொடுத்திருக்கிறதாம். கடந்த தேர்தலில் போட்டியிட்டு தனது தோல்விக்கு கிழக்கின் சிங்கத்தாரை காரணம் சொன்னவராம் அவர். சிங்கத்துக்கு எதிரான கூட்டான கட்சியினர் அந்த பிரமுகருக்கு மறைமுகமாக உதவிசெய்வதாகக் கேள்வி. கூட்டான கட்சி வெகுஜனப் பிரதிநிதி ஒருவரும் அந்த பட்டியலில் இருக்கிறார். வாழ்க, கொள்கை உறுதி.

வாழ்க்கையைப் பற்றி பாம்பாட்டிச் சித்தர் பாடிய பாடலில் ஒரு பகுதி. என்ன அருமையாகச் சொல்லுறார் பாருங்கோ.

**"முக்கனியுஞ் சர்க்கரையும் மோதகங்களும்**
**முதிர் சுவை பண்டங்களும் முந்தி உண்டவாய்**
**மிக்க உயிர் போன பின்பு மண்ணை விழுங்க**
**மெய்யாகக் கண்டோம் என்று ஆடுபாம்பே."**



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர்





# கொழும்பில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல்கள்!

அற்புதன் எழுதுவது

### மாட்டிக்கொண்டார் அவரும்

கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலைய குண்டு வெடிப்பு, மருதானை பொலிஸ் நிலையம் அருகே நடைபெற்ற குண்டு வெடிப்புக்கள் பற்றி சென்றவாரம் விபரித திருந்தேன்.

இந்த இரு நடவடிக்கைகளிலும் புலிகளால் பணம் கொடுத்து பயன்படுத்தப் பட்டவர் மனோகரி. அவரது தொழில் விபச்சாரம்.

புலிகள் இயக்க உறுப்பினரான மூர்த்தியுடன் ஹோட்டலில் தங்கியிருந்த போது, ஹோட்டலில் வேலை செய்த ஒரு இளைஞர்மீது கண்வைத்தார் மனோகரி.

மூர்த்தி வெளியே செல்லும் நேரங்களில் அந்த இளைஞரோடு நெருக்கமாக இருந்தார் மனோகரி. ஆனாலும் தாம் எதற்காக அங்கு தங்கியிருக்கிறோம் என்பதை மட்டும் சொல்லவில்லை.

அந்த இளைஞரின் பெயர், முகவரியை தனது டயரியில் குறித்து வைத்திருந்தார் மனோகரி.

மனோகரி கைது செய்யப்பட்டபோது டயரியும் மாட்டியது. டயரியைத் துருவினார்கள் பொலிசார்.

மனோகரியின் டயரியில் இருந்த பெயர் முகவரியைவைத்து மனோகரிக்கு நெருக்கமான அந்த இளைஞரும் கைதுசெய்யப் பட்டார். அவரது பெயர் முஸ்தபா. கிட்டத்தட்ட ஒருவருடம் அவர் உள்ளே இருந்தார்.

மற்றொரு முஸ்லிம் இளைஞரும் கைது செய்யப்பட்டார். அவரது பெயர் சையத் அகமட். அவர் மூர்த்தியின் நண்பர். ஆனால் மூர்த்தி இயக்கத்தில் இருந்தது அவருக்கு தெரியாது.

### ஈரோசின் நடவடிக்கைகள்

கொழும்பில் எங்கு குண்டுவெடித்தாலும் ஈரோஸின் வேலை என்றுதான் அக்காலகட்டத்தில் நம்பப்பட்டது. அதனால் தான் கொழும்பு புறக்கோட்டை குண்டு வெடிப்பும், மருதானைக் குண்டுவெடிப்பும் ஈரோஸின் வேலை என்று

## குறிவைக்கப்பட்ட பொருளாதார இலக்குகள்!

சொல்லப்பட்டது.

கொழும்பில் குண்டுவெடிப்புக்களை ஆரம்பித்துவைத்த இயக்கம் ஈரோஸ்தான்.

கொழும்பில் அப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமா என்று ஏனைய இயக்கங்கள் புலிகள் உட்பட- சந்தேகித்துக்கொண்டிருந்தபோது ஈரோஸ் தான் முதலில் இறங்கியது.

ஈரோஸ் இயக்கம் கொழும்பில் மேற்கொண்ட குண்டுத்தாக்குதல்கள் தொடர்பாக சொல்வதற்காக 1984ம் ஆண்டுக்கு திரும்பிச் செல்ல வேண்டியிருக்கிறது.

இலங்கை அரசாங்கம் ஈழப் போராளி அமைப்புக்களை நசுக்க இஸ்ரேலிய மொசாட்டை அழைத்திருந்தது.

மொசாட் ஆலோசகர்கள் கொழும்பில் எங்கு தங்குகிறார்கள் என்பது இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

மொசாட்டைச் சேர்ந்த சிலர் கொழும்பில் உள்ள ஒபரோய் ஹோட்டலில் அறை எடுத்து இரகசியமாக தங்கியிருந்தனர்.

அந்த விடயம் எப்படியோ ஈரோஸ் இயக்கத்துக்கு கிடைத்துவிட்டது.

மொசாட்டை சேர்ந்தவர்கள் 7ம் மாடியில் உள்ள அறையில்தான் தங்கியிருந்தார்கள்.

ஒபரோய் ஹோட்டலில் குண்டுவைப்பதற்கு ஈரோஸ் திட்டமிட்டது. கொழும்பில் ஈரோசின் முதல் நடவடிக்கை அதுதான். ஈரோசின் முதலாவது இராணுவ நடவடிக்கையும் அதுதான்.

### ஒபரோயில் வெடித்தது

முதல் நடவடிக்கை என்பதால் மிகக் கவனமாக திட்டம் தீட்டினார்கள்.

ஈரோஸ் இயக்கத்தில் குண்டு தயாரிப்பதில் திறமையானவர் கரண். அவரே நேரடியாக கொழும்புக்கு அனுப்பப் பட்டார். அவருடன் வாணி என்னும் பெண் உறுப்பினரும் வந்தார்.

இருவரும் தம்பதிகள் போல ஒபரோய் ஹோட்டலுக்கு சென்று அறை எடுத்து தங்கினார்கள். 7வது மாடியில் அவர்களுக்கு அறை கிடைத்தது.

சூட்கேஸில் வெடிமருந்து தயாராக இருந்தது. அறையில் வைத்து குண்டுதயாரித்தார் கரண்.

குண்டைத்தயாரித்து வைத்துவிட்டு இருவரும் அறையைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டனர்.

வெளியே சுற்றிப்பார்க்க செல்கிறார்கள் என்று ஹோட்டல் ரிசப்ஷனில் உள்ளவர்கள் நினைத்தனர்.

அவர்கள் வெளியே சென்றபின்னர் 7ம் மாடியில் குண்டுவெடித்தது. பல அறைகள் சேதமடைந்தன. ஒபரோய் ஹோட்டலில் பணியாற்றிய பெண் ஊழியர் ஒருவர் பலியானார். 30 பேர்வரை படுகாயமடைந்தனர். இக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது 28.06.84 இல்.

குண்டுவெடிப்பில் மொசாட்டை சேர்ந்த ஒருவரும் பலியானதாக ஈரோஸ் இயக்கம் கூறியது. இலங்கை அரசு அதனை மறுத்தது.





### இரண்டாவது நடவடிக்கை

வடக்கு-கிழக்கு யுத்தத்தை மையமாக வைத்து ஜே.ஆர் அரசாங்கம் புதிதாக உருவாக்கியதுதான் தேசிய பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பில் தேசியப் பாதுகாப்பு அமைச்சின் அலுவலகம் முன்பாக குண்டுவெடிப்பை நடத்துவது என்று ஈரோஸ் திட்டமிட்டது.

ஒபரோயில் குண்டுவெடிக்கும் அதே நாளில் தேசிய பாதுகாப்பு அமைச்சின் முன்பாகவும் குண்டு வெடிக்க வேண்டும் என்பதுதான் திட்டம்.

குண்டுப்பார்சலை கொண்டுசென்று வைக்கும் பொறுப்பு குட்டியிடம் ஒப்படைக்கப் பட்டது. அவர் ஈரோஸ் இயக்கத்தின் முன்னணி உறுப்பினர்.

குண்டுப்பார்சலை கொண்டுசென்று வைத்துவிட்டு திரும்பிவிட்டார் குட்டி.

பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரின் பார்வையில் பட்டுவிட்டது பார்சல். அவர்களுக்கு சந்தேகம் வந்துவிட்டது. அதனால் பார்சல் பரிசோதிக்கப்பட்டது. குண்டு வெடிப்பு தடுக்கப்பட்டது.

இந்த சம்பவங்களின் பின்னர் கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டன. கேந்திர நிலைகள் எந்நேரமும் கண்காணிக்கப்பட்டு வந்தன.

பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்ட அதே நேரத்தில், அந்த பாதுகாப்பு ஏற்பாடுகளில் உள்ள ஓட்டைகளை தேடியது ஈரோஸ்.

கொழும்பில் பழைய பேப்பர்கள் பொறுக்குவது அப்போது பரவலாக நடைபெற்ற தொழில்.

ஈரோஸ் உறுப்பினர்கள் மூன்று பேர் பழைய பேப்பர் பொறுக்குபவர்கள் போல சென்று மூன்றாவது குண்டுவெடிப்பை நடத்துவது என்று திட்டமிடப்பட்டது.

கொழும்பு துறைமுகத்தில் இருந்து சப்புகஸ்கந்தை, கொலன்னாவ பகுதிகளுக்கு செல்லும் எண்ணெய் குழாய்களை குண்டு வைத்து தகர்ப்பதுதான் இலக்கு.

கொலன்னாவ, முகத்துவாரம், ஊறுகொடவத்த ஆகிய இடங்களில் குண்டு வைப்பதுதான் திட்டம்.

மூன்று குண்டுகள் தயாரிக்கப்பட்டன. குண்டுகளை தயாரிப்பதில் முக்கிய பங்கெடுத்தவர் பரிபூரணன். அவர் பேராதனை பல்கலைக் கழகத்தில் பொறியியல் மாணவராக இருந்தவர்.

08.10.84 அன்று பரிபூரணன், குட்டி, வரதன் ஆகியோர் பேப்பர் பொறுக்குபவர்கள் போன்ற தோற்றத்துடன் புறப்பட்டனர்.

### மூன்று திசைகளில்

மூவரும் மூன்று திசைகளில் பிரிந்து சென்றனர். கொலன்னாவ பஸ் நிலையத்திற்கு பின்புறமாக எண்ணெய் குழாய் செல்லும் பகுதியில் ஒரு குண்டு வைக்கப்பட்டது.

துறைமுகத்தில் இருந்து முகத்துவாரம் பகுதியாக செல்லும் எண்ணெய் குழாய் ஒன்றுக்கும் குண்டுவைக்கப்பட்டது.

மூன்றாவது குண்டை ஊறுகொடவத்தயில் உள்ள எண்ணெய் குழாய்க்கு வைப்பதற்காக பரிபூரணன் கொண்டு சென்றார்.

முதல் இரு குண்டுகளும் வெடித்து விட்டன. எனினும் எதிர்பார்த்ததுபோல பெரும் சேதம் ஏற்படவில்லை.

எண்ணெய் குழாய்கள் செல்லும் பாதைகளை கண்டுபிடித்து திட்டம் தீட்டியவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள். அவர்களுக்குத்தான் குறிப்பிட்ட பகுதிகள் நன்கு பரிச்சயமாக இருந்தன. எந்த இடத்தில் குண்டுவைத்தால் பாரிய சேதம் ஏற்படும் என்ற விபரங்களும் அவர்களுக்குத்தான் நன்கு தெரிந்திருந்தது.

திட்டம் தீட்டியவர்கள் யாழ்ப்பாணம் சென்றுவிட்டு திரும்பிவர முடியவில்லை. அதனால் திட்டம் மட்டும் கொழும்புக்கு வந்தது.

வரதன், பரிபூரணன், குட்டி ஆகியோருக்கு தாம் நடவடிக்கையில் ஈடுபடப்போகும் பகுதிகள் பரிச்சயமானவையாக இருக்கவில்லை.

அதனால் குண்டுவைப்பதில் சில தவறுகள் நேர்ந்தன. எனவே இரு குண்டுகள் வெடித்தபோதும் எதிர்பார்க்கப்பட்ட விளைவு ஏற்படவில்லை.

மூன்றாவது குண்டுடன் ஊறுகொடவத்தக்கு சென்ற பரிபூரணனும் இலக்கை சென்றடைய கஷ்டப்பட்டார். எப்படியோ நுழைந்து குண்டை பொருத்திக் கொண்டிருக்கும்போது, பொலிசார் வந்துவிட்டனர்.

தப்பிச்செல்ல வழியே இல்லை என்று தெரிந்துவிட்டது. என்ன செய்யலாம்? யோசிக்கவோ, தாமதிக்கவோ நேரம் இல்லை.

கொண்டுசென்ற குண்டை வெடிக்க வைத்து தன்னை அழித்துக்கொண்டார் பரிபூரணன்.

பரிபூரணன் ஊர்காவத்துறையைச் சேர்ந்தவர். ஈரோஸின் மாணவர் அமைப்பில் உறுப்பினராக இருந்தவர்.

பரிபூரணனின் மறைவுக்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பும் அஞ்சலி வெளியிட்டு கௌரவம் செய்தது.

ஈரோஸ் அமைப்பு திட்டமிட்டிருந்தபடி குண்டுவெடிப்பு நடத்திருந்தால் எண்ணெய் குதம்வரை தீ பரவி, கொழும்பு நகரமே உருமாறியிருக்கும்.

ஆனால், நடவடிக்கையின் போது ஏற்பட்ட சில தவறுகளால் குண்டுவெடிப்பு பாரிய சேதத்தை ஏற்படுத்தவில்லை.

கொழும்பில் முதன் முதலாக பாரிய பொருளாதார இலக்குக்கு குறிவைக்கப்பட்ட நடவடிக்கை அதுதான்.

### அத்துலத் முதலிக்கு குண்டு

22.10.84 அன்று கொழும்புக்கும் வத்தளைக்கும் இடைப்பட்ட பேலியகொடவில் ஒரு பார்சல் கிடந்தது. அந்த வழியாக சென்ற இருவருக்கு பார்சலை கண்டதும் ஆசை வந்துவிட்டது.

உள்ளே பெறுமதியான பொருட்கள் ஏதாவது கிடக்கலாம். காலையிலேயே அதிஷ்டம் தேடிவருகிறது. விடுவானேன்.

பார்சலை எடுத்துப் பிரித்தனர்.

குண்டு வெடித்தது.

இருவரும் பலியானார்கள்.

அன்றைய தினம் கொழும்பின் பல இடங்களில் குண்டுகள் வெடித்தன.

கொழும்பு கொச்சிக்கடையிலுள்ள துறைமுக பொலிஸ் நிலையம் முன்பாக ஒரு குண்டு வெடித்தது. இன்னொரு குண்டு புகையிரத நிலையத்திற்கு முன்பாக வெடித்தது. அதன் அருகிலுள்ள இரவுச் சந்தை முன்பாக மூன்றாவது குண்டு வெடித்தது.

மருதானையில் உள்ள டவர் மண்டபம் முன்பாகவும் பலத்த சத்தத்துடன் குண்டு வெடித்தது.

ஒரே நாளில் கொழும்பின் பல இடங்களில் குண்டுகள் வெடித்தன. அதனால் பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டது.

அதே நேரம் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்தலத் முதலியின் வீட்டுக்கு அருகிலும் ஒரு வெடிகுண்டு பார்சல் வைக்கப்பட்டது. அது கண்டுபிடிக்கப் பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அருகேயும் வெடிகுண்டு பார்சல் ஒன்று வைக்கப்பட்டது. அதுவும் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப் பட்டது.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் ஈரோஸ் இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்டன.

### மலை உச்சியில் ஒரு தாக்குதல்

பேதுருதாலகால மலையின் உச்சியில் ஒரு இராணுவ முகாம் அமைந்திருந்தது. அங்கிருந்த ரூபவாகினி தொலைக்காட்சி அஞ்சல் கோபுரத்திற்கு பாதுகாப்பாகவே முகாம் இருந்தது.

மலையகமும் ஈழத்தின் ஒரு பகுதி

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

என்பதுதான் ஈரோசின் கொள்கை. அதனால் மலையகத்தில் ஒரு தாக்குதல் நடத்த திட்டமிட்டது ஈரோஸ்.

நிலத்தில் இருந்து ஏறக்குறைய 8281 அடி உயரமான இடத்தில் மலையின் உச்சியில் இருந்தது இராணுவமுகாம். தொலைக்காட்சி கோபுரம்தான் இலக்கு.

மலையகத்தைச் சேர்ந்த கிருஷ்ணன், மலையகத்தில் தலவாக்கலையைச் சேர்ந்த வரதன் ஆகியோருடன் ஈரோசின் முக்கிய உறுப்பினரான வரதனும் (ஜ.பி.ரி.வரதன்) இணைந்து நடவடிக்கையில் பங்குகொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

மலையில் வழிகாட்டிச் செல்வதற்கு ஒருவர் தேவைப்பட்டார். அவர் இயக்க உறுப்பினரல்ல. ஆனாலும் மலை ஏறுவதில் கெட்டிக்காரர்.

அவர் வழிகாட்டிச் செல்ல மூவரும் மலையில் ஏறினார்கள். உச்சிக்கு வந்து விட்டனர்.

தொலைக்காட்சி அஞ்சல் கோபுரம் உயர்ந்து நின்றது. நெருங்கிவிட்டோம் என்று நிம்மதிப் பெருமூச்சு மூவருக்கும்.

இராணுவ முகாம் காவலரணில் இருந்தவர்கள் தங்களை கவனித்துவிட்டது போல மூவருக்கும் ஒரு உறுத்தல். அதனால் பதட்டம்.

இருப்பதோ மலை உச்சியில். பழக்கமில்லாத சூழல். கண்டுபிடித்துவிட்டார்கள் என்றால் தப்பிச்செல்ல வாய்ப்பே இல்லை என்றும் தெரிந்தது.

பதட்டம் காரணமாக தொலைக்காட்சி அஞ்சல் கோபுரத்தை நோக்கிச் செல்ல முடியவில்லை.

காவலரணுக்கு பின்புறமாக குண்டை வைத்துவிட்டு வந்துவிட்டார் கிருஷ்ணன்.

மூவரும் சென்ற வழியே இறங்கி வந்துவிட்டனர்.

மலை உச்சியில் குண்டு வெடித்தது.

காவலரணில் இருந்த இராணுவ கோப்ரல் ஒருவர் உட்பட நால்வர் பலியானார்கள்.

தொலைக்காட்சி அஞ்சல் கோபுரம் தப்பிவிட்டது.

### ரயில் நிலையத்தில்

இலங்கை அரசுக்கு பிரிட்டிஷ் அரசு இராணுவ உதவிகளை தாராளமாக வழங்கியது.

இலங்கை இராணுவத்துக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் பயிற்சி கொடுப்பதாகவும் இயக்கங்கள் குற்றம் சாட்டியிருந்தன.

பிரிட்டிஷ் பிரதமர் மாக்கிறட் தட்சர் கொழும்புக்கு விஜயம் செய்தார்.

ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிடும் என்று கருதி கொழும்பில் பொலிசாரும், இராணுவத்தினரும் குவிக்கப் பட்டிருந்தனர்.

கட்டு நாயக்கா செல்லும் புகையிரதத்தில் ஈரோஸ் உறுப்பினர்கள் இருவர் ஏறிக்கொண்டனர். ஒருவர் வரதன். இன்னொருவர் சகுந்தலா. தம்பதிகள் போல பணயம் செய்தனர்.

கட்டுநாயக்கா புகையிரத நிலையம் கட்டுநாயக்கா விமான நிலையம் அருகே இருந்தது. கட்டுநாயக்கா புகையிரத நிலையத்தில் தம்பதிகள் போலவே இறங்கி, குண்டை வைத்துவிட்டு நடையைக் கட்டினார்கள்.

குண்டு வெடித்தது.

புகையிரத நிலையமும், நான்கு புகையிரதப் பெட்டிகளும் முற்றாக சேதம் அடைந்தன.

மார்க்கிறட் தட்சரின் விஜயத்தின் போது குண்டுவெடிப்பு நடைபெற்றமை யால் அரசாங்கத்திற்கு பெரும் சங்கடமாகப் போய்விட்டது.

### விருந்தில் குண்டு

29.04.84 கொழும்பில் உள்ள இராணுவ தலைமையக கட்டிடத்திற்குள் விருந்து வைபவ ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தது.

இரண்டுபேர் பழைய பேப்பர்களை பொறுக்குவதுபோல பாசாங்கு செய்தபடி இராணுவ தலைமையக கட்டிடப்பகுதிக்குள் சென்றுவிட்டனர்.

விருந்து கொண்டாட்ட ஏற்பாடுகளில் கவனம் இருந்தமையால் பழைய பேப்பர் பொறுக்குபவர்களது நடமாட்டத்தை யாரும் கவனிக்கவில்லை.

இருவரும் இராணுவ தலைமையக கட்டடத்தில் குண்டை மறைத்து வைத்துவிட்டு திரும்பிவிட்டனர்.

இரவு விருந்து வைபவம் ஆரம்பமானது. சரியாக இரவு 8.20 மணிக்கு குண்டு வெடித்தது.

இராணுவ ஆலோசகர்கள் நால்வர் உட்பட இரண்டு இராணுவவீரர்கள் பலியானர்கள்.

இராணுவ தலைமையகம் அருகில் இருந்த தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கும் பாதிப்பு ஏற்பட்டது.

குட்டி, கண்ணன் ஆகிய ஈரோஸ் உறுப்பினர்கள் அந்த நடிவடிக்கையில் பங்கு கொண்டனர்.

பாகிஸ்தான் ஜனாதிபதி சியாவுல் ஹக் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

பாகிஸ்தானும் இலங்கை அரசுக்கு இராணுவ உதவிகள், பயிற்சிகள் என்பவற்றை வழங்கிவந்தது.

அதனால் சியாவுல் ஹக் விஜயம் செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் குண்டு வெடிப்பு நடத்த ஈரோஸ் முடிவு செய்தது.

அது தொடர்பாகவும், கொழும்பில் திட்டமிடப்பட்ட பாரிய தாக்குதல் நடவடிக்கை தொடர்பாகவும் அடுத்தவாரம் சொல்கிறேன்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# விழித்துவரும் மலையகம்!

அலசுவது– இராஜதந்திரி

# பூசக்கூடாத 'பயங்கரவாதச்' சாயம்!

சிறையில் விசாரணைகள் எதுவுமின்றித் தடுத்துவைத்துள்ள மலையக இளைஞர்களின் நிலை கவலையளிப்பதாக இருக்கின்றது.

இந்த இளைஞர்களுடனேயே இருக்கும் வடக்கு–கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த ஏனைய தமிழ்க்கைதிகளின் நிலையும் கவலை தருவதாக உள்ளது.

இருமாதங்களுக்கு முன்னர் மகஸீன் சிறையிலிருந்த தமிழ்க்கைதிகள் மீது காவலுக்கு நின்ற சிறைச்சாலை ஜெயிலர்கள் தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.


பிரதி அமைச்சர் பெரியசாமி சந்திரசேகரன், சிறையில் விசாரணைகளின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையகத் தமிழ் இளைஞர்கள் குறித்து ஜனாதிபதிக்கு அவசரக் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

இக் கடிதத்தில் அநாவசியமாகச் சிறையிலடைக்கப்பட்டுள்ள மலையகத் தமிழ்க் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யும் படியும் ஜனாதிபதியிடம் பிரதி அமைச்சர் சந்திரசேகரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

திரு.பெரியசாமி சந்திரசேகரனின் கடிதத்தை ஒரு பிரதி அமைச்சர் சிறையிலிருப்போர், அதாவது குற்றச்சாட்டுகள் எதுவுமின்றி, விசாரணைகள் எதுவுமே நடத்தப்படாமல் சிறையிலடைக்கப்பட்டிருப்போரின் மனநிலையை ஜனாதிபதி சந்திரிகாகூட நன்கு அறிந்து வைத்திருப்பார்.

ஏனெனில் அவரது கணவரான காலஞ்சென்ற விஜய குமாரதுங்ககூட ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் ஒரு சந்தேக நபராக சிறையிலடைக்கப்பட்டிருந்தார்.

அப்போது ஒரு குடும்பப்பெண் என்ற அந்தஸ்த்தில் மட்டுமே இருந்த ஜனாதிபதி சந்திரிகா, தமது கணவரைக் காண்பதற்கு வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்றதுடன், சில சமயங்களில் சிறைச்சாலை திறக்கப்படும் நேரத்துக்காகக் காத்திருக்க வேண்டியுமிருந்தது.





சிறை வைக்கப்பட்டிருப்பவரின்

## மலையக இளைஞரின் விடுதலை வேண்டி

## ஜனாதிபதிக்கு ஒரு முன்னாள் கைதியின் கடிதம்!

இத்தாக்குதல் சிறையில் உள்ள தமிழ்க்கைதிகள் எதிர்நோக்கியுள்ள பயமுறுத்தல்களை வெளிப்படுத்தியது அத்துடன் விசாரணைகள் எதுவுமின்றி

நாட்கணக்கில் தமிழ் கைதிகள் தடுத்து வைக்கப்படவேண்டியதன் அவசியம் தான் யாது? என்ற கேள்வியைக் கேட்கத் தூண்டுவதாகவும் இருந்தது.

வடக்கு–கிழக்குத் தமிழ் இளைஞர்களைப் பொறுத்தவரை சிறைவாசம் என்பது அவர்களது வாழ்க்கையின் ஓர் அம்சமாகிவிட்ட துர்ப்பாக்கிய நிலையே காணப்படுகின்றது.

ஆயிரமாயிரம் வடக்கு–கிழக்குத் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் இரும்புக் கம்பிகளுக்குள் முகம் புதைத்து ஏங்கி நின்ற அனுபவத்தைக் கொண்டுள்ளார்கள்.

அவ்வாறு ஏங்கி நின்றவர்களில் பலர் மரண தேவதையையும் அணைத்துக்கொண்டுள்ளார்கள்.

பாதுகாப்புக் காரணங்கள் என்றும், சந்தேக நபர்கள் என்றும் கூறி கூண்டுகளுக்குள் தள்ளப்படும் அப்பாவித் தமிழ் இளைஞர்களது வாழ்நாளில் பெரும் பகுதி சிறைச்சாலைகளிலேயே கழிந்துவிடுகின்றது.

இச்சிறைச்சாலை வாசம் என்பது மலையகத்தமிழ் இளைஞர்களை நோக்கியும் திசைமாறியிருப்பதே வேதனையளிப்பதாக இருக்கின்றது.

ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதமாக மட்டும் கொள்ளலாகாது.

சிறைவாசத்தின் அவஸ்த்தையை– அவலங்களை நன்கு அனுபவித்த ஒரு முன்னாள் கைதியின் கடிதமாக அக்கடிதத்தைக் கருதுவதே பொருத்தமானதாகும்.

கடந்த கால ஆட்சியில் இன்றைய பிரதி அமைச்சரான பெரியசாமி சந்திரசேகரன் கூட எல்.ரி.ரி.ஈ.யினருக்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச் சாட்டின்பேரில் தடுப்புக்காவலில் நீண்ட நாட்கள் வைக்கப்பட்டிருந்தார்.

ஆனால் அவர், சிறையிலிருந்தவாறே துணிவுடன் நீதிமன்றத்தைச் சந்தித்து, தாம் ஒரு நிரபராதி என நிரூபித்து விடுதலையானார்.

பின்னர் தமது மலையக மக்கள் முன்னணிக்கட்சி சார்பில் போட்டியிட்டு, இன்று மலையகத்தில் ஒரு முக்கிய அரசியல் புள்ளியாகவும், பொது ஜனஐக்கிய முன்னணி அரசில் பிரதி அமைச்சராகவும் திரு.சந்திரசேகரன் இடம்பிடித்துள்ளார்.

மனநிலை பற்றி மட்டுமல்ல; அவருக்காக வெளியே ஏங்கி நிற்பவரது மன உளைச்சல் குறித்தும் அமரர் விஜய குமாரதுங்கவின் சிறைவாசம் மூலமாக ஜனாதிபதி சந்திரிகா நன்கு அறிந்து வைத்திருப்பார் என்றே எண்ண முடியும்.

உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி தமது விடுதலையை வலியுறுத்தப் போவதாக–தடுப்புக்காவலில் உள்ள மலையகத் தமிழ்க்கைதிகள் கடந்த வாரம் தெரிவித்திருந்தனர்.

மலையகத்தமிழ் இளைஞர்களைப் பொறுத்தவரை அவர்கள் மிகவும் பின்தங்கிய சூழ்நிலைகளில் இருந்து வந்தவர்களாக இருக்கின்றனர்.

காலத்துக்குக்காலம் பதவிக்கு வரும் ஆட்சியாளர்களின் மாற்றாந்தாய் மனப்பான்மை காரணமாக மலையகத்தவர்கள், தமது நாளாந்த ஜீவனோபாயத்துக்கு பெரும் போராட்டமே நடத்தி வருகின்றனர்.

உணவு, உடை, உறையுள் என்ற அடிப்படை அம்சங்கள் உட்பட கல்வி, போக்குவரத்து, சுகாதாரம் போன்ற அனைத்துத் துறைகளிலும் மலையகத்தவர்கள் மிகவும் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆங்கிலேயர்கள் மலையகத்தவர்களின் உதிரத்தில் வளம்பெற்றார்கள்.

ஆனால் இன்றைய ஆட்சியாளர்களும், அரசியலாளர்களும் அம்மக்களின் உதிரத்தைமட்டும் உறிஞ்சவில்லை; அவர்களது வாக்குகளைக்கூட ஆசை வார்த்தைகளைக் கூறி அபகரிப்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளனர்.

மலையகத்தமிழ் மகன் ஒருவன் சிறையிலிருக்கும் பட்சத்தில் அவனை நம்பியிருக்கின்ற குடும்பத்தவரும் பாதிப்புக்களை எதிர்நோக்குகிறார்கள். தமது வாழ்க்கையை நடத்த தினமும் உழைத்து வாழும் இந்த மலையக மக்களின் வயிற்றில் உதைக்கும் ஒரு செயலாகவும் அப்பாவி மலையக இளைஞர்களைச் சிறையிலிடும் நடவடிக்கைகள் விளங்குகின்றன.

மலையகத்தவர்கள் அனைவருமே தொண்டமான்களாகவும், சந்திரசேகரன்களாகவும், முத்தையா முரளிதரன்களாகவும் வசதி வாய்ப்புக்களுடன் வாழவில்லை.

அம்மக்களின் 90 வீதத்துக்கும் மிக அதிகமானோர் வறுமைக்கோட்டின் கீழேயே வாழ்க்கை நடத்துகிறார்கள்.

அண்மையில்கூட மலையகத் தொழிலாள மக்கள் தமக்கு வேதன உயர்வு வேண்டி வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

எனவே தமது நாளாந்த வாழ்க்கையை நடத்தவே பெரும் போராட்டம் நடத்தும் ஒரு சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களை தகுந்த விசாரணைகளின்றி சிறையிலடைத்து வைப்பது, அந்த இளைஞர்களின் மனவிரக்திக்கே வழியமைப்பதாக இருக்கும்.

மலையகத் தோட்டத் தொழிலாள மக்கள் தமது தாய்மொழி, மதம், மற்றும் தாம் சார்ந்த பழக்கவழக்கங்களைப் பேணித் தமது தனித்துவங்களைக் கட்டிக் காப்பதில் ஆர்வங்காட்டி வருகின்றனர்.

மலையகத் தொழிலாளர்களில் அநேகர் தமிழர்களாக இருப்பதாலும் அவர்களிடையே அரசியல், சமூக, பொருளாதார ரீதியாகத் தோன்றிவரும் விழிப்புணர்வு குறித்தும் பேரினவாத சக்திகள் கலக்கமடையலாம்.

ஆனால் நெடுங்காலமாகவே அடக்கி, ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த இம்மக்களின் விழிப்புணர்வை இனவாதக் கண்ணோட்டத்துடன் பார்ப்பதைத் தவிர்த்து, மனிதாபிமானத்துடனேயே நோக்கவேண்டும்.

இனவாத ரீதியாகவும், வேறு குறுகிய கண்ணோட்டங்களுடனும் மலையக மக்கள் அணுகப்படும்போது அவர்களுக்கும் அவர்களைச் சூழவர இருக்கும் பெரும்பான்மை சமூகத்தினருக்குமிடையேயான இடைவெளி அகலமடையவே செய்யும்.

இதனைத் தவிர்ப்பதற்கு ஆட்சியதிகாரத்தில் இருப்போர் உடனடியாகச் செயலிலிறங்க வேண்டும்.

இலங்கையின் பிரதான இனப்பிரச்சினையான வடக்கு–கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கே திக்குத்திசை தெரியாது ஆட்சியிலிருப்போர் அங்கலாய்த்து நிற்கின்றனர்.

இத்தருணத்தில் இலங்கையில் மற்றுமொரு சமூகத்தினரின் அல்லது மற்றுமொரு பிரதேசத்தினரின் பிரச்சினையை பூதாகரமாகத் தோற்றம் பெற அனுமதிக்கலாகாது.

மலையகத் தமிழ் இளைஞர்கள் தவறிழைத்துள்ளார்கள்; அல்லது தவறான செயல்களுக்கு உடந்தையாக இருந்துள்ளார்கள் என்றால் அவர்கள்மீது குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்து நீதிமன்ற விசாரணையை துரிதப்படுத்த வேண்டும்.

இதன்மூலமே அந்த இளைஞர்களுக்கும் தாம் செய்த தவறு என்ன என்பதை அறியமுடியும். கூடவே தாம் நிரபராதிகளாயின் நீதிமன்றில் அதை நிரூபித்து விடுதலையாகவும் முடியும்.

அடிப்படை மனித உரிமைகள், ஜனநாயகம் என்று பேசுவோர், முதலில் சிறைக்கூண்டுகளில் உள்ள குற்ற மற்றவர்களையே விடுதலைசெய்ய வேண்டும்.

நாளுக்குநாள் தமது மேம்பாடு குறித்து விழிப்புணர்வு அடைந்து வரும் மலையகத் தமிழ் மக்களின் மேம்பட்ட அபிலாஷைகள், உணர்வுகளை தட்டிக்கொடுத்தவர்களையும் இந்தநாட்டின் அனைத்து உரிமைகளையும் பெற்ற பிரஜைகளாக வாழச் செய்யவேண்டும்

இதைவிடுத்து அவர்களது விழிப்புணர்வுக்கு பயங்கரவாதச் சாயம் பூசுவது, நாட்டின் முழுமையான மேம்பாட்டுக்கு ஒவ்வாத ஒரு காரியமாகவே அமையமுடியும்.

# இளைஞர் கலைஞரின் 70 பதில்கள்

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு 70 கேள்விகளை அவருக்கு அனுப்பியது ஃபிரான்ஸ் ஈழகேசரி. 73 வயது இளைஞரான கலைஞர் சொன்ன சுவையான பதில்கள் முரசு வாசர்களுக்காக தரப்படுகிறது. (நன்றி-ஈழகேசரி)

**1.சிறு வயதில் உங்களை என்ன செல்லப் பெயரில் அழைத்தார்கள்?**

-தம்பி.

**2.நீங்கள் அதிக முறை உச்சரிக்கும் பெயர் எது?**

-அண்ணா.

**3.உங்களை வாய்விட்டுச் சிரிக்கச் செய்த ஜோக் எது?**

-முதலமைச்சர் ஜெயலலிதா தன்னை திராவிட இயக்கத்தின் 'பரிணாம வளர்ச்சி' என்று கூறிக்கொண்டது.

**4.உங்கள் முதல் வருமானத்தில் செய்த முதல் செலவு என்ன?**

-வாங்கியிருந்த கடனைத் திருப்பிக் கொடுத்தது.

**5.பிற குழந்தையின் அழுகுரல் எதை உணர்த்துகிறது?**

-'ங்கா' 'ங்கா' என்று குழந்தை அழுவது 'இங்கா வந்து பிறந்தேன்?' என்று உலகைக் கண்டு நடுங்குவது போல் இருக்கின்றது என்று கவிஞர் கு.மா.பா. எழுதியது நினைவுக்கு வருகிறது.

**6.கறுப்பு, சிவப்புத் தவிர உங்களைக் கவர்ந்த வேறு நிறம் என்ன?**

-வான வில்லின் நிறம்.

**7.திருவாரூர் என்றதும் முதலில் உங்கள் நினைவுக்கு வருவது எது?**

-நான் படித்த உயர் நிலைப் பள்ளி.

**8.புகழுக்கு எல்லை எதுவரை?**

-தடுக்கி விழும்வரை!

**9.பயணத்தின் போது மறக்காது எடுத்துச் செல்வது எதை?**

-உரையாற்றத் தேவையான குறிப்புக்களை.

**10.சிறு வயதில் எந்த விளையாட்டை மிகவும் ரசித்து விளையாடினீர்கள்?**

-சடுகுடு.

**11.நீங்கள் அடிக்கடி முணுமுணுக்கும் பாடல் வரி எது?**

அழைக்கின்றார்......
அழைக்கின்றார்.....

**12.பசி, உறக்கம், இரண்டில் எது இல்லாமல் இருந்தால் நலம்?**

-இரண்டும் அளவுடன் இருக்க வேண்டும்.



**13.சூரியன் உதிக்காமல் போனால் என்ன ஆகும்?**

-அகிலத்திலானாலும், அரசியலிலானாலும் அந்தகார இருள் கப்பிக் கொள்ளும்.

**14.காதில் ஒலித்துக் கொண்டே இருக்க விரும்பும் தமிழ்ச் சொல் எது?**

-தமிழ்ச் சொல்.

**15.இரவில் மொட்டை மாடியில் படுத்துக்கொண்டே நட்சத்திரங்களை ரசிப்பதுண்டா?**

-உண்டு. வானத்து நட்சத்திரங்களை!

**16.எந்த இசையைக் கேட்டால் மெய் மறந்து நிற்பீர்கள்?**

-குழலிசை.

**17.தூக்கத்தில் எந்த மாதிரிக் கனவுகள் அடிக்கடி வரும்?**

-மேடையில் பேசுவது போன்ற கனவுகள்.

**18.உங்களை அண்மையில் வியக்க வைத்தவர் யார்?**

-தன்னை விட ஐந்து வயது அதிகமான பெண்மணியை மணந்த இந்திய கிரிக்கெட் வீரர்.

**19.விளையாட்டு வீரனின் வியர்வைக்கும், விவசாயின் வியர்வைக்கும் என்ன வித்தியாசம்?**

-விளையாடுபவன் வியர்வை பரிசுகளைக் குவிக்கும். விவசாயியின் வியர்வை தரிசுகளை விளைநிலமாக்கும்.

**20.நீங்கள் அடிக்கடி பயன்படுத்தும் திருக்குறள் என்ன?**

'நன்னுற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர் பண்பறிந்தாற்றக் கடை'

**21.தனிமை நாடிச் செல்லும் இடம் எது?**

-குளியலறை.

(மிகுதி அடுத்த வாரம்)


படிப்பகம்

www.padippakam.com

காரலோஸ் என்பதை சுருக்கமாக்கி "'மிஸ்டர் கே' பிளீஸ்" என்றது போனில் பெண்ணின் மென் குரல். அழைப்பை எதிர்பார்த்திருந்த கார்லோஸ், "'கே'தான் இங்கே." என்றான். மறுமுனையில் பெண் குரல் ஒதுங்க, ஆண்குரல் வந்தது.

அவன் தன் பெயர் 'அஹமட்' என்றான். சிரியாவில் போதை மருந்து கடத்தல் சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி. அடிக்கடி பெயர் மாறும்.

"நாங்கள் எப்போது நேரில் சந்திக்கலாம்?" என்றான் ஆர்வமான குரலில் அஹமட்.

கார்லோஸுக்கு வேறு வேலை எதுவும் இருக்கவில்லை. என்றாலும் வேண்டுமென்றே தாமதித்து, "இன்று மாலை 6.45க்கு நான் ஓய்வாகத்தான் இருப்பேன்."

"தட்ஸ் குட். ஆறரை மணிக்கு நாங்கள் சந்திப்போம். எனது ஆளை அனுப்புகிறேன். இடையிலே சில சிரமங்கள் உங்களுக்கு தரவேண்டியிருக்கும். அதற்காக இப்போதே மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்."

"என்ன சிரமங்கள்?"

"எமது இரகசிய இடத்திற்கு வருவதற்கு இடையில் நாலு கார்கள் மாறவேண்டியிருக்கும். பாதுகாப்புக் காரணத்திற்காகத்தான்!"

"அதில் என்ன சிரமம்? எனக்கு பழக்கமான விஷயம்தானே!"

"மிக்க மகிழ்ச்சி. நாம் நேரில் சந்திப்போம் அந்த நேரத்திற்காக காத்திருக்கிறேன்."

மாலையில் 'அஹமட்' அனுப்பிய ஆளுடன் கார்லோஸ் புறப்பட்டான். போதை மருந்துக் கடத்தல்காரர்கள் என்றாலும், அவர்களிடமும் ஒரு இரகசிய இயக்கத்துக்குரிய கட்டுப்பாடும், பயங்கரமான விழிப்பும் காணப்பட்டது. ஒவ்வொரு நடவடிக்கையையும் திட்டமிட்டுக் கவனமாகச் செய்கிறார்கள். புறப்பட்டதிலிருந்து அஹமட்டின் இரகசிய இல்லத்தை அடையும்வரை கார்லோஸ் கவனித்து வியந்தது அதனைத்தான்.

அஹமட் சராசரி உயரத்தில், மீசை இல்லாமல், சின்னதாய் ஒரு தொந்தியோடு இருந்தான். அஹமட்டை விட, அஹமட்டுக்கு அருகில் நின்றவளைத்தான் கார்லோஸ் கூடுதலாகக் கவனித்தான். மார்பின் பிளவு தெரியக்கூடிய உடையில், அதீதமான வளர்ச்சிகள் மற்றும் திரட்சிகளோடு கார்லோஸை முதல் பார்வையிலேயே கவர்ந்தாள். நாசூக்காக ஒரு புன்னகை சிந்தினாள்.

அஹமட் கட்டித்தழுவி கார்லோஸை வரவேற்றான். திடமான தேகம் அஹமட்டுக்கு. அவள் கையை நீட்ட பற்றிக் குலுக்கினான் கார்லோஸ். மனதுக்குள் கார்லோஸ் நினைத்தான், 'இது தொடுவதின் தொடக்கம்'

'ஷானுகா' என்று அவளை அறிமுகம் செய்தான் அஹமட். ஆங்கிலோ இந்தியப் பெண்ணாக இருக்கலாம். பெயர் நிச்சயம் பொய் என்று புரிந்தது.

அஹமட் கார்லோஸை விழுந்து விழுந்து உபசரித்தான் "இரவு உணவை முடித்துவிட்டுப் பேசலாமே!" என்றான்.

இரவு உணவு அஹமட் வீட்டின் நிலவறையில்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உள்ளே கிட்டத்தட்ட சொர்க்கம். மங்கலான வெளிச்சம். சுவரில், தரையில், மேசைவிரிப்பில், பரிமாறும் பெண்களில் என்று சகலதிலும் பணம் கொடுத்த செழிப்பு.

பெண்களை மட்டுமே பரிமாற விட்டிருந்தான் அஹமட். அவர்கள் வேறு எதையெல்லாமோ பரிமாறத்தயார்போல தெரிந்தார்கள். ஆடைகளில் வேண்டுமென்றே அதீதமான சிக்கனம். கார்லோஸின் ரசனை அறிந்து அஹமட் செய்த ஏற்பாடு.

ஷானுகாவும் விருந்தில் கலந்து கொண்டாள். அடிக்கடி உடலை முன்னே சரித்து அவஸ்தைப்படுத் தினாள். கழுத்துக்கு கீழே பாதித்தொலைவுவரை பார்வைக்கு அனுமதி இலவசம்.

விருந்தெல்லாம் முடிந்ததும் கார்லோஸ் பொதுவாகச் சொன்னான்,

**கார்லோஸுக்கு தமது நாடுகளில் தங்கிச்செல்ல வழங்கப்பட்ட சலுகைகளை ஐரோப்பிய நாடுகள் நிறுத்திக்கொண்டன. ஜெர்மனியில் இருந்து சிரியா செல்கிறான் கார்லோஸ். கார்லோஸின் பாதை மாறுகிறது. இனி...**

"எல்லாமே பிரமாதம்!"

கார்லோஸ் சொன்னதை புரிந்து கொண்டு அஹமட் ஒரு குறுநகையோடு சொன்னான்: "எல்லாவற்றையுமே சுவை பார்க்கவில்லையே இன்னமும்."

இரவு அஹமட்டின் அறையில் கார்லோஸும், அஹமட்டும் மட்டுமே தனியாக அமர்ந்து நீண்டநேரம் பேசினார்கள்.

முடிவில் கார்லோஸ் சொன்னான்:

"உங்கள் கூட்டத்துக்கு நான் தேவையானால், நான் சொல்லும் நிபந்தனைகளுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்."

"என்ன நிபந்தனை?"

"எந்தவிதிமுறைக்கும் நான் கட்டுப்பட மாட்டேன். என் சுதந்திரதில் யாருடைய குறுக்கீடும் இருக்கவே கூடாது. நான் எப்போது விரும்புகிறேனோ அப்போதே விலகி விடுவேன்."

"எதிர்பார்த்ததுதான்! அநேகமாக ஓ.கே. எதற்கும் கொலம்பியாவில் உள்ளவர்களுடன் பேசிவிட்டு முடிவு சொல்கிறேனே!"

"செய்! இப்போது நாம் பிரிவோம், மீண்டும் சந்திப்போம்!" என்றான் கார்லோஸ்.

கொலம்பியாவை மையமாக வைத்து இயங்கிய போதைக் கடத்தல் கும்பல் கார்லோஸை தங்கள் வழிகாட்டிபோல ஏற்றுச் செயல்பட முடிவுசெய்தது.



கார்லோஸ்

# 16 கார்லோஸ் உலகைக் கலக்கிய மனித வெடிகுண்டு

பிட்ட ஒரு வீதத்தை சாதிக்கிடம் கொடுத்துவிட வேண்டும்.

கோடி கோடியாகப் பணம். தலையணையில் பஞ்சுக்குப் பதிலாக பணத்தை நிரப்பி வைத்துக்கொண்டு தூங்கலாம். அப்படிப்பட்ட சாதீக் கனவில் சமீப நாட்களாக ஒரு பெண் வந்து தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிறாள்.

சாதீக் தொடாத அழகிகளா? என்றாலும் சமீபத்தில் நடந்த விருந்தொன்றில் அறிமுகமான அந்த அழகியிடம் ஏதோ ஒரு புதுமை. அந்த ஆப்பிள் கன்னங்கள். அந்த ஈரலிப்பான உதடுகள். அந்த... நினைக்கவே கிறக்கமாக இருந்தது.

# 30 இலட்சம் அமெரிக்க டொலர்கள்

உலகெங்கும் போதைக் கடத்தலை நடத்தும் பயங்கரமான தொழிலுக்கு எதிரிகள் அதிகம். கார்லோஸ் போன்ற ஒருவன் கிடைத்தால் எதிரிகளை கலங்கடிக்கலாம்.

கார்லோஸுக்கும் ஐரோப்பா கதவுகளை சாத்திவிட்டதால், வேறொரு பின்பலம் தேவைப்பட்டது.

போதைக் கடத்தல் கும்பலுக்கு உலகெங்கும் ஆட்கள் இருக்கிறார்கள். சர்வதேச ரீதியில் வலைப்பின்னலை உருவாக்கி நடத்தப்படும் தொழில். அதனால் பெரியதொரு இயக்கமே கையில் இருப்பதுபோல தைரியம் வரும். தலைமறைவாக இருக்கவும் பாதுகாப்புக் கிடைக்கும். தாராளமான பணமும் கிடைக்கும். அதனால் கார்லோஸும் போதைக் கடத்தல் சாம்ராச்சியத்தின் அழைப்பை ஏற்றுக் கொண்டான்.

கார்லோஸ் திரும்பிச் செல்லும்போதும் நான்கு கார்கள் மாறினான்.

நான்காவது காரில் ஆச்சரியம் காத்திருந்தது. சாரதி ஆசனத்தில் அமர்ந்திருந்தாள் ஷானுகா. கார்லோஸ் காருக்குள் ஏறி அவள் அருகே அமர, கியர் மாற்றி காரை சீறவிட்டாள். அப்போதுதான் கார்லோஸ் அவளைக் கவனித்தான். குட்டையான கவுன் அணிந்திருந்தாள். முழங்காலுக்கு மேலே அபாய உயரத்தில் இருநதது. கால்களின் வாளிப்புக்கு கண்கள் கூசின.

"எதிர்பார்க்கவில்லையல்லவா?" என்றாள். "ஆமாம்" என்றான் அவள் கால்களை கண்களால் அளவெடுத்துக்கொண்டு.

திடீரென்று ஷானுகா கேட்டாள்: "பிடித்திருக்கிறதா?" கார்லோஸ் சட்டென்று: "ஆமாம், மிக பிரமாதம்" என்றான். "எதைச் சொல்கிறீர்கள்?" என்றாள். "நீ எதைக் கேட்டாய்?" "எங்கள் சாம்ராஜ்யம் பிடித்திருக்கிறதா?" என்றாள்.

"ஆரம்பம்தானே. போகப்போகத்தானே தெரியும். பார்க்கலாம்" என்றான்.

கார்லோஸ் வீட்டின் முன்பாக அவன் காட்டிய இடத்தில் காரை நிறுத்தினாள்.

கார்லோஸ் இறங்கினான். "உள்ளே வரச்சொல்ல மாட்டீர்களா?" என்றாள்.

"வாவ்! ஐஸ்கிரீம் சாப்பிட கூலியா? வா ஷானுகா!" என்றான்.

□×□

சாதீக்-அவர் பெயர் சாதீக். குடியிருப்பது இலண்டனிலுள்ள நைட்ஜ் பிடிட்ஜ் என்னும் இடத்தில்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் தூதுவர் மொஹமட் மஹ்டி அல்-ரஜீரின் சகோதரர்தான் சாதீக்.

எமிரேட்சிலுள்ள எண்ணெய் வியாபாரிகள் தமது எண்ணெய்யை வெளிநாட்டில் விற்பனை செய்யும்போது லாபத்தில் குறிப்

இன்றுதான் வருவதாகச் சொல்லியிருந்தாள். ஏதோ ஒரு அநாதை இல்லம் நடத்துகிறாளாம். நன்கொடை வேண்டுமாம். 'வா பெண்ணே வா. எனக்கு உன் கொடை வேண்டும். உனக்கு நன் கொடை வேண்டும். கொடுக்கல், வாங்கல். ஒன்றைக் கொடுத்து இன்னொன்றைப் பெற்றுக் கொள்ளும் வியாபாரி நான்.' மனதில் சொல்லி ரசித்தார்.

வந்தாள். வழுக்கினார். நெஞ்சில் கனித்தோட்டமா வைத்திருக்கிறாள்? நினைவு தடுமாறினார்.

அவளோ தன் அநாதை இல்லம் பற்றி விளக்கிக் கூறிக்கொண்டிருந்தாள்.

"நேரில் வந்து ஒரே ஒரு முறை பார்வையிடவேண்டும்." என்றாள்.

"பார்வையிடத்தானே விரும்புகிறேன்" என்றார். "அப்படியா. மிக்க மகிழ்ச்சி. இப்போதே போகலாமே. என் காரிலேயே செல்லலாம். அதுதான் இனிய பயணமாக இருக்கும்." என்றாள். இறுதி வார்த்தையை குரலைத் தணித்துச் சொன்னாள்.

சாதீக் புரிந்துகொண்டார். தன்னோடு புறப்பட்ட உதவியாளர்களை "வேண்டாம்" என்றுவிட்டு அவளோடு புறப்பட்டார்.

கார் பறந்தது. குறிப்பிட்ட இடம் வந்ததும் நின்றது. இறங்கினாள். சுற்றி ஓடிவந்து கதவைத்திறந்துவிட சாதீக் இறங்கினார்.

எதிரே பெரும் பங்களா. புல்தரையில் நடந்தார். முன்னால் சென்றவளின் பின்னழகுகள் மட்டும்தான் அவர் கவனத்தில் இருந்தன. அதனால் சூழலை கணிப்பிடத் தவறினார்.

அழைப்புமணியை அவள் அழுத்த முன்னரே கதவு திறந்தது. இருவரும் நுழைய கதவு தானாக மூடியது. அப்போதுதான் சாதீக் கவனித்தார். "இது அநாதை இல்லம் போலவே தெரியவில்லையே!" வாய்விட்டே சொல்லிவிட்டார். ஹோலின் இடதுபக்கத்தில் குஷன் நாற்காலியில் அமர்ந்திருந்தவன் உரத்துச் சிரித்தபடி எழுந்தான்.

"வாருங்கள், எங்கள் கோடீஸ்வர நண்பரே! உங்களை இங்கே அழைத்து வருவதற்காக சின்னப் பொய் ஒன்று சொல்லும்படியாகிவிட்டது. தூண்டிலில் இரை வைத்து மீன்பிடிப்பது மாதிரி" என்றான்.

சாதீக் தான் வசமாக மாட்டிவிட்டோம் என்று புரிந்துகொண்டார். "யார் நீ?" என்றார்.

"வழக்கமான கேள்வி. ஏற்கெனவே ஒரு பொய் சொல்லிவிட்டதால், இப்போது உண்மையைச் சொல்லுகிறேன், நான்தான் கார்லோஸ். இவள் என்பிரிய ஷானுகா. அவர்கள் நம் ஆட்கள். அவர்கள் கைகளில் இருப்பது நூறுசதவீத மரண உத்தரவாத ஆயுதங்கள். இது கார்லோஸின் கோட்டை. தப்பிச் செல்லலாம், இலண்டன் பொலிசார் உங்களை மீட்கலாம் என்றெல்லாம் நினைத்தீர்களானால், எங்களுக்கும் சொல்லி விடுங்கள். உங்கள் ஜோக்கை ரசித்து சேர்ந்தே சிரிக்கலாம்."

ஒரு நொடியில் சாதீக் சகலமும் புரிந்து கொண்டார். முரண்டு பிடித்தால் உயிர் தப்பாது. பொய் உதவாது. கார்லோஸ் ஒரு காரியத்தில் இறங்குகிறான் என்றால், பூரண விபரத்தோடுதான் இறங்குவான்.

"ரைட்! உனக்கு பணம்தான் வேண்டும் என்று நினைக்கிறேன். எவ்வளவு எதிர்பார்க்கிறாய்?"

"குட்! இந்த நேரடி அணுகுமுறை எனக்குப் பிடித்திருக்கிறது. அதனால் முன்னர் நினைத்த தொகையில் சின்னதாக ஒரு தள்ளுபடி செய்கிறேன். ஒரே விலை, பேரமே கிடையாது. 30 இலட்சம் அமெரிக்க டொலர்கள்!"

சாதீக் முகம் சட்டென்று மாறியது.

(தொடர்ந்துவரும்.)



தருவது ரசிகன்

# நள்ளிரவில் நீச்சல்

கடுமையான கோடைதினம். வறுத்து எடுக்கும் வெய்யில். இரவு வந்தது. களைப்பெல்லாம் நீங்கும் வண்ணம் நீச்சல் குளத்தில் குதித்து இஷ்டம்போல் குளிக்க ஆசை வந்தது.

தம்பதியர் இருவரும் கட்டிலிலிருந்து எழுந்தனர். உடைகளைக் களைந்தனர். ஆளுக்கொரு டவலை உம்பில் சுற்றிக்கொண்டனர். தங்களை யாரும் பார்த்துவிடக்கூடாது என்பதற்காக அடிமேல் அடிவைத்து வீட்டைவிட்டு வெளியே வந்தனர்.

காவலர்களின் கண்ணில் படாமல் மறைந்து நீச்சல் குளத்தின் அருகே வந்ததும் தண்ணீரை நோக்கி ஒரே பாய்ச்சல். அதன் பின்னர் இருவரும் இணைந்து நீராட்டம்.

யார் இந்தத் தம்பதியர்? அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டனும், அவரது மனைவி ஹிலாரி கிளிண்டனும்தான். இந்தத் தகவலை குசியான 'மூட்'டில் இருந்தபோது வெளியே சொன்னவரும் ஹிலாரிதான்.

வெளிநாட்டுத் தலைவர்கள் ஒரு நாகரீக வரம்புக்குட்பட்ட வகையில் கிளு கிளுப்பான தகவல்களை வெளியிட்டுவிடுவார்கள்.



# கழுத்தில் ஒரே இறுக்கு



தாய்லாந்தைச் சேர்ந்த அந்த இளம் பெண் தனிமையில் இருந்த சமயம் அவளைத் தந்திரமாக கடத்திச் சென்றுவிட்டான் ஒரு இளைஞன்.

எவ்வளவோ போராடியும் அவனிடம் இருந்து அவளால் தப்பவே முடியவில்லை. பலாத்காரம் செய்யப்பட்டாள். ஒரு கட்டத்தின் பின்னர் அமைதியாகி அவன் இஷ்டப்படியே அனுமதித்தாள்.

எல்லாம் முடிந்தது. இளைஞன் களைத்துப் போய் இருந்தான். அப்போதுதான் வீறுகொண்டு எழுந்தாள் அந்தப் பெண். தன்னுடைய ஆடையை அணிந்து கொள்வதுபோல போக்குக் காட்டிக் கொண்டு, திடீரென்று அவனுடைய கழுத்தை வளைத்து சுற்றினாள்.

தப்பிக்கவே முடியாதமாதிரி ஒரு இறுக்கு. அடுத்த கணமே நாக்கு வெளியே தள்ளி, முழி பிதுங்க, ஆள் குளோஸ்.

'தொலைந்தாயா நாயே' என்ற திருப்தியுடன் பொலிசில் சரணடைந்தாள் அந்தப் பெண்.

# துண்டான விரல்

சீனாவில் கிராமப்புறம் ஒன்றில் ஒரு இளைஞருக்கு சிறிய விபத்தில் சிக்கியதால் விரல் துண்டாக அறுந்து கீழே விழுந்துவிட்டது. உடனடியாக மருத்துவமனைக்கு செல்வதற்கான வாகன வசதியோ, வாய்ப்போ இல்லை. அது குளிர்காலம். வெளியே இறங்கவே முடியாது.

எதற்கும் இருக்கட்டும் என்று துண்டிக்கப்பட்ட விரலை ஒரு பிளாஸ்டிக்பையில் போட்டு வைத்திருந்தார். ஒருவாரம் செல்ல, பனி குறைந்தது. ஆஸ்பத்திரிக்கு ஓடினார். என்ன ஆச்சரியம், உறைபனியின் குளிர்ச்சி அளவுக்கு அதிகமாக இருந்தமையால் துண்டிக்கப்பட்ட விரல் கெட்டுப்போகாமல் அப்படியே இருந்தது. அதனை



மீண்டும் வெற்றிகரமாக பொருத்தி ஒப்பரேசன் செய்து அனுப்பிவிட்டார் டாக்டர்.

# தனியறையில் தவித்த குழந்தை

ஃபேர்மவுண்டில் ரோனால்ட் வோல்ஸ் என்னும் வாலிபருக்கு 21 வயது. ஒரு குழந்தைக்கு அவர் தந்தையானார். பின்னர் என்ன செய்தார் தெரியுமா? இதென்ன கேள்வி. குழந்தையை தாலாட்டி, சீராட்டி, கண்ணே, மணியே டார்லிங் என்று பாராட்டி வளர்த்திருப்பார் என்றுதானே நினைக்கிறீர்கள். அதுதான் இல்லை.

ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்கு வந்ததுமே அந்த பாலகனை ஒரு தனியறையில் போட்டுப் பூட்டினார். அவ்வப்போது கொஞ்சம் பால், ஓரளவு வளர்ந்தபிறகு கொஞ்சம் ரொட்டித்துண்டு, கொஞ்சம் தண்ணீர், அதுதான் அவர் கொடுத்த உணவு.

ஒருநாள், இரண்டு நாள் அல்ல ஏறக்குறைய நான்குவருடங்கள் அதுதான் கதை.

பாவம், அந்தக் குழந்தையும் யாருடைய முகமும் தெரியாமல், பேசவும் தெரியாமல், போஷாக்கும் இல்லாமல் வளர்ந்தது.

விஷயம் எப்படியோ பொலிசுக்குத் தெரியவந்துவிட்டது. ரோனால்ட் கைது செய்யப்பட்டுள்ளான். அவனுக்கு உடந்தையாக இருந்த மனைவியும் (தாய்) பொலிசாரால் கைதுசெய்யப்பட்டாள்.

ரோனால்ட்டிடம் "ஏன் இப்படி ஒரு பாதகச் செயல் செய்தாய்?" என்று பொலிசார் விசாரித்தனர்.

அதற்கு அலட்டிக்கொள்ளாமல் அந்தப் பாதகன் சொன்ன பதில்; "என் மனைவியை யாரோ பலாத்காரம் செய்துவிட்டார்கள். அதனால் பிறந்த குழந்தைதான் இது.



அதற்காகத்தான் இந்தத் தண்டனை" என்று சொன்னான்.

கணவனுக்கும், மனைவிக்கும் தண்டனை காத்திருக்கிறது.

# இரட்டைக் குழந்தை!

இரு குழந்தைகள் ஒரே சமயம் பிறப்பவை இரட்டைக் குழந்தைகள். அதில் மூன்று வகை உள்ளது. அவை:

1. தாயின் ஓர் உயிர் அணுவும் தந்தையின் ஓர் உயிர் அணுவும் தனித்தனியாக வளருவது.

2. தாய் அணுவும், தந்தை அணுவும் தனியாக வளருவது.

3. ஒரே கரு இரண்டாக பிரிந்து வளருவது.

தாய் அணு இரண்டாக பிரியும்போது, வெவ்வேறு முகத்தோற்றத்துடன் பிறப்பார்கள். ஒரே கரு இரண்டாக பிரிந்தால் ஒரேமாதிரி இருப்பார்கள். ஒரே மாதிரி ஆணாகவோ, பெண்ணாகவோ இருப்பார்கள். ஒட்டியே பிறப்பவர்களும் உண்டு. கண்ணாடியில் பார்ப்பவர்களைப் போன்றும் இருப்பர். அதாவது ஒருவருக்கொருவர் வலது காது பெரியதென்றால் மற்றவருக்கு இடது காது பெரியதாக இருக்கும். ஆப்பிரிக்கா, தென் கொரியாவில் பரம்பரையாக இரட்டைக் குழந்தைகள் பெறுபவர்களும் இருக்கிறார்கள்.





படிப்பகம்

www.padippakam.com

# இரண்டாயிரம் வருடத் தூக்கம்



என்னமாதிரித் தூங்குகிறார்கள் பாருங்கள். இவர்கள் தூங்கத் தொடங்கியது இன்று, நேற்றல்ல, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர். என்ன நம்பமுடியவில்லையா?

ரோம் நகருக்கு அருகே உள்ள வெசுவியஸ் என்னும் இடத்தில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போது இந்த உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் இவர்கள் தமது வீட்டில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தபோது பிரளயம் ஏற்பட்டிருக்கலாம். தூங்கியவர்கள் அப்படியே மாண்டுபோனார்கள். தற்போது பாறைபோல உறைந்த உடல்களாக மீட்கப்பட்டுள்ளன. என்ன, தூங்கச் செல்ல பயமாக இருக்கிறதா?

# எல்லாம் ஒரே விதம்

உலகில் மிகவும் அதிசயமான இரட்டையர்கள் இவர்கள். எப்படி புரட்டி புரட்டி பார்த்தாலும் ஒரு வித்தியாசம் கூட உடல் அமைப்பில் இவர்கள் நடந்துகொள்ளும் விதத்தில் காணவே முடியாது. ஒருவரது பெயர் டேனியல். மற்றவர் பெயர் ஜனாதன். அவர்களே தம்மில் யார் டேனியல், யார் ஜனாதன் என்று சொன்னால் தான் உண்டு.

டுவின் பர்ஜில் என்னும் இடத்தில் 20வது இரட்டையர்கள் தினவிழா நடைபெற்றது. இரட்டையரான பல சிறுவர் சிறுமிகள் கலந்து கொண்டனர். அவர்களில் எவ்வித வித்தியாசமும் இல்லாத இரட்டையர்களாக பாராட்டும், பரிசுகளும் பெற்றவர்கள் இவர்கள்தான்.



# ஒன்றாய் வந்தனர், ஒன்றாகவே சென்றனர்

பெர்த் நகரில் வசித்த இரட்டைச் சகோதரர்கள் வாழ்க்கையில் அதிசய நிகழ்வுகளுக்கு குறைச்சல் இல்லை.

ஒருவருக்கு காய்ச்சல் என்றால் மற்றவருக்கும் வந்துவிடும். தலைவலியும் ஒரே சமயத்தில்தான் வரும்.

ஒரே சமயத்தில் இருவருமே கீழே விழுந்து இடுப்பு எலும்பை முறித்துக்கொண்டனர். டாக்டர்கள் வியந்தபடியே இருவருக்கும் தனித்தனியே மாற்று எலும்பு பொருத்தி ஒப்பரேசன் செய்தனர்.

இப்படி பல சம்பவங்கள். இறுதியாக நடந்த சம்பவம்தான் சோகமான ஆச்சரியம். இரு சகோதரர்களும் ஒன்றாக அமர்ந்து வீடியோவில் படம்பார்த்துக் கொண்டிருந்தனர். திடீரென்று இரட்டையரில் ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அவசரமாக ஆம்புலன்ஸ் கொண்டுவரப்பட்டு அவரை ஏற்றிக்கொண்டிருக்கும்போது, மற்றவருக்கும் மாரடைப்பு வந்துவிட்டது. இருவரையும் ஆம்புலன்சில் ஏற்றி கொண்டு செல்வதற்கு இடையில் இரட்டையர்களின் உயிர் ஒன்றாகவே பிரிந்துவிட்டது.



# வயது 33, உயரம் 2 அடி 1 1/2 அங்குலம்

படத்தில் சிறுமிக்கு அருகில் மூக்குக் கண்ணாடியுடன் அமர்ந்திருக்கும் பெண்ணுக்கு 33 வயது. ரொம்பச் சின்னப் பெண்ணாக தெரிவது தோற்றத்தில் மட்டும்தான். இவரது உயரம் ஆக மொத்தம் 65 சென்ரிமீட்டர். அதாவது 2 அடி 1 1/2 அங்குலம்.

உலகிலேயே மிக குள்ளமான பெண் இவர்தான் என்று சான்றிதழ் வழங்கியுள்ளது கின்னஸ் புத்தக நிறுவனம். இவரது பெயர் மட்கே மெல்ரெர். தென்னாபிரிக்காவில் உள்ள ஜோஹோன்ஸ்பர்க்கில் வாழ்ந்து வருகிறார். இவரது அம்மாவும் அப்படி ஒன்றும் உயரமில்லை. அம்மாவின் உயரம் 70 சென்ரிமீட்டர்.

இந்த உயரத்தில் உள்ள வசதியாதெனில், குழந்தைகளோடு குழந்தையாக இருந்து விளையாடலாம். வயதாகிவிட்டதே என்ற கவலையே எழாது.

# தகவல் பெட்டி

# ஆயுசு நூறு

உலகில் மிக நீண்டகாலம் வாழ்ந்த இரட்டையர்கள் இவர்கள்தான். 17 ஜூன் 1984 இல் இவர்கள் தமது 104 வது பிறந்தநாளை வெகு சிரும், சிறப்புமாக கொண்டாடினார்கள்.

ஒருவரது பெயர் மில்ட்றெட் விட்மன் பிலிப்பி, மற்றவரது பெயர் மேரி விட்மன் ஃபிரான்ஷினி. அமெரிக்காவில் மிசௌரி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்.

1985 மே மாதம் 4ம் திகதி மில்றெட் விட்மன் பிலிப்பி இறந்து விட்டார். இன்னும் ஒரு மாதம் வாழ்ந்திருந்தால் 105 வயதாகியிருக்கும்.

தனது சகோதரி மறைந்த கவலையோடு மேரி மட்டும் இப்போதும் வாழ்ந்துகொண்டிருக்கிறார். (இடதுபக்கத்தில் நிற்பவர்) 104 வயதுவரை இரட்டையர்கள் வாழ்ந்தது உலக சாதனையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.







# துணிச்சல்

வெப்பம் தாங்க முடியவில்லை. ஒரே புழுக்கம்.

தண்ணீரை கண்டதும் மகா ஆனந்தம். மரத்தில் ஏறி பல்டி அடித்து குதித்து குளிப்பதில் சுகமே தனி. பிரேசில் நாட்டுச் சிறுவன் அமேசன் நதியில் பாயும் காட்சி இது. என்றாலும் துணிச்சல்தான். பெண்கள் வேறு கவனிக்கிறார்கள். துணிச்சல் ஏன் வராது?

# கடைவழிக்கு கார் வரும்



காதற்ற ஊசியும் கடைவழிக்கு வராது என்பார்கள். நல்ல கொண்டிசனான கார் ஒரு பெண்ணின் கடைவழிக்கு போயிருக்கிறது. விஷயத்தைக் கேளுங்கள். அமெரிக்காவில் உள்ள பேசன்பர்ஜ் நகரைச் சேர்ந்த பணக் காரப் பெண் ஒருவர் திடீரென்று மண்டையைப் போட்டுவிட்டார். அதாகப்பட்டது இறந்துவிட்டார்.

தான் இறப்பதற்கு முன்பாக தனது நண்பர் ஒருவருக்கு கடிதம் எழுதியிருந்தார். "நான் இறந்துவிட்டால், நான் உயிராக நேசிக்கும் என் காருக்குள் வைத்துத்தான் என் உடலை அடக்கம் செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

அந்த நண்பரும் அவரது விருப்பப்படியே காருடன் சேர்த்து உடலை அடக்கம் செய்துவிட்டார். அடக்கம் செய்யும் காட்சிதான் படத்தில். ஆசைகள் பலவிதம்.



படிப்பகம்

# சினி விசிட்

## உண்மையா கௌதமி?

கௌதமி தன் காதலர் ஒருவரை இரகசியமாக திருமணம் செய்து விட்டதாக ஒரு கிசு-கிசு. கௌதமியிடம் கேட்டால் பலமாக மறுக்கிறார். வருடம் ஒருமுறை இப்படியான கிசுகிசு வருவது வழக்கம்தான் என்கிறார். இரகசியத் திருமணம் செய்யும் அவசியம் எனக்குக் கிடையாது என்கிறார்.

## சிவரஞ்சனியின் முடிவ

தெலுங்கு பட கதாநாயகன் ஸ்ரீகாந்துக்கும் சிவரஞ்சனிக் இடையே நீண்டகாலமாக காதல் நிலவியது. இருவருமே அத மறுத்துக்கொண்டிருந்தனர்.

இப்போது சிவரஞ்சனி தனது காதலை பகிரங்கமாக ஒப் கொண்டிருக்கிறார்.

"எங்கள் இரு வீட்டிலும் பச்சைக்கொடி காட்டிவிட்டார். இப்போது என் கையில் உள்ள படங்களை நடித்து முடித்தபின் திருமணம் நடக்கும். அ மாக அடுத்த ஆண் ஆரம்பத்தில் திருமண என்கிறார் சிவரஞ்சனி.

திருமணத்தின்பின் ந கவே மாட்டாராம். முழு யாக இல்லற வாழ்க்கை குதித்துவிடுவாராம். ர கள் தாங்குவார்களா?



அப்பாஸ்-தபு-வினீத் படம் காதல் தேசம்

## பிடித்தால் மட்டும்

ஏ.ஆர். ரகுமானிடம் தயாரிப்பாளர்கள் தினமும் படையெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் புது உத்தரவு போட்டிருக்கிறார் ஏ.ஆர். ரகுமான். படத்தின் கதை என்ன என்பதில் தொடங்கி படத்தைப் பற்றிய முழு விபரங்களையும் விலாவரியாகக் குறிப்பிட்டு அவரது உதவியாளரிடம் கொடுத்துவிட வேண்டும். படித்துப் பார்த்து, பிடித்திருந்தால் மட்டும் இசையமைக்கச் சம்மதிக்கிறார் ஏ.ஆர்.ரகுமான்.

## மீனாவின் துணிச்சல்

வாக்களிக்கும் தகுதி இருந்தும், வாக்குச் சாவடிக்குச் செல்ல ஆயிரம் வசதிகள் இருந்தும் நடிகைகள் வாக்களிக்கச் செல்வதில்லை. வாக்களிக்கச் சென்றால் வயது தெரிந்துவிடுமே.

கடந்த தேர்தலில் தமிழகத்தில் மீனாமட்டுமே துணிந்து வாக்களித்தார். அம்மா நடிகைகள்கூட வீட்டுக்குள் இருக்க, ம மட்டுமே வயதைக் காட் துணிந்தது அசத்தல்தானே

இந்தத் தேர்தலி தான் முதன் முதலாக வாக்களித்தாராம் மீனா.

## தனிக் குடித்தனம்

நடிகர் பிரபுதேவாவும், ரம்லத்தும் தனிக்குடித்தனம் நடத்துகின்றனர். அப்பா சுந்தரம் இன்னமும் சமாதானமாகவில்லை. 'அவனது தகுதிக்கு மனைவி அமையவில்லை' என்று வருத்தப்படுகிறாராம்.

பிரவு தேவா சந்தோசமாக இருக்கிறார். தனிக்குடித்தனம் போன நேரம் நல்லாயிருந்தால், தனது புதிய படங்கள் வெற்றி பெறும் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்.

பிரபுதேவா நடித்த 'மிஸ்டர் ரோமியோ' தயாராகிவிட்டது. வெளியிடுவதற்கு தயக்கம் காட்டுகிறார் தயாரிப்பாளர்.

போட்டியாக வேறு படங்கள் இல்லாத நேரமாகப் பார்த்து திரையிடத் திட்டமாம்.

## வினிதாவின் விரக்தி

தன்னிடம் பலன் பல பெற்ற ஹீரோக்கள் அனைவரும் இப்போது கண்டுகொள்ளாமல் இருக்கிறார்களாம். அழாக்குறையாகச் சொல்கிறார் வினிதா.

திரையுலகில் காலடிவைத்தபோது ஆளாளுக்கு எனக்கு போன் செய்து தொல்லை கொடுத்தார்கள். வாக்குறுதிகளும் தந்தார்கள். இப்போது நான் ஒருத்தி இருப்பதையே மறந்து விட்டார்கள் என்று நெருக்கமான பத்திரிகையாளர்கள் சிலரிடம் மனம்விட்டுப் பேசினாராம் வினிதா.

பம்பாய் நடிகைகள் அப்படி என்ன தான் அழகிகளோ தெரியவில்லை. அவர்கள் பின்னால் ஏன்தான் அலைகிறார்களோ? என்றும் பொருமியுள்ளார் வினிதா.

'புது நிலவு', 'சாம்ராட் படங்கள் வெற்றிபெற்றால் தான் வினிதா தாக்குப்பிடிக்கலாம். இல்லாவிட்டால் கோவிந்தாதான்.

## சுகன்யாவின் குழப்பம்

தமிழக அமைச்சர் கண்ணப்பனோடு நகமும், சதையுமாக இருந்தவர் சுகன்யா. ஆட்சி மாறிவிட்டது. புதிய ஆட்சி தொல்லை தரலாம் என்று பயப்படுகிறார் சுகன்யா.

தமிழக புதிய அமைச்சர்களுக்கு வலைவீசிப் பார்த்து சலித்துப் போனார் சுகன்யா. தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத சுகன்யா மத்திய அமைச்சர் ஒருவரை குறி வைத்திருக்கிறார்.

அமைச்சரானதற்கு நேரில் தனியே சந்தித்து பாராட்டுத் தெரிவிக்க விரும்பும் செய்தியை அனுப்பி வைத்தாராம். ஆனால் அமைச்சரோ அழைப்பு விடுக்கவும் இல்லை. மறுக்கவும் இல்லை. முடிவு தெரியாமல் குழப்பத்தில் இருக்கிறார் சுகன்யா.



நக்மா

## உபயோகமான 'தபு'

'காதல் தேசம்' படத்தை 'காதலன்' படம்போல பிரமாண்டமான வெற்றிபெற வைப்பது என்று ஒற்றைக்காலில் நிற்கிறார் குஞ்சுமோன். இரண்டு படங்களுமே அவரது தயாரிப்புத்தான்.

'காதல் தேசம்' படத்தில் இரண்டு கதாநாயகர்கள். ஒருவர் வினீத். மற்றவர் அப்பாஸ். அப்பாஸ் பெங்களூர் இளைஞர். 'தபு'வோடு நெருக்கமாக நடிக்க கூச்சப்பட்டாராம்.

'தபு'வைவிட கதாநாயகர்கள் இருவரும் உயரம் குறைச்சல். அதனால் காதல் காட்சிகளில் 'ஸ்டூல்' போட்டு இருவரையும் தபு அருகில் நிற்கவைத்தாராம் இயக்குநர். 'காதல் தேசம்' படத்தில் வில்லனாக நடிப்பவரும் புதுமுகம் தான். பெயர், கெல்வின்.

## நடிகைகளின் சம்பாத்தியம்

ஒரு படத்தில் மட்டும் தலைகாட்டிய நடிகைகள் கூட சொந்தமாக வீடு வாங்கிவிடுகிறார்கள். பல படங்களில் நடித்த நடிகர்கள் பலர் வாடகைவீட்டில்தான் காலம் தள்ளுகிறார்கள். கேட்டால் வருமானம் போதவில்லை என்று புலம்புகிறார்கள்.

நடிகைகள் மட்டும் எப்படி வீடுவாங்குமளவுச் சம்பாதிக்க முடிகிறது? அதுதான் சாமர்த்தியம். சம்பாதிக்கத் தேவையான சாமர்த்தியம் உள்ளவர்களுக்கு ஒரு படமே போதும்.

சில நடிகைகளுக்கு தயாரிப்பாளர்களே கார் வாங்கிக் கொடுக்கிறார்கள். நடிகை ரம்பாவுக்கு ஒரு முன்னணி ஹீரோ கார் பரிசளித்திருக்கிறார். பரிசை வேண்டாம் என்று திருப்பியனுப்பி விட்டார் நடிகை. பரிசை வாங்கினால் நடிகரின் தொல்லை தாங்கமுடியாமல் போய்விடும். கண்ட கண்ட நேரத்தில் எல்லாம் வீட்டில் வந்து நிற்பார் என்பது தான் காரணமாம்.

ரம்பா தற்போது பிஸியாக இருக்கிறார். பல நடிகர்களின் நட்பும் தேவை. அதனால் ஒரே ஒரு நடிகரின் கட்டுப்பாட்டில் சிக்கிக்கொள்ள அவர் விரும்பவில்லையாம்.



ஆனந்த்-சிவரஞ்சனி படம்: அவதார புருஷன்

## காதல் மன்

கவுண்டமணி-ஷர்மிலி விவகாரம் ஒரு முடிவுக்கு வந்திரு மீண்டும் கவுண்டமணியுடன் ராசியாகிவிட்டார்.

கவுண்டமணியிடம் ஷர்மிலி போட்ட ஒரே ஒரு நிபந்தனை உள்ள உறவை 'கட்' பண்ணிவிடவேண்டும் என்பதுதானாம்.

பலவீனமான ஒரு நேரத்தில் 'சத்தியம்' விட்டார் கவுண்டமணி. ஷர்மிலியும் மனம் கவுண்டமணியின் நட்பை தாராளமாக வ

'சத்தியம்' செய்துகொடுத்தாரே தவிர கவுண்டமணியால் மறக்க முடியவில்லை. 'பு இருவரும் நெருங்கி நடித்ததோடு, படப்பிடி யும் நெருக்கமாக இருந்தனர். 'புது கிடைத்த சம்பளத்தில் ஒரு பகுதியையும் கொடுத்துவிட்டார் கவுண்டமணி.

விஷயம் ஷர்மிலியின் காதுக்கு எட்டி என்று குதித்தார் ஷர்மிலி. தனக்கும் க உள்ள நெருக்கத்தை பத்திரிகைகளுக்கு என்று ஒரே போடாக போட்டு மிரட்டி

ஆடிப்போய் விட்டார் மணி. ஜோதிமீ பார்க்கவில்லை. வெறுத்துப்போன ஜோ படத்தில் வடிவேலுவுடன் நடிக்க ச கவுண்டமணியுடன் மட்டுமே ஜோடியாக



கமல்-மீ
படம்: அவ்வை

## மினி சினி

* கமலின் 'இந்தியன்' தெலுங்கில் 'பாரதீயுடு' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. தெலுங்கில் கமலுக்காக எஸ்.பி.பாலசுப்பிரமணியம் குரல் கொடுத்துள்ளார்.
* 'அதிரடிப்படை' படத்தைத் தொடர்ந்து 'லத்திசார்ஜ்' படத்தைச் சொந்தமாகத் தயாரித்து நடித்து வரும் ரோஜா, அடுத்து இன்னொரு படத்தையும் தயாரித்து நடிக்கவுள்ளார்.
* மணிரத்னம் இயக்கி வரும் 'ஆனந்தம்' படத்தின் தயாரிப்பு நிர்வாகத்தைக் கவனித்து வரும் சுஹாசினி மணிரத்னம், அந்தப் படத்திற்கு வசனமும் எழுதி வருகிறார்.
* நக்மாவின் தங்கை ரத்திகா, கஜோலின் தங்கை தனிஷா ஆகியோரைத் தொடர்ந்து ஷில்பா ஷெட்டியின் தங்கை ஷமிதாவும், மனிஷா கொய்ராலாவின் தம்பி சித்தார்த்தும் இந்தித் திரையுலகில் கால்பதிக்கிறார்கள்.
* சுரேஷ்கோபி-விஜயசாந்தி இணைந்து நடிக்கும் 'டெல்லி டயரி' படத்தில் அரசியல் சாமியாரான சந்திரசாமியை வைத்து ஒரு பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தில் வில்லன் இந்த சாமியார் தான்.
* அர்ஜுன் நடித்த செங்கோட்டை படத்தை இயக்கியவர் சசிகுமார். இவர் ஐந்து வருடங்களுக்கு முன் பார்த்திபன் நடித்த 'உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்' படத்தை ஸ்ரீதேவ் என்ற பெயரில் இயக்கியவர்.
* சந்தமாமா கம்பைன்ஸ் நிறுவத்திற்காக நாசர் ஒரு படத்தை இயக்கவுள்ளார். அரவிந்தசாமி கதாநாயகனாக நடிக்கும் இப்படத்திற்கு 'தேவதை' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.
* 'பிரியங்கா' படத்தை இயக்கிய நீலகண்டனுக்கு அந்தப் படத்திற்குப் பிறகு தமிழ்ப் படத்தை இயக்கும் வாய்ப்புக் கிட்டவில்லை. இவர் தெலுங்கில் ரமேஷ் அரவிந்த்-மகேஷ்வரி இணைந்து நடிக்கும் படமொன்றை இயக்கிவருகிறார்.
* 'அபிராமி','சின்னமேடம்' ஆகிய படங்களை இயக்கிய திலீப்குமார் அடுத்து இயக்கும் படத்தை சூப்பர் குட் ஃபிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இப்படத்தில் முரளி கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.
* சில வருடங்களுக்கு முன் குரங்கு ஒன்றை முக்கிய வேடத்தில் நடிக்க வைத்து 'சாமி சொன்னா சரிதான்' என்ற படத்தை இயக்கினார் ஆர். சுந்தர்ராஜன். பல காலம் விற்பனையாகாமல் இருந்த இந்தப்படம் இப்போது 'மைடியர் ராம்' என்ற பெயரில் வெளிவரவுள்ளது.

## மணமகள் தேடல்

நடிகர் ரகுவரன் அபாரமான நடிகர்தான். அவரது திறமைகளையெல்லாம் பல வீனங்களால் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிக் கொள்கிறார்.

மது, மாது விஷயங்களில் இருந்து அவரை மீட்கவே முடியவில்லை. இடைக்கிடையே திருந்துகிறார். பின்னர் மீண்டும் தாவிவிடுகிறார். போதை மருந்துக்கு அடிமையாக இருந்து பின்னர் திருந்தினார்.

போதை மருந்தை நிறுத்தினாலும், பெண்கள் விடயத்தில் அவரால் ஒதுங்க முடியவில்லை. இப்போது ரகுவரனுக்கு வீட்டார் பெண் பார்க்கிறார்கள். கால் கட்டுப் போட்டால் திருந்திவிடுவார் என்று ஒரு நம்பிக்கைதான்.

## பாவம்-விவேகானந்தா

சுவாமி விவேகானந்தர் பற்றிய திரைப்படம் தயாராகிவிட்டது. பக்திப் படம், ஆன்மீகப் படம் என்று பார்க்கத் துடிப்பவர்களுக்கும், பார்க்கவே கூடாது என்று முடிவு செய்பவர்களுக்கும் ஒரு தகவல். படத்தில் 'அந்தமாதிரியான' நடனக்காட்சிகளும் உண்டு. விவேகானந்தரைக் கவர மீனாட்சி சேஷாத்திரி ஆடும் நடனம் ஒன்றும் இருக்கிறதாம். அதுதவிர, ஜெயப்ரதா, ஷோபனா ஆகியோரும் நடனம் ஆடி ரசிகர்களுக்கு விருந்து கொடுக்கின்றனர்.

பக்திப்படமாக இருந்தாலும் போட்ட பணத்தை திருப்பியெடுக்க கவர்ச்சி வேணும்தானே. ஜி.வி.ஐயரின் வாதம் அதுதான். அவர்தான் தயாரிப்பாளர்.

## ரஜினியைப் புகழும் அமிதாப்

ஐந்து வருட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் மேக்-அப் போட்டுவிட்டார் அமிதாப்பச்சன். உயரத்தில் மட்டுமல்ல, இந்தித் திரையுலகில் மிக உயரத்தில் இருப்பவரும் இன்றுவரை அவர்தான்.

ரஜினிகாந்த் பற்றி ஆஹா ஓஹோ என்று புகழ்கிறார் அமிதாப். "ரஜினி எனக்கு எப்போதுமே ஒரு ஆச்சரியம். மேக்-அப் போடாத நேரங்களில் நடிக்காத ஒரு அற்புதமான மனிதர் ரஜினி. மொட்டை போடுவதும், தாடி வளர்ப்பதும், எந்த இமேஜ் பற்றியும் கவலைப் படாமல் வாழ்வதும் உண்மையில் அற்புதம்தான்." என்கிறார் அமிதாப்.

ரஜினியின் வெற்றிக்கு என்ன காரணம்? அதனையும் அமிதாப்பச்சனே சொல்லியிருக்கிறார்: "தன்னம்பிக்கை, தன்னடக்கம்" இரண்டும்தான் காரணம்.

தனது "புதிய பட வேலைகள் ஆகஸ்ட் மாதம் ஆரம்பமாகும்." என்று சொல்லியுள்ளார் ரஜினி. யார் படத்தில் நடிக்கப்போகிறேன் என்று மட்டும் சொல்லவில்லை. வழக்கம்போல் சஸ்பென்ஸ்.

## உறவு மலர்ந்தது

ஓராண்டுகாலமாக பிரிந்திருந்த நடிகர் ராமராஜனும், நடிகை நளினியும் மீண்டும் இணைந்துவிட்டனர்.

தமது பழைய வீடுதான் பிரிவுக்குக் காரணம் என்று நினைத்து, புதிய வீடு வாங்கி குடிபுகுந்துள்ளனர்.

நளினியின் குடும்பத்தினர் எவரையும் இனி அண்டவே விடுவதில்லை என்று முடிவாம்.

ஜெயலலிதாவுக்காக தேர்தலில் பிரசாரம் செய்ததால் ஏகப்பட்ட நஷ்டம் ராமராஜனுக்கு. ஆச்சி மனோரமாவுக்கு பெட்டி பெட்டியாக பணம் கொடுத்தார் அம்மா. ராமராஜன் மட்டும் தன் சொந்த செலவில் பிரசாரம் செய்து கையைச் சுட்டுக்கொண்டார். பெயரையும் கெடுத்துக்கொண்டார்.

## கமலின் அடக்கம்

'இந்தியன்' படத்தில் வயதான கமலின் பெயர் சேனாபதி. அதனை சேனாதிபதி என்றுதான் தமிழக பத்திரிகைகள் பல தவறாக குறிப்பிடுகின்றன.

கமல் தற்போது கதை, கவிதை எழுதுவதில் அதிக ஆர்வம் காட்டுகிறார். நடிப்பதைவிட எழுதுவது ரொம்பக் கஷ்டம் என்று சொல்லுகிறார்.

கமலின் மனைவி 'சரிகா' கமலின் படங்களில் பணியாற்றும்போது கமலை 'சார்' என்றுதான் அழைப்பார்.

கமல் விரைவில் ஒரு படத்தை இயக்கப்போகிறார். பத்துவருடங்களுக்கு முன்பே ஒரு படத்தை இயக்கியிருக்க வேண்டும். இப்போதுதான் வாய்ப்பு கிடைக்கிறது என்கிறார்.

கமலுக்கு எப்போதுமே திருப்தியான மனநிலையில் நீடிக்க முடியாதாம். "பரபரப்பாக இருந்தே பழக்கப்பட்டு விட்டேன்" என்கிறார்.

'இந்தியன்' படத்தில் வயதான கமலை பார்த்துவிட்டு கமலின் மகள் சொன்னாராம், "இவரை எனக்குத் தெரியாது. ஆனால் என் அப்பாவின் வாசனை இவரிடம் இருக்கிறது."

"ஹொலிவூட்டில் பிறந்திருந்தால் நான் துணை நடிகனாகத்தான் இருந்திருப்பேன். அதனால் அங்கே பிறக்கவில்லையே என்று வருந்தவில்லை." என்று அடக்கமாகச் சொல்கிறார் கமல்.





கார்த்திக்-ரக்ஷனா படம் பூவரசன்



ராஜகிரண்-வனிதா படம் மாணிக்கம்

## இதயமே இதயமே

அருமையான பின்னணி இசை, சுகமான பாடல்கள், கண்ணுக்கு இதமான ஒளிப்பதிவு, அலுப்பேயில்லாமல் படம் பாக்க முடிகிறது. 'இதயமே இதயமே' படம் தமிழிலும் மொழி மாற்றப்பட்டு வெற்றிகரமாக ஓடுவதின் இரகசியம் அதுதான்.

தெலுங்கில் பல படங்களில் வில்லனாக நடித்த சக்கரவர்த்தி கதாநாயகனாகி மகேஸ்வரியை காதலிக்கிறார். படத்தில் மட்டுமல்ல, படப்பிடிப்பில் ஏற்பட்ட நெருக்கம் இருவரையும் நிஜக் காதலர்களாக்கியும் விட்டது.

ஸ்ரீதேவியின் தங்கை மகேஸ்வரியை 'கருத்தம்மா' படத்தில் தமிழ் பட ரசிகர்கள் கண்டுகளித்தார்கள். 'இதயமே, இதயமே' படத்தில் கவர்ச்சி விருந்தே படைத்திருக்கிறார் மகேஸ்வரி. தெலுங்கு படங்களில் நடிக்கும்போது நடிகைகள் கவர்ச்சி விடயத்தில் வஞ்சகமே பண்ணுவதில்லை' என்பதற்கு மகேஸ்வரியும் விதிவிலக்கல்ல.

## ஹீராவின் புலம்பல்

"அஜித்குமார் விபரமே புரியாத பையனாக, அப்பாவியாக இருந்தார். அவரை விபரம் புரிந்த பையனாக மாற்றியவள் நான்தான். அவரோ இப்போது வேறு நடிகைகள் பின்னால் சுற்றுகிறார். இந்த ஆண்களே இப்படித்தான். காரியம் நடக்க வேணும் என்றால் நம் விருப்பப்படி எல்லாம் நடப்பார்கள். காரியம் முடிந்தபின்னர் தம் வழியில் சென்றுவிடுவார்கள்" இப்படி புலம்பியிருப்பவர் ஹீராதான்.

நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் விருந்தில் கலந்துகொண்ட உற்சாகபான உஷாரில் ஹீரா கொட்டித் தீர்த்த புலம்பல்தான் அது.

## ...ர் கவுண்டமணி

சொன்ன சொல்லை மீறிவிட்டார் ஜோதிமீனா.

"எனக்கு யாருடனும் ஒப்பந்தம் கிடையாது. கவுண்டமணி, வடிவேலுடன் மட்டுமல்ல நாளை ஒரு 'தடிவேல்' வந்தாலும் இணைந்து நடிக்கத்தயார்" என்றும் பேட்டி கொடுத்து, கவுண்டமணியை வெறுப்பேற்றியிருக்கிறார் ஜோதிமீனா.

பாவம், கவுண்டமணி மத்தளம்போல மாட்டிக் கொண்டு முழிக்கிறார்.

கோவை சரளா மட்டும்தான் சர்ச்சையைக் கிளப்பாமல் நடந்துகொண்டார். உரிய சமயத்தில் கவுண்டமணியைவிட்டு ஒதுங்கியும் கொண்டார்.

ஷர்மிலியும், ஜோதிமீனாவும் கவுண்டமணியை ஆட்டிப்படைக்கிறார்கள். இதற்கிடையே கவுண்டமணியை ஒப்பந்தம் செய்ய விரும்பும் தயாரிப்பாளர்கள் ஜோதிமீனாவைத்தான் முதலில் அணுகுகிறார்கள். எங்கே பிடித்தால் காரியம் நடக்கும் என்று தெரிந்து வைத்து தயாரிப்பாளர்கள் நடந்துகொள்கிறார்கள். ☆

## ஆனந்தம்-ரேவதி

மணிரத்னம் இயக்கும் 'ஆனந்தம்' படத்தில் ஏராளமான நட்சத்திரங்கள் நடிக்கிறார்கள். அநேகமாக பிரபல நட்சத்திரங்கள் பலரை கௌரவ வேடத்தில் நடிக்கவைத்திருக்கிறார் மணிரத்னம். இறுதியாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளவர் ரேவதி. அவருக்கும் கௌரவ வேடம்தான்.

'ஆனந்தம்' படத்தில் மம்முட்டியும் நடிப்பதாக இருந்தது. இப்போது மம்முட்டிக்கு பதிலாக அரவிந்தசாமி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

கதாநாயகன் மோகன்லால். நாயகி ஐஸ்வர்யாராய். பல நட்சத்திரங்களை மாற்றியபோதும் மாற்றப்படாமல் இருப்பது அவர்கள் இருவரும்தான்.


## நாயகியாகும் அமெரிக்க அழகி

ரமேஷ் அரவிந்த் அமெரிக்காவுக்கு பறக்கப்போகிறார். அமெரிக்காவுக்கு போகப்போவதில் உள்ள சந்தோசத்தை விட, அங்கு அவருக்காக காத்திருக்கும் அழகியைப் பார்க்கத்தான் துடியாய் துடிக்கிறார்.

ரமேஷ் அரவிந்த் நடிக்கும் புதிய படம் 'அமெரிக்கா.... அமெரிக்கா.' படப்பிடிப்பு முழுவதும் அமெரிக்காவிலேயே நடக்க இருக்கிறது. அமெரிக்காவில் வசிக்கும் இந்தியப்பெண் 'சுமனா' என்பவர்தான் ரமேஷ் அரவிந்துக்கு ஜோடி. சுமனா எப்படியிருப்பார். என்று கற்பனை செய்ய ஆரம்பித்துவிட்டார் ரமேஷ் அரவிந்த.

'அமெரிக்கா, அமெரிக்கா' படத்திற்கு இசையமைப்பவர் மனோமூர்த்தி. அவரும் ஒரு இந்தியர்தான். வசிப்பது அமெரிக்காவில்.





முகப்பில்

விஜயகாந்த்

வினிதா

தேவயாணி

படம்:- காதல்கோட்டை

சக்கரவர்த்தி-மகேஸ்வரி படம் இதயமே இதயமே



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# மஞ்சள் குளிப்பு போடலாம்



அழகு என்பது பெண்களுக்கு வரப் பிரசாதமாகும். அதைப் பேணிக்காக்க வேண்டும். இதற்காகப் பணம் செலவு செய்து அழகு நிலையங்களுக்குச் செல்லாமல் இயற்கையாகக் கிடைக்கும் விலை மலிவான பொருட்களைக் கொண்டே அழகைக் காப் பாற்றிக் கொள்ளலாம்.

உப்புப் பொடியை நெய்யில் கலந்து உதட்டில் தடவினால் உதடு வெடிப்பு, கீறல் நீங்கும்.

மஞ்சள் அரைத்துத் தேய்த்துக் குளித்தால் வியர்வை நாற்றம் போகும். முக அழகு கூடும். முகத்தில் ரோம வளர்ச்சியும் இருக் காது.

வெள்ளரிக்காய் சாற்றைக் கண்களைச் சுற்றித் தேய்த்து ஒரு மணி நேரம் கழித்துத் தேய்த்துக் கழுவினால் கண்களைச் சுற்றியுள்ள கருவளையம் ஒரு வாரத்தில் பிரகாசமாகி விடும்.

சந்தனத்துடன் பன்னீர், கிளிசரின் கலந்து முகத்தில் நன்றாகத் தேய்த்து காய்ந்ததும் முகத்தைக் கழுவினால் முகச்சுருக்கங்கள் மாறும்.

கறிவேப்பிலையைப் பெருமளவு தேங்காய் எண்ணெயில் சேர்த்து கொதிக்க வைத்துத் தலையில் தேய்த்து வந்தால் நரை மறையும்.

கஸ்தூரி மஞ்சளைப் பொடி செய்து, பன்னீரில் கலந்து, வெய்யிலில் வைத்துச் சூடாக்கி முகத்தில் தேய்த்து வந்தால் முகப்பரு மறையும்.

கண்பீலிகளில் ஆமணக்கு எண்ணெயைத் தடவி வந்தால் பீலிகள் நன்றாக வளரும்.

பனிக்காலத்தில் உதடுகள் வெடித்து விடும். அதனால் இளம் சுடுநீரில் உதடு களைக் கழுவிவிட்டுத் தேனையும், நெய்யையும் கலந்து உதடுகளில் தடவினால் லிப்ஸ்டிக் தடவாமலேயே உதடுகள் அழகாக இருக்கும்.

பெண்களின் நாகரிகம் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருக்கிறது. அந்த நாகரிகத் தில் உங்களுக்குச் சரியெனப்பட்டதைக் கண்டறிந்து அதற்கேற்றாற்போல செயற்பட வேண்டும்.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் அந்த நாகரிகம் உங்கள் அழகை மட்டுமன்றி திறமையையும் பண்பையும் வெளிப்படுத்த வேண்டும்.

உடல் அழகு, திறமை, ஆரோக்கியம் எல்லாவற்றையும் போற்றிக் காக்க வேண்டும். யோகாசனம், உடற்பயிற்சி போன்றவைகள் பெண்களுக்கு மனபலத்தையும், உடல் பலத் தையும் தரும்.

உச்சத்தில் குரல் எழுப்பிப் பேசுவது நல்லதன்று. அடக்கமாக-ஆனால் தேவைப் படும் போது அழுத்தமாகப் பேசவேண்டும்.

## புதுக்குறள்

பெற்று வளர்க்கிற பிள்ளையால்-பெற்றவர்
கற்றுத் தெரிவார் பல..

பிரசவத்தின் போதே பிரச்சனையும் சேர்த்தே
பிரசவம் செய்கிறாள் தாய்.

தந்தை விதையாகும் தாயோ நிலமாகும்
காலத்தால் வாழ்வு நமக்கு.

பெற்றவர் சேவைக்கு முன்னால் குறைவுதான்
பிள்ளையின் சேவைக் கணக்கு.

பிள்ளை பெறுகின்ற பெற்றோர்க்குத் தண்டனை
பிள்ளை வளர்ப்பது தான்.

பிள்ளை வளர்ப்பது பெற்றோரின் சாதனை
பிள்ளைகள் காண்பர் பிறகு.

தாயும் தகப்பனின் புத்திமதி கேட்டாலே
நீயும் அடைவாய் உயர்வு.

பெற்றோரின் மனதினில் பெருங்கவலை உண்டாக்கும்
பிள்ளையின் வாலிபம் தான்.

உன்னை உயர்த்த உதவும் கருவிதான்
என்றைக்கும் பெற்றோர் உணர்.



## பெண்கள் தினமும் செய்ய வேண்டியவை:

சத்துள்ள உணவைச் சமைத்துச் சரியான சமயத்தில் சாப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

குறைந்தது ஆறுமணி நேரம் இடை வெளியில்லாமல் தூங்க வேண்டும்.

தினமும் 10 டம்ளர் நீர் அருந்த வேண்டும்.

உணவில் அதிக காரம், புளிப்பைக் குறைக்க வேண்டும்.

டென்ஷனில் இருந்து விடுபட வேண்டும். அது உடல்நலத்திற்கு நல்லதல்ல.

இனிப்பு உணவு வகைகளைக் குறை யுங்கள்.

தினமும் உடற்பயிற்சி தவறாமல் செய் யுங்கள்.

## சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது சுகந்தினி)

### ஒனியன் ஃபிரைட் ரைஸ்

**தேவையான பொருட்கள்:**

- பாசுமதி அரிசி - 2 கப்
- தண்ணீர் - 8 கப்
- வெங்காயத்தாள் - 2 கப்
- சின்ன வெங்காயம் - 10
- மிளகாய் - 2
- எண்ணெண் - 5 மேசைக்கரண்டி
- சோயா சோஸ் - 3 மேசைக்கரண்டி
- பச்சைக் கற்பூரம் - 1/4 தேக்கரண்டி
- உப்பு - அளவாக

**செய்முறை:**

முதலில் அரிசியைப் பதமாக வேக வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். வெங்காயத்தை மெல்லிய வட்டங்களாக நறுக்கி வைத்து, மிளகாயை வட்ட வட்டமாக நறுக்கிக் கொள்ளவும். வாணலியில் எண் ணெய் விட்டுக் கொதித்ததும் வெங்காயத்தைப் போட்டு இரண்டு நிமிடங்கள் வதக்க வேண்டும். அடுத்து மிளகாய், பச்சைக் கற்பூரம், உப்பு சேர்த்து மேலும் ஒரு நிமிடம் வதக்கவும். பின்னர் சோறு, சோயா சோஸ், வெங்காயத்தாள் சேர்த்து ஐந்து நிமிடங்கள் அடுப்பிலேயே வைத்துக் கிளறி இறக்க வேண்டும்.

## பதினெட்டுக் குழந்தைகளின் அம்மா

புளோரிடாவில் இருக்கும் பேட்-ஜில் வில்லியம்ஸ் ஜோடிக்கு பதினெட்டு குழந்தை கள். '18 குழந்தைகளா?' என ஆச்சரியப்படா தீர்கள். இவர்களுக்கெனப் பிறந்தது நான்கு குழந்தைகள். தத்தெடுத்து வளர்த்து வருவது பதினான்கு குழந்தைகள். பேட், 'தி ஓரிலண்டே மேஜிக் பாஸ்க்கெட்போல்' அணியின் பொது முகாமையாளராகப் பணியாற்றி வருகி றார்.

இக்குழந்தைகளுக் காகவே இவரது வீட்டில் பதினொரு படுக்கையறைகள். ஐந்து மீட்டர் நீள முள்ள டைனிங் டேபிள். ஐம்பது ஜோடி சப்பாத்துக்கள் என பட்டியல் நீண்டு கொண்டே போகும். இவர்களின் வீட்டு பலசரக்குகளின் மாதபில் எவ்வளவு தெரியுமா? 1500 டொலர்.

ஏழில் இருந்து இருபத்தியொரு வயது வரை உள்ள இக்குழந்தைகளில் ஏழு பெண்கள், பதினொரு ஆண்கள். இக் குழந்தைகள் ஒன்றுக்கொன்று அனுசரித்து, சண்டை சச்சரவுகள் இல்லாமல் இருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

தினசரி கூடைப்பந்துப் பயிற்சி, தடகளம் மற்றும் உடற்பயிற்சி, கால்பந்து பயிற்சி, நீச்சல், ஓவியம் மற்றும் பள்ளிப் பாடங்களைக் குறித்தும் ஒன்றுக் கொன்று தெரிந்ததைச் சொல்லிக் கற்றுக் கொள்கிறார்கள். இத்தோடு ஜில் வில்லியம்ஸும் அவர்களுக்கு இவை களைக் கற்றுக் கொடுக்கிறார்.

1972ல் ஜில் வில்லியம்ஸைத் திருமணம் செய்து கொண்ட பேட்டிடம் 'மேலும் குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்வீர் களா?' எனக் கேட்டால், 'யாருக்குத் தெரியும்?' எனச் சிரித்துக் கொண்டே பதில் கூறுகிறார். 'உங்களின் குழந்தைகளில் உங்களுக்குப் பிடித்தவர் யார்?' என ஜில் வில்லியம்ஸிடம் கேட்டால், 'என்னுடைய எல்லாக் குழந்தை களுக்கும் நான்தான் தாய். இதில் எவர் என் மனதுக்குப் பிடித்தவர் என்று எப்படிப் பதில் கூறுவது?' என்கிறார்.



இவர்கள் தத்தெடுத்த குழந்தைகள் பல தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

## ஜூஸ் சாப்பிடுவது எப்படி?

இது கோடைகாலம்.

அடிக்கடி தொண்டை வறண்டு போய் விடும். 'ஜில்'லென்று எதையாவது சாப்பிட்டு வைத்தால் நல்லது என்று தோன்றும்.

சாப்பிடுங்க! ஆனால் அந்த 'ஜில்'லென்ற விவகாரங்களை கொஞ்சம் கவனமாகக் கையாள வேண்டியது அவசியம்.

வெளியே வெயிலில் அலைந்துவிட்டு வீட்டுக்குள் நுழைந்த உடனேயே, பானைத் தண்ணீரையோ ஃபிரிட்ஜ் வோட்டரையோ மடக் மடக்கென குடிக்கக்கூடாது.

அதுபோலவே, வெயிலில் அலையும் பொழுது வியர்த்து விறுவிறுத்துப் போயிருப் பீர்கள். அப்பொழுது கரும்புச் சாறோ (ஐஸ் கலந்து) அல்லது ஐஸ் க்ரீமையோ 'லபக் லபக்' என உள்ளே தள்ளாதீர்கள். ஐஸ் க்ரீமிற்குத் தரப்படும் சின்னஞ்சிறிய மரக் குச்சியின் நுனியில் கொஞ்சமாய் க்ரீமை வழித்து மெல்ல சுவையுங்கள். அது போலவே குளிர்ப்பானங்களை மெல்ல மெல்ல ஒவ்வொரு மிடறாக விழுங்குங்கள்; அல்லது கொஞ்சம் கொஞ்சமாய் ஸ்ட்ரோ மூலம் உறிஞ்சுங்கள். அதுதான் நல்லது.

இல்லையேல், அவசரத்தில் 'ஜில்' சமாச்சாரங்கள் மூச்சுக் குழலில் சிக்கி புரை யேறலாம்; மூக்கில் நீர்கோர்த்து தடிமன் வரலாம். கவனம்!

## ஆர்வத்தை எவ்வாறு தூண்டலாம்?

எதையாவது உறிஞ்சுதல், மெதுவாக-சிறிது சிறிதாகச் (நக்குதல்) சுவைத்தல் அல்லது சப்புதல் போன்றவற்றால் அழுத்தப்பழுவின் தாக்கம் குறைய வாய்ப்புண்டு என்று அமெரிக்க ஆய்வாளர்கள் கண்டுள்ளனர். இச்செய்கைகளின் போது மூளை அமைதியூட்டும் ஹோர்மோன்களைச் சுரக்கிறதாம். எத்தகைய பொருள் இம்முறையில் பயன்படுத்தப்படுகிறது என்பதல்ல-இம்முறையினால் ஓரளவு அமைதி நிலை ஏற்படு கிறது. இச் செயற்பாட்டின்போது வாயின் அசைவுதான் பயனளிக்கிறது.

தொழிலகத்தில் வேலைப்பழு அதிகரித்தால் ஒரு கோப்பை காப்பியோ தேனீரோ அல்லது புகைப்பதற்கான சிகரட்டோ... இவைபோன்ற ஏதோ தேவைப்படுகிறது. காபியில் கொஃபின் எனப்படும் நச்சுத்தன்மை இருந்தபோதும் வேலைப்பழுவினால் ஏற்படும் தாக்கத்திலிருந்து நிவாரணம் அளிக்க அக்காலகட்டத்தில் அது இன்றியமையாததாகின்றது.



## ஆக, அறுபது திருமணம்

எகிப்தைச் சேர்ந்தவர் காலித்குவெஸ்டா. உலகம் பூராவும் சுற்றிவரும் கப்பல் கொம்பனி ஒன்றில் வேலை பார்க்கிறார்.

நாடுவிட்டு நாடு போகும்போது அந்த நாட்டில் தங்கியிருக்கும் சிலநாட்களிலேயே அந்த நாட்டுப் பெண்களை எப்படியாவது கவர்ந்து விடுவார். கவர்வது மட்டுமல்ல, கல்யாணமும் செய்துகொள்வார்.

இவ்வாறு அவர் செய்துகொண்ட திருமணங்கள் 60. பல பெண்களிடமிருந்து விவாகரத்து வாங்கிவிட்டார். பிரிட்டன், ஜப்பான் பெண்கள் விவாகரத்துக்கு சுலபமாக சம்மதித்துவிட்டனர்.



இத்தாலியப் பெண் ஒருவரிடம் காலித்தின் பருப்பு வேகவில்லை. அந்தப் பெண் நீதிமன்றம் வரை சென்றுவிட்டார். அதனால்தான் காலித்தின் சுயரூபம் வெளியாகியது.

இப்போது காலித் என்ன சொல்கிறார் தெரியுமா? "பிரிட்டிஷ் பெண்கள்தான் நம்பிக்கையானவர்கள். ஜப்பான் பெண்கள் விசுவாசமானவர்கள். இத்தாலியப் பெண்கள் பொல்லாதவர்கள். தாங்கள் சொல்கிறபடி தான் நாங்கள் நடக்கவேண்டும் என்பார்கள். பிலிப்பைன்ஸ் பெண்களை மட்டும் நம்பவே நம்பாதீர்கள். என்னுடன் அவள் இருந்தது வெறும் 46 மணிநேரம் மட்டும்தான்" என் கிறார் காலித். அனுபவம் பேசுகிறது.

## கர்ப்பத்தடை மாத்திரைகள்

கர்ப்பத்தடை மாத்திரைகளைப் பாவிப்பவர்களின் ஹோர் மோன்களின் இயல்பான சுரப்புகள் தடைப்படுகின்றன. இதனால் குறிப்பிட்ட மாத விடாய் காலங்களில் உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. மாத்திரைகள் பாவிப்பதை நிறுத்திவிட்டாலும் சிலருக்குத் தலைவலி, குமட்டல், தலைச்சுற்று, மயக்கம் போன்றவை பக்க விளைவுகளாக ஏற்படலாம். (கர்ப்பத்தடை மாத்திரைகளை நிறுத்தினால் அதற்கு மாற்றீடாக சில மருந்துகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.)

## கொஞ்ச நேரம் தூங்கலாமா?



உங்களுடைய அன்றாடத் தூக்க நேரத்தின் அளவு குறைந்தால் சோர்வும் உடலரிப்பும் ஏற்படும். அதிக நேரம் தூங்கினாலும் சோம்பல் அதிகரிக் கும். உங்களுக்குத் தேவையான தூக்க நேரத்தின் அளவினை நீங்களே நிர்ணயித்துக் கொள்ளலாம். நமது உடம்பே நமக்கு எப்போது தூங்க வேண்டும்; எப்போது எழுந் திருக்க வேண்டும் என்று அறி வுறுத்துகிறது. உடல் தரும் இந்த சமிக்ஞையை நாம் அனேகமாகப் புறக்கணித்து விடுகிறோம்.

நமக்குத் தேவையான தூக்க அளவினை நிர்ணயிக்க இருவாரங் கள் நமது உடல் இடும் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டால் போதுமானது. இயல் பாகவே உங்களுக்குத் தூக்கம் வரும்போது தூங்குங்கள்; அதேபோல் காலையில் விழிப்பு ஏற்பட்டதும் எழுந்து விடுங்கள். இந்த 14 நாட்களிலும் ஒவ்வொருநாளும் எத்தனை மணி நேரம் தூங்கினீர்கள் என்பதைக் கூட்டிப்பாருங்கள். மொத்த மணி நேரத்தை 14 ஆல் பிரித்தால் உங்களுக்கு அன்றாடம் தேவையான தூக்க நேரம் கிடைத்துவிடு கிறது.

## இரத்தம் கொடுக்கலாமா?

ஓர் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது உடம்பில் ஓடும் இரத்தமே. ஆனால், விபத்தினாலோ, அல்லது உடம்பில் இரத்தம் குறைவதாலோ, பலருக்கு உடனடியாக இரத்தம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படு கிறது. மேலை நாட்டில் அனைத்துத் தர மக்களும் பாகுபாடின்றி இலவசமாக இரத்தம் தருகின்றனர். இதனால் அங்கு அனைத்து மருத்துவமனைகளிலும் இரத்தம் எல்லா குருப்களிலும் ஸ்டொக்காக இருக்கிறது.

ஆனால், நம் நாட்டில் நிலைமை தலை கீழ். இங்கே மக்கள் இரத்தம் தர பயப்படு கிறார்கள். இவர்கள் பயத்திற்குக் காரணம் நாம் இரத்தம் கொடுப்பதால், தங்கள் உடம் பிலிருந்து சக்தி போய் விடுகிறது. களைப்பாகி விடுகிறோம் என்று நினைப்பது தான். இது முற்றிலும் தவறான ஓர் எண்ணம். நம் உட லில் இரத்தம் தேவையான அளவில் தினமும் உருவாகிறது. நாம் சாப்பிடும் உணவு வகை களால் தேவையற்ற இரத்தம் கழிவாக வெளி யேறிவிடுகிறது. இது போல் நாம் இரத்தம் கொடுப்பதால், வெளியேறும் இரத்தம் நாம் உண்ணும் சத்தான பொருட்களினால், மீண்டும் உடம் பில் உற்பத்தியாகி விடும் என் பதை புரிந்த கொள்ளவேண்டும். எனவே, இரத்தம் கொடுப்பதால், எந்தப் பாதிப்பும் இல்லை என்று புரிந்து கொள்ளுங்கள்.

அதே போல் உங்களுக்கோ, உங்கள் உறவினர்களுக்கோ தேவைப்படும் சமயத்தில், இன் னொருவரின் இரத்தத்தை செலுத் தும்போது, அதில் எய்ட்ஸ் போன்ற கொடுமையான நோய் களின் கிருமிகள் இல்லையென் பதை பரிசோதித்த அத்தாட்சி களை பார்த்த பின்னரே செலுத்த அனுமதியுங்கள்.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### பதுளை வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான். **எஸ். யோகேஸ்வரி.**

264, பசறை வீதி, மூன்றாம் கட்டை. பதுளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** W

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிர சுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 06-07-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.




படிப்பகம்

www.padippakam.com

# மகாராணி-3 முதல் 70 வரை

பிரிட்டிஷ் மகாராணியார் எலிஸபெத் -சமீபத்தில் அவரது 70வது பிறந்தநாள் உலகெங்கும் நினைவுகூரப்பட்டது. சார்ள்ஸ்-டயானா விவாகரத்துப் பிரச்சனையால் சார்ள்ஸ் மன்னராக முடியாது போகலாம். அப்படி நடந்தால் எலிஸபெத்தான் கடைசி மகாராணியாக இருப்பார். தற்போது எலிஸபெத் ராணியின் சொத்து மதிப்பு எவ்வளவு தெரியுமா? (மயக்கம் போட்டு விழுந்துவிடாதீர்கள்) 4.5 பில்லியன் அமெரிக்க டொலர். கிட்டத்தட்ட ரு.25200 கோடி.



இரண்டாம உலக யுத்தத்தில் பெண்கள் இராணுவத்தில் எலிஸபெத். 1945.



3 வயதில் எலிஸபெத் 29.06.1936

பிள்ளைகள் மற்றும் கணவர் பிலிப்புடன் (ஆன், சார்ள்ஸ், அன்ரு, எட்வேட்)








திருமணக்கோலத்தில்-கணவர் பிலிப்புடன். 20.11.1947

## இராட்சச இரவு

அது ஓர்
இராட்சச இரவு;
நான்-
விடியும் வரை
உன் நினைவோடு
விழித்திருப்பேன்!...!
ooo
மனசு
வெளியே சென்று
ஊருராய்-
அலைந்து திரிந்து
நிம்மதியில்லாமல்
திரும்பி வரும்போது,
சாமக்கோழி கூவும்!
ooo
இமைகளுக்கு
பூட்டில்லாததால்
இந்த(த்)
துரோகி தூக்கம்
அடிக்கடி
வெளிநடப்புச்
செய்து விடுகிறது!
ooo
நீ எந்தவித
சலனமுமில்லாமல்
முழுதாய் இழுத்து மூடி
சின்னதாய்
மரணித்துப் போனாய்......!
ooo
நாய் தூரத்தே
இடைவிடாமல் குரைக்கும்;
உயிர்-
குலையோடு நடுங்கும்!
ooo



கறுப்பு இரவில்
மார்பில் சுடப்பட்டு
துடி துடித்துச்
செத்துப்போன
உன்
நினைவு என்
நெஞ்சைச் சுடும்!
ooo
அச்சம்-
என் உயிரை
முழுதாய் நனைத்து விட்டிருக்கும்;
நான்-
காற்றுப்போன
பலூனாய்
உணர்ச்சிகளற்று
உறங்கிப் போவேன்.....!

தோப்பூர்-கே.எம்.மர்சூக்.

## அனைத்திலும் வெறுமை

அந்த சோடிப்பனையும்
புழுதிக்காற்றும்
தளிர்களால் ஓடைதழுவும்
பூவரச மரங்களும்
அதன் வேர் வெட்டி
குழந்தைச் சோறு
சமைத்துண்ட இடமும்
நேற்றுத்தான்
அகதியாய்ப் போனது!
**
வெயில் பந்தல் போட்டிருந்த
ஒரு கோடை காலமும்
உள்ளங்கைப்பூவில்
தண்ணீர் அள்ளி
மெட்டு முகம் கழுவிவிடும் சுகமும்
நேற்றுத்தான் என்
இருப்பிடத்தை விட்டு தூரமானது!
**
உன்னை நினைக்கையில் ஓடிவந்து
மனசுக்குள் குந்திப்போகுமே-
ஒரு சமாதான நிம்மதி......!
அதுவும் நேற்றிரவுதான்
பதறித்துடித்து விழுந்து
செத்துப்போனது!
**
இனியும் என்ன.....?
இருந்த இடத்திலேயே இருந்தபடி
கொடூரங்களை அள்ளி வீசு.....?
நம்பு, இருதயத்தை உறுதி செய்!
**
ஈரமில்லாத பாலைவனங்கள்-
இரும்பில்லாத மலை முகடுகள்,
பசுமையான புல்வெளிகள்-
எல்லாமே
சமமென்று முடிவு செய்!
எங்கும்
இல்லாமல் இல்லை வெறுமை!

பொத்துவில்-ஏ. மஜீத்.

## ஜொள்ளுக் கவிதை

அன்புக்கடலே!
என் ஆருயிரே-உன்
சிந்தை கவரும்
சிங்கார முகத்தினிடம்
என் மனம்,
சிந்தை பணிகிறது!
அதனாலேயே இம்மடலை-,
என் முதல் மடலை
உன் பிஞ்சுக்கைகளில்
தவழ விடுகின்றேன்.

வான் நிலவே!
விருப்பமிருந்தால்
விடையெழுது!
இல்லை-
கோபப்படாமல்-உன்
தங்கையிடம் கொடு;
அவளும்
சின்னதாய் சிரிக்கின்றாள்?!

அ.டக்ளஸ் ஜெயசேகரன்-வவுனியா.



## காதலித்துப் பார்

கண்கள்
களவாடப்படும்!
oo
தேகம்
தேய்ந்து போகும்!
oo
ஆசைகள்
அஸ்த்தமிக்கும்!
oo
விழிகள்
விசிறி வீசும்!
oo
வாலிபம்
வலைவிரிக்கும்!
oo
கற்பனைகள்
கட்டுக்கட்டாய்
கறவையாகும்!
oo
சந்திப்புக்கள்
சங்கற்பமாகும்!
oo
வெட்கம்
வெண்பா ஓதும்!
oo
புன்னகை
பற்றுக்கோடு இழுக்கும்!
oo
அழகு
அங்கப்பிரதட்சணம் செய்யும்!
oo
இரவுகள் சுமையாகி
தலையணை
ஈரமாகும்!
oo
கனவுகள்!
அடிக்கடி
சன்மானமாகும்!
oo
நெஞ்சு
நெருப்பாய்க் காயும்!
oo
பிரிவுகள்
பிடிவாதம் பிடிக்கும்!
oo
துன்பங்கள்
தூக்கில் இடும்!
oo
தூக்கம்
துரும்பாய்
இளைத்துப் போகும்!
oo
விழிகள்
வெட்கத்தில்
விருத்தாப்பியமாகும்!
oo
முத்தம்
முகவோலைக்கு
முகப்பு ஆகும்!
oo
காதலித்துப்பார்!
காதலே
தாய்மொழியாகும்!

ஷஹிர்ஷா தாஸிம்,
தர்காநகர்.

## தாவணி கட்டிய கவிதை

என் முறைத்து(க்)
குப்பை முகடுகளை
விடவும்-
கனத்து விட்டது,
உனது கடிதக் கீறல்கள்..!
ஆனாலும்-
பத்திரப்படுத்துகிறது
மனசு.!
*
உனக்கும் காதலில்
கருமித்தனமா..?

இல்லையேல்-
என் கனவில்-
நிதமும் வந்து போ..!
நீ-
மடித்தனுப்பும்
காகிதத்தின்-
எல்லா இடைவெளிகளையும்
நிரப்பி விடு- ஒரு
சின்ன ஆறுதலுக்காய்!

ஆனாலும்-
ஒரு வேண்டுகோள்!
நீ.. நிலவுக்கு ஒப்பானவள்-
என்பதை மட்டும்-
தவிர்த்துக் கொள்!
ஏனென்றால்-
நம் இதயங்களும்
தேய்ந்து போய்விடுமே-
இந்தத் தேசத்தின்
சமாதானத்தைப் போல..!

எம்.எம். விஜிலி- மருதமுனை.

## இந்த வாரம் உங்கள் பலன்

( 30.06.96 முதல் 06.07.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன், புதன் |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| இடபம் | - வெள்ளி, செவ்வாய். |

சந்திரன்- விருட்சிகம், தனு, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, பணவரவு. | பி.ப. 2 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, கௌரவம். | காலை 7 | மணி |
| புதன்- காரியானுகூலம், தொழில் மந்தம். | பி.ப. 2 | மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | காலை 6 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 | மணி |
| சனி- கௌரவம், தேகசுக நன்மை. | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 | மணி |
| திங்கள்- உயர்ந்தநிலை, வெளியிட வாழ்க்கை. | பி.ப. 2 | மணி |
| செவ்வாய்- தேகசுக நன்மை, செலவுமிகுதி. | பி.ப. 1 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், கௌரவம். | காலை 7 | மணி |
| வியாழன்-மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பகல் 12 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, தொழில் கஷ்டம். | பி.ப. 2 | மணி |
| சனி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பயனுள்ள செயல், பணவரவு. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | காலை 7 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, காரியானுகூலம். | பி.ப. 1 | மணி |
| புதன்- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 6 | மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, உயர்ந்த வாழ்க்கை. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, மனக்கலக்கம். | காலை 7 | மணி |
| சனி- உறவினர் உதவி, மனப் போராட்டம். | பி.ப. 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், பணவரவு. | காலை 6 | மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், உயர்ந்த நிலை. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- மன மகிழ்ச்சி, பிரயாண மிகுதி. | பி.ப. 2 | மணி |
| புதன்- வீண் கலக்கம், பெரியோர் உதவி. | காலை 7 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, கடன் படல். | மு.ப. 9 | மணி |
| வெள்ளி- பணக் கஷ்டம், பெரியோர் நட்பு. | பகல் 12 | மணி |
| சனி- தொழில் விருத்தி, இனசன நன்மை. | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 6 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 1 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, உயர்ந்த நிலை. | பி.ப. 2 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 6 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழக்கை, பொருள் இழப்பு. | பகல் 12 | மணி |
| சனி- அந்நியர் உதவி, கௌரவக் குறைவு. | பி.ப. 3 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம். ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, முயற்சி பலிதம். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, அந்நியர் உதவி. | காலை 6 | மணி |
| செவ்வாய்- வீண் கஷ்டம், மனக் கலக்கம். | பகல் 12 | மணி |
| புதன்- உறவினர் பகை, பண இழப்பு. | பி.ப. 2 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, இனசன நன்மை. | காலை 7 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 2 | மணி |
| சனி- பொருள் வரவு, சுபகாரிய மகிழ்ச்சி. | காலை 6 | மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக்குறை நீங்கும். | பி.ப. 1 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, செலவு அதிகம். | காலை 6 | மணி |
| செவ்வாய்- மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. 2 | மணி |
| புதன் - தொழில் சிறப்பு, பண வரவு. | காலை 7 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, மனக்கலக்கம். | பி.ப. 1 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | காலை 6 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. 3 | மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 | மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், பொருள் வரவு. | பி.ப. 1 | மணி |
| புதன்- மன மகிழ்ச்சி, காரிய சித்தி. | காலை 7 | மணி |
| வியாழன்-பெரியோர் உதவி, பணவரவு. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக் கலக்கம். | காலை 7 | மணி |
| சனி- செய் தொழில் விருத்தி, செலவு மிகுதி. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, இனசன நன்மை. | பகல் 12 | மணி |
| திங்கள்-பெரியோர் உதவி, பொருள் வரவு. | காலை 7 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 1 | மணி |
| புதன்- மனமகிழ்ச்சி, காரியசித்தி. | காலை 7 | மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | பகல் 12 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | காலை 8 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | காலை 6 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், முயற்சி பலிதம். | பி.ப. 3 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 7 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 1 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், தொழில் சிறப்பு. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, முயற்சி வெற்றி. | காலை 7 | மணி |
| சனி- உயர்ந்த நிலை, மனமகிழச்சி. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- காரியசித்தி, பணவரவு. | மு.ப. 9 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, பிரயாண மிகுதி. | பி.ப. 2 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 7 | மணி |
| வியாழன்-வீண் மனஸ்தாபம், தொழில் விருத்திதடை. | காலை 6 | மணி |
| வெள்ளி-உறவினர் உதவி, பணக் கஷ்டம். | பி.ப. 2 | மணி |
| சனி- தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | காலை 6 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், கௌரவம். | காலை 6 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, தொழில் விருத்தி. | பி.ப. 3 | மணி |
| புதன்- காரியானுகூலம், செலவு மிகுதி. | காலை 6 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பகல் 12 | மணி |
| வெள்ளி- பொருள் நஷ்டம், மனப்பயம். | காலை 7 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்





## எறும்புக் கூட்டம்

சிற்றெறும்பு ஒன்று வீட்டைச்
சுற்றி வந்தது!
சிதறிக் கிடந்த ரொட்டித் துண்டை
கண்டு கொண்டது!

பற்றி யதை இழுத்துச் செல்ல
முயற்சி செய்தது!
பலிக்கவில்லை, வந்தவழி
பயணம் செய்தது!

சற்று நேரம் கழித்து மீண்டும்
திரும்பி வந்தது!
சாரையாக எறும்புக் கூட்டம்
தொடர்ந்து வந்தது!

ஒற்றுமையாய் இரையைக் கவ்வி
இழுத்துச் சென்றது!
ஒன்று பட்டால் உண்டு பலம்
உணர்த்திச் சென்றது!

-இளங்குமரன்-

வண்டி இழுக்கும் நல்ல குதிரை-நெல்லு
வயலில் உழுது வரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மை, ஆடு-இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா!

-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை

# விவசாயிகளின் சமயோசிதம்

விதநாட்டை விக்ரமன் ஆட்சி செய்து வந்தான்.

ஒரு நாள் அவனைச் சந்திப்பதற்காக மூன்று விவசாயிகள் அரண்மனைக்கு வந்தனர். கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டு அவர்கள் உதவி பெறவே மன்னனிடம் வந்திருந்தனர். மன்னர் அவர்களைப் பற்றி விசாரித்தார். அவர்கள் வந்ததற்கான காரணத்தைச் சொல்லவில்லை.

"மன்னா! எங்களுக்கு உலகில் தெரியாத விஷயமே இல்லே. நீங்கள் எந்தக் கேள்வி கேட்டாலும் அதற்கு உடனுக்குடன் பதிலளிக்க நாங்கள் தயார். எங்கள் திறமையைக் காட்டிப் பரிசு பெறவே வந்தோம்" என்றனர்.

அதைக் கேட்டதும் வியப்படைந்தான் மன்னன் விக்ரமன். 'இவர்கள் என்ன சொல்கிறார்கள்?' என்று கண்களினாலேயே தம் அவையில் இருந்த அறிஞர்களைப் பார்த்துக் கேட்டான்.

எல்லோரும் பேசாமல் மௌனம் சாதித்தனர். கடைசியில் ஒருவன் எழுந்து மன்னனைப் பார்த்து, "மன்னா! நீங்கள் அனுமதித்தால் இவர்களிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன்," என்றான். அதற்கு விக்ரமனும் சம்மதித்தான்.

அவன் அவையில் இருந்த மூவரையும் பார்த்தான். முதலாவது மனிதனுக்கு தலை முடி நரைத்திருந்தது. ஆனால் தாடியும், மீசையும் கறுப்பாக இருந்தது. இரண்டாவது மனிதனுக்கு தலைமுடி கறுப்பாக இருந்தது. அதே சமயம் தாடியும், மீசையும் நரைத்திருந்தது. மூன்றாமவனுக்கோ தாடியுமில்லை, மீசையுமில்லை.

இதைக் கவனித்த அறிஞன் முதலாவது மனிதனிடம், "உங்கள் தாடியும், மீசையும் கறுத்திருக்கிறது. தலைமுடி நரைத்திருக்கிறது. இதற்கான காரணத்தைச் சொல்லமுடியுமா?" என்று கேட்டான்.

இதைக்கேட்ட அந்த விவசாயி அந்த அறிஞனைப் பார்த்து,

"இரண்டு வயல்களில் நெல் விதைப்பதாக வைத்துக் கொள்வோம். முதலில் விதைத்த நெல் விதை முதலில் அறுவடைக்குத் தயாராகி விளைச்சலைத் தருகிறது. அடுத்து விதைத்தது அடுத்ததாக விளைச்சலுக்கு வருகிறது. அதே போல் தலைமுடியோ பிறக்கும் போதே இருந்தது. தாடி-மீசையோ அதன் பின்னர் இளைஞனாக வளர்ந்தபோது முளைத்தவை. அதனால் முதலில் இருந்த தலைமுடி, முதலில் விளைச்சலுக்கு வந்த நெற்பயிரைப் போல நரைத்து விட்டது." என்றதும் அவையில் பெரும் ஆரவாரம் ஏற்பட்டது. மன்னனும் புன்முறுவல் பூத்தான்.



அதன் பிறகு அந்த அறிஞன் இரண்டாமவனைப் பார்த்து,

"உங்கள் தலைமுடி எல்லாம் கறுப்பாகவும், தாடி, மீசை மட்டும் வெளுத்தும் காணப்படுகிறதே என்ன காரணம்?" என்று கேட்டான்.

"இதில் என்ன அதிசயம் இருக்கிறது. இரண்டு வயல்களில் பயிரிடுவதாக வைத்துக் கொள்வோம். இதில் முதல் வயலில் அதிக நீர் பாய்கிறது. அதுதான் நன்றாகச் செழித்து வளர்ந்து அறுவடைக்குத் தயாராகி விடும். சற்றுக் குறைவாக நீர் பாயும் இரண்டாவது வயலோ தாமதமாக அறுவடைக்கு வரும் அல்லவா? அது போல் தினமும் காலையில் இருந்து மாலை வரை இரண்டு மூன்று முறையாவது முகம் கழுவுகிறோம். அப்போது தாடி, மீசையில் நீர்பட்டுக் கொண்டே இருக்கும். அதனால் நீர் அதிகமாகப் பாயும் வயலைப் போல அறுவடைக்குத் தயாராக வெளுத்துவிட்டது. தலைக்கு வாரத்தில் ஒரு முறையோ அல்லது இருமுறையோதான் குளிக்கிறோம். நீர் குறைவாகப் படுவதால் தலைமுடி அறுவடைக்குத் தாமதமாகும் வயலைப் போல் இன்னும் வெளுக்க வில்லை," என்றான்.

இரண்டாவது விவசாயியின் பதிலை அவையோர் இரசித்துப் பாராட்டினர்.

மன்னனும் மகிழ்ச்சியடைந்தான்.

பிறகு மூன்றாவது நபரைப்பார்த்து அறிஞன் கேட்டான்: "உங்களுக்கு தாடியும் மீசையும் முளைக்கவில்லையே ஏன்?"

மூன்றாவது நபர் உடனே,

"உலகத்தில் தாய்-தந்தையர் மெச்சிக் கொள்ளத் தக்க வகையில் பிறந்தவன் நான் ஒருவனே! ஏனென்று கேட்கிறீர்களா? இதோ பாருங்கள். கழுத்து வரை என் அம்மாவின் சாயல். அதற்குக் கீழே என் அப்பாவின் சாயல். இல்லையா?" என்றான்.

இந்தப் பதிலைக்கேட்டு அவையோர் 'கொல்'லென்று சிரித்து கரகோஷம் செய்தார்கள்.

மூன்று விவசாயிகளின் அறிவைப் பாராட்டிய விக்ரமன் மூவருக்கும் பல பரிசுகளை வழங்கினான்.

## வாரம் ஒரு நாடு — நிகரகுவா

தலைநகர்-மனாகுவா
பரப்பு-1,30,000 சதுரகிலோமீட்டர்.
மக்கள் தொகை- 41,00,000
மொழி- ஸ்பானிஷ், ஆங்கிலம்
எழுத்தறிவு-57%
சமயம்-கிறிஸ்தவம்
நாணயம்- கொர்டோபா
தனி நபர் வருமானம்-425 டொலர்



**அமைவிடம்:**

நிகரகுவா குடியரசு மத்திய அமெரிக்காவின் நடுவில் அமைந்துள்ளது.

**வரலாறு:**

1821 ல் ஸ்பெயினில் இருந்து சுதந்திரம் பெற்றது. சிறிது காலம் மெக்சிக்கோவுடன் கூட்டுச்சேர்ந்திருந்தது. 1838ல் குடியரசானது. 1979 வரை ஒரு பதட்டச் சூழலே இருந்தது. அமெரிக்காவுடனான தொடர்பு சினேகபூர்வமானதாக இல்லை. எல்சல்வடோரில் இடதுசாரி கெரில்லாக்களுக்கு உதவி அளித்ததால் அமெரிக்கா மாறுபட்டது. அமெரிக்காவின் பின்துணையுடன் கோண்ட்ரோ கெரில்லாக்கள் மறைந்திருந்து தாக்கி வருகின்றனர். அமெரிக்காவை இதிலிருந்து விலகுமாறு சர்வதேச நீதிமன்றம் வலியுறுத்தியது. ஹோண்ட்ராசிலிருந்து கோண்ட்ரோ கெரில்லாக்களுக்கு நிகரகுவாவை ஆக்கிரமிக்க அமெரிக்கா உதவி செய்வதாக ஒரு கருத்து பரவலாக உருவாகியுள்ளது. கெரில்லாக்களுக்கு இரகசியமாகப் பண உதவி செய்வதாக அமெரிக்காவில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. 1986 இல் அமெரிக்கா பகிரங்கமாகவே கெரில்லாக்களுக்குப் பண உதவி அளிக்க முடிவு செய்தது. 1984 தேர்தலில் சாண்டிஸ்னிஸ்ட் தலைமையில் அரசு அமைக்கப்பட்டது. 1990 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சி அணி அதிகாரம் ஏற்றுள்ளது.

**பொருளாதாரம்:**

விவசாயம் முக்கிய தொழில் மக்களில் 85 சதவீதம் பேர் விவசாயம் சார்ந்துள்ளனர். தங்கம், வெள்ளி ,செம்புச் சுரங்கங்கள் உள்ளன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 06.07.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 147
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 145

பரிசுக்குரியவர்:
K. ஷிறான் அஹமட்.
பிரதான விதி, பலாங்கொடை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ரி. துஷாந்தன். எலி ஹவுஸ் பூங்கா வீதி,மட்டக்குளி. | செல்வன். ப. ருசான். விஷ்ணு ஆலய வீதி, கல்குடா. |
| F.மர்ஜினா. முஸ்லிம் பள்ளி வீதி, இரத்தினபுரி. | ஏஞ்சலின் பிரியதர்சனி. விஸ்ட்வைக் வீதி, கொழும்பு-15. |
| செல்வன். ஜோசப் ஜோய். புனித சூசையப்பர் தொழில் நுட்பக் கல்லூரி, திருமலை. | ஆர். மகாலக்ஸ்மி. கு/முவான்கந்தை ச.த.வி. மாவத்தகம. |
| வி. துஷியந்தினி. கிங்ஸ்ரன் சர்வதேச கல்லூரி. | K. ராமச்சந்திரன். தெஹியோவிட்ட, த.மா.வி. தெஹியோவிட்ட. |
| ஏ.சி. முஹம்மது நிஸ்வான். சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | D. அக்னஸ் ரேணுகா. நல்லத்தண்ணி தோட்டம், அக்கரப்பத்தனை. |

## வெற்றி எலும்புகள்




கண்ணுக்குத் தெரியாத மின்காந்தக் கதிரியக்க அலை இருப்பதை வில்ஹெம் ரொன்ட்ஜென்ட் என்பவர் கண்டுபிடித்தார். அது என்ன வகையான கதிர் வீச்சு என்று அறியாததால் எக்ஸ் கதிரியக்கம் என்று பெயரிட்டார். முதன் முதலாக தனது கையின் எலும்புகளையே இவர் நிழற்படமாக எடுத்தார்.

இதற்காக 1901 ஆண்டின் பௌதீகத்திற்கான நோபல் பரிசு இவருக்குக் கிடைத்தது. இவரது கண்டுபிடிப்பு மருத்துவ உலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது.

## கிரகடோ தீவு

**★ கிரகடோ தீவு எதனால் புகழ் பெற்றது?**

இந்தத் தீவில் ஒரு எரிமலையால் ஏற்பட்ட மிகப் பெரிய அழிவு இதுவரை உலகில் எங்கும் நடைபெறாததால் இத்தீவு புகழ்பெற்றது.



**★ கிரகடோ தீவு எங்குள்ளது?**

இந்து மா கடலில் உள்ள இந்தத்தீவு ஜாவா, சுமாத்ரா தீவுகளுக்கு இடையே அமைந்துள்ளது.

**★ இத்தீவில் ஏற்பட்ட மிகப் பெரும் அழிவு என்ன?**

36 ஆயிரம் பேர் இறந்தனர். 300 கிராமங்கள், 6 ஆயிரம் கப்பல்கள் சேதமடைந்தன. இந்த அழிவினால் ஏற்பட்ட தூசி அடங்கவே ஒரு வருடமானது. 47 சதுர கிலோ மீட்டருக்கும் மேற்பட்டதீவு அழிந்து போனது.

**★ இந்த அழிவு எப்போது ஏற்பட்டது?**

1883ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 27ம் திகதி.

**★ 'கிரகடோ' தீவுக்கு அதிகமாகச் செல்பவர்கள் யார்?**

புவியியல் அறிஞர்கள், தாவரவியல், விலங்கியல் மற்றும் இயற்கையாளர்கள் இந்தத் தீவுக்குச் சென்று உயிர்கள் எப்படி உருவாகின்றன என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு ஆர்வமுடன் இத்தீவை நோக்கிப் படையெடுக்கின்றனர்.

## விடுகதைகளும் விடைகளும்

1. ஒரு பானை தண்ணீரில்
ஒய்யாரி ஆட்டம் போடுகிறாள்;
அவள் யார்?
2. கல்லிலே காய்க்கும் பூ;
தண்ணீரில் மலரும் பூ-
அது என்ன பூ?
3. ஓயாது இரையும்; இயந்திரம் அல்ல
உருண்டோடி வரும்; பந்தும் அல்ல-
அது என்ன?
4. கிட்ட இருக்கும் பட்டணத்தை
எட்டிப் பார்க்க முடியவில்லை
அது என்ன?
5. நித்திரையின் தூதுவன்;
நினையாமல் வருவான்-
அவன் யார்?
6. காலைக் கடிக்கும் செருப்பல்ல;
காவல் காக்கும் நாயும் அல்ல-
அது என்ன?

**விடைகள்**

1. மோர் மத்து 2. சுண்ணாம்பு
3. கடல் அலை 4. முதுகு
5. கொட்டாவி 6. முள்வேலி

தொகுப்பு: என்.ஜலீலா, கொள்ளுப்பிட்டி.

## நத்தை



★ நத்தையின் ஓடுகளில் பெரும்பாலும் வலம்புரிச் சுருள்களே காணப்படும்.

★ சில இனங்களில் ஆண், பெண் இனப்பெருக்க உறுப்புக்கள் ஒரே நத்தையின் உடலில் காணப்படும்.

★ நத்தையின் தோலினூடே நீர் உட்புறமும், வெளிப்புறமும் செல்ல முடியும்.

★ நத்தைகளால் புவி காந்தப்புலனை உணர முடியும். அவை செல்லும் திசையில் காந்தத்தை வைத்தால் திசை மாறிச் செல்லும்.

★ இவை இனவிருத்தியில் சுறுசுறுப்பானவை. ஒரே சுற்றில் 150 முதல் 350 முட்டை வரை இடும்.

★ சில வகை நத்தைகள் தொடர்ந்து 15 ஆண்டுகள் வரை உறங்கும் இயல்புடையவை.

★ கடல் நத்தைகளின் ஓடுகளில் ஒரு கதவு உள்ளது. மீன்கள் இவற்றை விழுங்கினாலும் மீன்களின் ஜீரண நீர் இக்கதவை ஊடுருவாது. எனவே நத்தை இறந்து போகாது.

## குதிரையின் பார்வை

நாம் எதையாவது உன்னிப்பாகப் பார்க்க வேண்டுமானால் நமது கண்ணிலுள்ள கண்வில்லை அதற்கேற்ப அளவை மாற்றிக் கொள்ளும். ஆனால் குதிரை தலையைத் திருப்பி, குறிப்பிட்ட ஒரு கோணத்தில் பார்ப்பது மூலமாகத்தான் ஒரு பொருளை உற்றுப் பார்க்க முடியும்.



"பாஸ்!" ஜென்னி கேட்டாள் "இவன் என்ன உளர்றான்!"

"அதானே! சிறுவனே, நல்லாப் பார்த்துச் சொல்லு இந்தப் பெண்தான் அபிராமி."

"ஆனா-நிச்சயமா சொல்வேன் சார். நான் பார்ட்டியில பார்த்த பெண்ணுக்கும் இவளுக்கும் நிறைய வித்தியாசமிருக்கு."

"என்ன வித்தியாசம்?"

"அதைத்தான் சொல்லத் தெரியல்ல. ஆனா வித்தியாசமிருப்பது என்னவோ நிஜம்."

"குழப்பறான் பாஸ் ரொம்பவும் குழப்பறான்."

"இருக்கும். பசி நேரம் பஞ்சடைந்த கண்களால பார்த்தால் வித்தியாசம் தெரியும். அடையாளமும் புரியாது."

"சரி வாங்க. போய் ஏதாவது திங்கிறதுக்கு வாங்கி தந்துட்டு அப்புறமா கூட்டிட்டு வருவோம்."

"அதுவும் சரி." ராஜா சொன்னான். "கிளம்புங்க. முதல்ல வயிற்றை நிரப்பிகிட்டு அப்புறமா வரலாம்."

இறங்கி வரும்போது அம்மாள் கவலையாக பார்த்தாள். "எதுக்கு அவள் படத்தைப் பார்க்கப் போனீங்க?"

"சும்மாத்தான் இந்தப் பையனுக்குப் பெண் தேடறோம். ஒரு வேளை இந்தப் பெண் சரிப்படுமான்னு பார்க்கப் போனோம்."

"நிஜமாகவா சொல்றீங்க? அப்ப என் பொண்ணுக்கு விடிவு காலம் பொறக்குதா?"

இருக்கிறாங்களா?"

"ஆமா இப்பத்தானே சாப்பிட கிளம்பிப் போனாங்க."

"அச்சச்சோ."

"ஏம்மா ஏதும் அவசரக் காரியமா?"

"தலை போகிற அவசரம். நான் அவங்களை உடனடியாத் தொடர்பு கொண்டாகணுமே? எந்த ஹோட்டல் போனாங்க தெரியுமா?"

"ஏதோ ஹோட்டல்ன்னு சொன்னாங்களே."

"ப்ளீஸ் ஞாபகப்படுத்திப் பாருங்க. ரொம்பவும் அவசரமான? அவசியமான விவகாரம்."

"இரு ஞாபகம் வந்துட்டது. கன்னிமாரா போறதாகச் சொல்லிட்டுப் போனாங்க. இந்நேரம் போய்ச் சேர்ந்திருப்பாங்க. முயற்சி செய்து பாரேன்."

"சரி."

அவசரமாக தொடர்பு அறுந்து போகவே போனை சாத்தினாள் அம்மையார்.

"சாப்பாடு தயாராயிடுச்சு வாங்கம்மா." என்று தாயம்மாள் கூப்பிட.

சரேலென சக்கர நாற்காலியை விட்டிறங்கி நடந்து போய் சாப்பாட்டு மேஜையருகே அமர்ந்தார் அந்த அம்மாள்.

ஆறாவது தடவையாக முயன்ற போது தான் ஹோட்டல் லைன் கிடைத்தது.

"ஓர் எமர்ஜென்ஸி. அவசரமாக ஒருத்தரோட பேச வேண்டும்."

"ரூம் நம்பரைச் சொல்லுங்கள்"

"ரூம்ல இல்லை, சாப்பாடு சாப்பிட இப்பத்தான் கிளம்பி அங்கே வந்திருக்கிவது தேடிப் பிடிச்சு உடனே எனக்கு வீட்டுக்குப் போன் செய்யச் சொல்லு."

"இதான் எனக்கு வேலையா?"

"அம்மா! தலைபோகிற அவசரம்மா. நீதான் போய் அவங்களைக் கண்டு பிடிச்சாகணும். அவங்களும் உடனடியா என் கூட பேசியாகணும்."

"பிஸிநேரத்தில தொல்லை செய்றியே பெண்ணே."

"அலட்சியப்படுத்திடாதேம்மா). காணாமப் போன வைர நெக்லஸ் கிடைச்சாச்சுன்னு தான் நினைக்கிறேன்."

"நிஜமாவா? எங்கே இருக்கு?"

"அதைக் கண்டு பிடிக்கத்தான் ராஜாவுக்கு க்ளூ கொடுக்கணும். அதுக்கு நீதான் அவங்களைக் கண்டு பிடிச்சு உதவணும். ப்ளீஸ் மம்மி."

"சரி. சரி. கெஞ்சாதே. போன் செய்யச் சொல்றதோட என் வேலை முடியுமில்லையா? உடனே நான் மீட்டிங்குக்குத் திரும்பலாமில்லே."

"உடனே.. உடனே போயிடலாம்."

"சரி. போறேன்."

"இன்னுமா நீ போகல்லை?"

"போறேண்டி. போறேண்டி. தொல்லைப் படுத்தாதே."

❋ ❑ ❖ ■ ❋

ஹோட்டல் வெளியே காரை நிறுத்தி விட்டு கண்ணாடிக் கதவைத் தள்ளித் திறந்த போதே-

சரஸ்வதியம்மாள் தங்க பிரேம் மூக்குக் கண்ணாடியை உயர்த்திப் பார்த்தாள்.

"ராஜா தானே?"

முயன்றான்.

"எஸ், ஜோதி! அம்மா இல்லையே. லயன்ஸ் கிளப் மீட்டிங்கு போயிருக்கிறாங்க."

"கேட்டேனா? அதைக் கேட்டேனா? கேள்வி கேட்கிறதுக்கு முன்னால நீயே பதில் சொல்லாதே. அது ரொம்பவும் கெட்டபழக்கம். எங்க ராஜேஸ்வரி அண்ணி அங்கே வந்தாங்களா?"

"இல்லை. போன் தான் வந்தது. எங்கேயோ ஷாப்பிங்குக்குப் போறாங்களாம். திரும்பி வருகிறப்ப ஆபீஸுக்கு வருகிறாங்களாம். அக்கவுண்டண்ட் கிட்டே அம்பதாயிரம் ரூபாய் எடுத்து வைக்கச் சொல்லி இருக்கிறாங்க. மூணு மணிக்கெல்லாம் வந்துடுவேன்னாங்க. ஏன் மேடம்? ஏதாவது சொல்லணுமா?"

"எதுவும் சொல்லக்கூடாது. குறிப்பாக என்னோட போன் வந்த விவரம் மட்டும் சொல்லவே கூடாது. புரியுதா?"

"சரி மேடம்! அவங்க வர்றதையே கண்டுக்காம நாவல் படிச்சிட்டிருக்கேன். சரியா?"

"அது தான் சரி." அனுமதித்தாள். "செய்" என்று போனை வைத்ததும், வைக்கப் படுவதற்காகவே காத்திருந்தாற் போல அது வீறிட்டது. எடுத்தாள்.

எடுத்துக் கேட்டவள் "ராஜா" என்றதும் பூரித்துப் போனாள்.

➡ ✌ ✈

இன்ஸ்பெக்டர் வேதநாயகம் குழப்பத்திலிருந்தார்.

என்னதான் முயன்றாலும் வழக்கு என்னவோ செக்குமாடுமாதிரி சுற்றிச் சுற்றிக் கிளம்பிய இடத்துக்கே வந்து கொண்டிருக்கிறது.

பிணங்கள் இரண்டும் சவக்கிடங்கில்துக்கு சரியாக இரண்டரை மணிக்கு வந்து விடுங்கள்."

"சரி. சொல்லுங்கள்."

குறித்துக் கொண்டவர் வியந்தார். இப்போது தலைவலி இல்லை. காரணம் தேநீரா? அல்லது தொலை பேசியில் வந்த செய்தியா?"

★▫★▫★▫★▫★▫★

சாம்னைஸ்ட் சூட்கேஸ் ஒன்றுடன் ஆட்டோவை விட்டு இறங்கினாள் ராஜேஸ்வரி.

லிப்ட்டுக்குக் காத்திருக்காமல் மெதுவாக படியேறியே ஐந்தாவது மாடியை அடைந்தாள்.

கடைசி படியில் நின்று நிறைய மூச்சு விட்டுக் கொண்டு சுவாசத்தைச் சீராக்கினாள்.

ஆபீஸுக்குள் நுழையவும் ரிசப்ஷன் பெண் மர்ம நாவலை மூடி வைத்து "சே! கடைசியில இவதானா கொலைகாரி." என்று சலித்துக் கொள்ளவும் சரியாக இருந்தது.

"ஏய் மாலதி. என்ன உளர்றே?"

"ஸாரிம்மா. நாவல்ல கடைசி முடி

**யாரும் பார்க்கவில்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டபின்– உள்ளே போய் கதவை ஓசைப்படாமல் சாத்தித் தாளிட்டுக் கொண்டாள்.**

**....மெல்ல மெல்ல பீரோவை நெருங்கி.........**

# மர்மக்கதை மன்னன் ராஜேந்திரகுமார்

# நீ! நீயா!




**"...வழக்கு என்னவோ செக்குமாடு மாதிரி சுற்றிச் சுற்றிக் கிளம்பிய இடத்துக்கே வந்து கொண்டிருக்கிறது....."**

"பொறந்தாச்சு. நாங்க போய் ஹோட்டல்ல ஏதாவது சாப்பிட்டுட்டு வரோம். மறுபடியும் படத்தைக் காட்டி எல்லாம் முடிச்சிடலாம்."

"அதுக்கேன் ஹோட்டல்? இங்கேயே தாயம்மாவை சமையல் செய்யச் சொல்றேனே. சாப்பிடலாமே."

"வேண்டாம்மா."

"ஏம்மா?"

"இவ்வளவு நேரமா நாங்கதான் அவங்க சமையல் வாசனையை மோப்பம் பிடிச்சோமே. வாசனை ஒண்ணும் ரசிக்கும் படியா இல்லே. தவிர கல்யாணம் பேசறதுக்கு முன்னால பையன் இந்த வீட்டில கை நனைக்கக்கூடாது. கன்னிமாரா ஹோட்டல்லதான். இதோ வந்துடறோம்."

"செய்யுங்கள்."

வெளியேறிப் போனார்கள்.

அவர்கள் போய் சரியாக பத்தாவது நிமிஷம் போன் வந்தது.

"ஜோதி பேசறேம்மா."

"ஜோதியா? என்னம்மா?"

"அங்கே ராஜா அண்ட் பார்ட்டிறாங்க. ரெஸ்டாரெண்டில் மிஸ்டர் ராஜா அர் ஜென்னி இரண்டு பேரில் யாரையாவது கூப்பிடுங்களேன் ப்ளீஸ்."

"சிரமப்படும். முயற்சி செய்கிறேன்."

"ஹலோ."

"யா"

"லயன்ஸ் கிளப் கமிட்டி மீட்டிங் நடக்கிற ஹாலுக்குக் கொடுங்க. மிஸஸ் சரஸ்வதியம்மாவோட பேசணும்."

"ப்ளீஸ் வெயிட்."

கொஞ்ச நேரக் குறட்டைக்குப் பிறகு அம்மா வந்தாள்.

"அம்மா! நான் ஜோதி பேசறேன்?"

"இங்கெல்லாம் எதற்கு போன் பண்றே நீ? நான் பிஸியாக இருக்கேனே தெரியல?"

"அதைவிடத் தலைபோகிற விஷயம் பேசணும். அதான் கூப்பிட்டேன்."

"பேசேன் பின்னே?"

"ஐயோ. உன்னோடயில்லேம்மா! மிஸ்டர் ராஜா இல்லேன்னா ஜென்னியோட பேசணும்."

"அவங்க ஏண்டி எங்க கமிட்டி மீட்டிங்குக்கு வராங்க?"

"ஐயோ. அதில்லேம்மா. கீழே ரிசப்ஷன்லே, இல்லே ரெஸ்டாரெண்டில எங்க"யார்?"

"ஜென்னி?"

"நான் தான் மேடம்."

"உங்க ரெண்டு பேர்ல யாராவது ஒருத்தர் உடனடியாக என் வீட்டுக்கு போன் செய்து ஜோதியோட பேசுங்க."

"ஜோதியா? ஏன் மேடம்"

"என்னமோ தலை போகிற அவசரமாம். போன் செய்யச் சொன்னா. நான் மீட்டிங்கை பாதியில விட்டுட்டு வந்துட்டேன். வரேன்."

இவர்கள் எதையோ கேட்க முயலும் முன்லிப்ட் ஏறி மேலே போய் விட்டாள்.

கொஞ்ச நேரம் ஆளுக்கு ஆள் பார்த்து விழித்தார்கள்.

"என்ன சொல்லிட்டுப் போறாங்க இவங்க?"

"இப்பதானே பார்த்து ஆபீஸுக்கெல்லாம் போயிட்டு வந்தோம். அதுக்குள்ளே என்ன அவசரம் வந்திருக்கும்? ஆதுவும் சாப்பிடப் போகிற நேரத்தில்?"

"முயன்றுதான் பார்ப்போமே. பாஸ். என்ன இப்ப?"

ராஜா முயன்றான்.

எங்கேஜ் சத்தம்தான் வந்தது.

பங்களாவில் ஜோதி போனில் ஆபீசுக்குஅழுகிக் கொண்டிருக்கின்றன.

சீக்கிரமாக அப்புறப்படுத்த வேண்டும் என்கிறார் ஆஸ்பத்திரி ஆணையாளர்.

கேட்பாரற்ற 'அன்-கிளெய்ம்ட் பாடி' என்று போலீசே எரித்து விட வேண்டியது தான். ஆனால்-

ஐ.ஜி.கேள்வி கேட்பார்; சட்டசபையில் யாராவது ஓர் எம்.எல்.ஏ. 'கையாலாகாத்தனம்' என்று குற்றம் சாட்டுவார்; முதல்வர் கூப்பிடுவார்.

தலையை வலிப்பது போல உணர்ந்தார். தேநீர் வரவழைத்து அருந்தும் போதுதான் தொலைபேசி ஒலித்தது.

எடுத்தார்.

"சார்! நான் ராஜா பேசறேன். ராஜா துப்பறியும் பாக்டரி."

"சொல்லுங்க."

"விலங்கைத் தூசு தட்டி எடுத்து வையுங்கள் சார்! சரியாக மூன்று மணிக்கு அந்த இரட்டைக் கொலை வழக்கு சம்பந்தமாகக் கைது செய்யப் போகிறோம்."

"யாரை?" ஆர்வமாகக் கேட்டார் "யாரை?"

"இப்பவே சொன்னால் சுவாரஸ்யம் போய் விடும். நான் சொல்லுகிற விலாசத்வைச் சொல்லி அசத்திவிட்டார். அதைச் சொன்னேன். அக்கவுண்டண்ட் உங்களுக்காகத்தான் வங்கிக்குப் போய் இருக்கிறார். தொகை பெரிசாச்சே. இருங்க இப்ப வந்துடுவார்."

"நான் அத்தையோட ரூமிலிருக்கேன். வந்தா போன்ல சொல்லு." என்று கண்ணாடிக் கதவைத் தள்ளித் திறந்து போனாள்.

ஸ்டூலில் அமர்ந்தபடி தூங்கிக் கொண்டிருந்த ஆபீஸ் பையனைத் தொல்லைப்படுத்தாமல் மெல்லக் கதவைத் தள்ளி திறந்து-சுற்றும் முற்றும் பார்த்து யாரும் பார்க்கவில்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டபின்-உள்ளே போய் கதவை ஓசைப்படாமல் சாத்தித் தாளிட்டுக் கொண்டாள். குளிர் சாதன உறுமல் தவிர ஓசையேயில்லாமல் அறை அமைதி காட்டி நின்றது.

மெல்ல மெல்ல அந்த பீரோவை நெருங்கினாள். கைப்பையைத்திறந்து வெளியே எடுத்தாள் அந்த சாவியுடன் கூடிய வைர நெக்லஸை!

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ். சஞ்சீவ்.
வயது: 17
முகவரி: 30, வன்னியனார் வீதி, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: கிரிக்கெட், ரீ.வி., வானொலி.



பெயர்: என். நவராஜா.
வயது: 23
முகவரி: 51-சி, காலி வீதி, தெஹிவளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரீ.வி., வானொலி.



பெயர்: ஏ. டியோனிஸ்.
வயது: 25
முகவரி: VIA-AIBAGNIO-18, 6855 STABIO, SWITZERLAND.
பொழுது போக்கு: பத்திரிகை.



பெயர்: ஆர். கமால்தீன்.
வயது: 21
முகவரி: 64, எச், பி.ரோட், வவுனியா.
பொழுது போக்கு: பத்திரிகை.



பெயர்: எஸ். அன்சார்.
வயது: 18
முகவரி: 48/10,மெத்தைப் பள்ளி வீதி, காத்தான்குடி-02.
பொழுது போக்கு: நாவல், பத்திரிகை, வானொலி.



பெயர்: டி. அஹமட் அலி.
வயது: 26
முகவரி: P.O.BOX-27247, SAFAT- 13133 KUWAIT.
பொழுது போக்கு : புத்தகம், கிரிக்கெட்.

பெயர்: எல். ஜாபீர்.
வயது: 21
முகவரி: 292/ஏ, ஹவீபா வீதி, கல்முனை-05.
பொழுது போக்கு: ஓவியம் வரைதல்.

பெயர்: எம். முகீதீன்.
வயது: 23
முகவரி: இலவன் குளம், புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நண்பர் தொடர்பு.

பெயர்: எஸ். குகன்.
வயது: 23
முகவரி: 2A,FAIRLANDS AVENUE, THORNTON HEALTH, CROYDON,CR7-6HA, ENGLAND.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, இசை.

பெயர்: எஸ். பரமசிவன்.
வயது: 19
முகவரி: மீப்பிட்டிகந்தை எஸ்டேட், எட்டியாந்தோட்டை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: கே. யோகராஜ்.
வயது: 17
முகவரி: 213, ஒரெஞ்ச் ஃபீல்ட், ரக்குவானை.
பொழுது போக்கு: வானொலி, புத்தகம்.

பெயர்: யாஸர் கடாபி.
வயது: 16
முகவரி: 10/1,மாத்தளை வீதி, கட்டுகஸ்தோட்டை, கண்டி.
பொழுது போக்கு: கவிதை படித்தல்.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# தாய்

தாய் தாய் தாய் தாய் தாய் தாய் தாய் தாய்

## 82 மக்சீம் கார்க்கி

அவன் தாயின் படுக்கை மீது ஏறிப் படுத்தவாறு தன் தலையைச் சொறிந்து கொண்டே முனகினான்:

"இப்போது சாமான்களெல்லாம் தார் எண்ணெய் நாற்றம் எடுக்கப் போகிறது.....இதிலெல்லாம் ஓர் அர்த்தமுமில்லை.....எனக்குத் தூக்கமும் வரவில்லை.....அந்த ரெண்டுங்கெட்டான் ஜனங்களை இவர் எவ்வளவு சுளுவாகத் தாக்கிப் பேசினார்......அந்தப் பிசாசுகள்......"

திடீரென்று அவன் தூங்கிப் போய், உரத்துக் குறட்டை விட ஆரம்பித்தான். அவனது வாய் பாதி திறந்தவாறு இருந்தது: புருவங்கள் ஏறியிருந்தன.

***

அன்று மாலையில் இக்நாத், நிகலாய் வெஸோவ்ஷிகோவுக்கு எதிராக, ஒரு சின்ன நில அடி அறையில் உட்கார்ந்து, தணிந்த குரலில் பேசிக்கொண்டிருந்தான்:

"மத்திய ஜன்னலில் நாலு தடவை தட்டவேண்டும்...."

"நாலு தடவையா?" என்று ஆர்வத்தோடு கேட்டான் நிகலாய் வெஸோவ்ஷிகோவ்.

"முதலில் மூன்று– இந்தமாதிரி" என்று கூறிக்கொண்டே அவன் மேஜைமீது தட்டிக் காண்பித்தான். "ஒன்று, இரண்டு, மூன்று. ஒரு விநாடி பொறு, அப்புறம் இன்னொரு முறை."

"புரிந்துகொண்டேன்."

"உடனே செம்பட்டைத் தலையனான ஒரு முஜீக் வந்து கதவைத் திறப்பான்; திறந்து: 'நீ மருத்துவச்சிக்காக வந்தாயா?' என்பான். உடனே: 'ஆமாம். முதலாளியின் பெண்சாதியிடமிருந்து வருகிறேன்' என்று நீ சொல்ல வேண்டும். அவ்வளவுதான். அவன் உன்னைப் புரிந்து கொள்வான்."

அவர்கள் இருவரும் ஒருவர் தலையோடு ஒருவர் தலை முட்டுமாறு உட்கார்ந்திருந்தனர். இருவரும் குண்டுக் கட்டான பலசாலிகள். அவர்கள் இருவரும் தணிந்த குரலில் பேசிக்கொண்டிருப்பதை, தாய் தன் மார்பில் கரங்களைக் கோத்தவாறு நின்று கவனித்துக்கொண்டிருந்தாள். அவன் கூறிய மர்மமான சங்கேதச் சொற்களையும், தட்டுவதன் அர்த்த பாவத்தையும் காண அவளுக்கு வேடிக்கையாயிருந்தது.

'இன்னும் சின்னப் பிள்ளைகள்தான்' என்று அவள் தனக்குத் தானே நினைத்துக்கொண்டாள்.

சுவரிலிருந்த விளக்கு ஒரு நெளிந்து போன பழைய வாளியையும், மூலையிலே தரையில் கிடக்கும் தகரத் தொழிலாளியின் தகட்டுக் குப்பைகளையும் ஒளி செய்து காட்டிக்கொண்டிருந்தது. அந்த அறை முழுதும் நீரூற்று நாற்றமும் எண்ணெய்ச் சாய வாடையும் துரு நாற்றமும் நிறைந்து நின்றன.

இக்நாத் தொள தொளத்த துணியால் தைக்கப்பெற்ற கனத்த கோட்டு அணிந்திருந்தான்: அது அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது போல் தோன்றியது. அந்தக் கோட்டின் கையை ஆசையுடன் அவன் தடவிக் கொடுத்ததைத் தாய் பார்த்தாள். அவன் தன் கழுத்தைத் திருப்பித் தன்னைத் தானே நன்கு பார்த்துக்கொள்ளத் திரும்பினான்.

'குழந்தைகள்!' என்று நினைத்துக் கொண்டாள் அவள். 'அருமைக் குழந்தைகள்.....'

"ரொம்ப சரி" என்று கூறிக்கொண்டே எழுந்தான் இக்நாத். "முதலில் முராத்தவின் வீட்டுக்குச் சென்று, தாத்தாவைப் பற்றிக் கேட்க மறந்துவிடாதே."

"மறக்கமாட்டேன்" என்று பதிலளித்தான் நிகலாய் வெஸோவ்ஷிகோவ்.

ஆனால் இக்நாதுக்குப் பூரண திருப்தி ஏற்படவில்லை. தான் சொல்லிக் கொடுத்த சமிக்ஞைகளையும் சங்கேதங்களையும் திரும்ப வும் ஒரு முறை சொல்லிவிட்டுத் தன் கரத்தை நீட்டிப் பேசினான்:

"அவர்களுக்கு என் நன்றியைச் சொல்லு. அவர்கள் எவ்வளவு நல்ல மனிதர்கள் என்பதை நீயே கண்டுகொள்வாய்," என்று சொன்னான் அவன்.

அவன் தனக்குத்தானே மகிழ்ச்சியோடு பார்த்துக்கொண்டு தன் கோட்டைத் தட்டிவிட்டுக் கொண்டான்.

"நான் போவதற்கு நேரமாகிவிட்டதா?" என்று அவன் தாயிடம் கேட்டான்.

"உனக்கு வழி தெரியுமா?"

"கண்டுபிடித்துப் போய்விடுவேன். போய்வருகிறேன், தோழர்களே!"

அவன் வெளியே சென்றான். நிமிர்ந்த மார்போடும், அகன்ற தோள்களோடும், ஒரு புறமாகச் சாய்த்து வைத்த தொப்பியோடும், பாக்கெட்டுக்குள் கைகளை லாகவமாக விட்டவாறும் அவன் வெளியே சென்றான். அவனது சுருட்டைத் தலையின் வெளிர்மயிர்க் கற்றைகள் அவனது நெற்றிப் பொருத்துக்களில் ஊசலாடின.

"ஒரு வழியாக எனக்கு இப்போது ஒரு வேலை கொடுத்தாய் விட்டது," என்று கூறிக்கொண்டே நிகலாய் வெஸோவ்ஷிகோவ் தாயின் பக்கமாக மெதுவாக வந்தான். "ஏனடா சிறையைவிட்டு வெளியே வந்தோம் என்று எனக்கு முதலில் இருந்தது. வந்த புதிதில் எனக்கு ஒரே எரிச்சல். இங்கே வந்து ஒரு வேலையும் செய்யாமல், இரவும் பகலும் உள்ளே மறைந்திருப்பதுதான் என் வேலை. அங்கே இருந்தாலாவது ஏதாவது கற்றுக்கொண்டிருப்பேன். பாவெல் எங்கள் அறிவை எப்படியெல்லாம் வளர்த்தான்! சரி. அவர்கள் தப்பி வருவதற்குப் போட்ட திட்டம் என்ன ஆயிற்று, நீலவ்னா?"

"எனக்குத் தெரியாது" என்று தன்னையுமறியாது எழுந்த பெருமூச்சுடன் சொன்னாள் அவள்.

நிகலாய் தனது கனத்த கரத்தை அவள் தோள் மீது போட்டு, தனது முகத்தை அவள் பக்கம் கொண்டு போனான்.

" நீ அவர்களிடம் சொல்லிப்பார்" என்று பேசத் தொடங்கினான், அவன். நீ சொன்னால் அவர்கள் கேட்பார்கள். அதில் ஒன்றும் சிரமமில்லை, "நீயே போய்ப்பார். சிறைச்சாலைச் சுவர் இருக்கிறதா? அடுத்தாற்போல் தெருவிளக்கு. அதற்கு எதிர்த்தாற்போல வெட்ட வெளி மைதானம்: இடது புறம் இடுகாடு; வலது புறம் தெருக்களும் வீடுகளும். ஒவ்வொருநாளும் விளக்கேற்றுபவன் விளக்கைத் துடைத்துச் சுத்தம் செய்ய வருவான். எனவே அவன் சிறைச்சாலைச் சுவரின் மீது ஏணியொன்றைச் சாத்தி, மேலே ஏறி, அந்தச் சுவரிலுள்ள ஒரு செங்கல் தூணில் ஒரு நூலேணியைக் கட்டி, சிறைச்சாலைக்குள்ளே அதை இறக்க வேண்டியது. அப்புறம் அவன் போய்விட வேண்டியது. சிறைக்குள்ளே இருப்பவர்களுக்கு இது எப்போது நடக்கும் என்பது நன்றாகத் தெரியும். அவர்கள் சாதாரணக் கிரிமினல் கைதிகளோடு வம்பிழுத்துப் பேசி ஒரு கலவரத்தைக்கிளப்ப வேண்டியது. இல்லையென்றால் தமக்குள்ளேயே அவர்கள் கலாட்டா செய்ய வேண்டியது. அதாவது சிறைச்சாலை காவலாளிகள் கண்டுபிடித்து விடாதபடி, அவர்கள் கவனத்தைக் கொஞ்சம் கவர வேண்டியது. இதற்குள் தப்பியோட வேண்டியவர்கள் ஏணி வழியாக ஏறி வெளியே வந்துவிட வேண்டியது. ஒன்று, இரண்டு, மூன்று– அவ்வளவு தான். அதற்குள் எல்லாம் முடிந்துவிடும். இது தான் சுலபமான வழி."

அவன் தனது திட்டத்தைக் கைகளை ஆட்டி சைகைகள் காட்டி விளக்கியதால், அவன் கூறிய விஷயங்கள் எல்லாம் தெளிவாகவும் புத்திசாலித்தனமாகவும் எளிதாகவும்தோன்றின. நிகலாயை அவள் எப்போதும் ஓர் அசமந்தப் பேர்வழியாகவே கருதிவந்திருக்கிறாள். முன்னெல்லாம் அவன் எந்த விஷயத்தையும் பகைவுணர்ச்சியோடும் அவநம்பிக்கையோடும் தான் பார்ப்பான். இப்போதோ அவன் புனர்ஜன்மம் எடுத்த மாதிரி, முற்றிலும் மாறிப்போய் விட்டான். அவனிடம் காணப்பட்ட நிதானமும் அன்பும் தாயின் இதயத்தைக் கவர்ந்தது; பரவசப்படுத்தியது.

"கொஞ்சம் யோசித்துப்பார். அவர்கள் இதைப் பகல் நேரத்திலேயே செய்யலாம். பகலில்தான் செய்ய முடியும்! சிறைச்சாலையிலுள்ளவர்கள் அனைவருமே விழித்திருந்து நடமாடிக்கொண்டிருக்கும் வேளையில், ஒரு கைதி தப்பியோடி விடுவான், என்று எவரேனும் சந்தேகப்பட முடியுமா?"

"அவர்கள் சுட்டுத் தள்ளமாட்டார்களா?" என்று நடுங்கிக் கொண்டே கேட்டாள் தாய்.

"யார்? சிப்பாய்கள் இல்லை. அந்தக் காவலாளிகளுக்கு எல்லாம் தங்கள் கைத்துப்பாக்கிகளை வைத்து ஆணி அறைந்துதான் பழக்கம்."

"நீ சொல்வதைப் பார்த்தால் எல்லாம் எளிதாகத் தான் தோன்றுகிறது."

"நீயே பாரேன். நீ அவர்களிடம் இது விஷயமாய்ப் பேசிப்பார். நான் எல்லாம் தயாராய் வைத்திருக்கிறேன். நூலேணி, சுவரில் அறைய வேண்டிய கொக்கி- எல்லாம் தயார். இங்கே என் வீட்டுக்காரன் இருக்கிறானே, அவன் தான் விளக்கேற்றுகிற நபராக இருப்பான்."

கதவுக்கு அந்தப் புறத்தில் யாரோ இருமிக்கொண்டே தடவித் தடவி நடந்தார்கள். ஏதோ ஒரு தகரத்தை உருட்டி ஓசை உண்டாக்கும் சத்தம் கேட்டது.

"அதோ, அது அவன்தான்," என்றான் நிகலாய்.

வாசல் நடையில் ஒரு தகர குளியல் தொட்டி முதலில் தெரிந்தது. அதைத் தொடர்ந்து ஒரு கரகரத்த குரல் ஒலித்தது:

"ஏ, பிசாசே! உள்ளே போய்த் தொலையேன்!"

அந்தத் தகரத்தொட்டிக்கு மேலாக ஒரு மனிதனின் முகம் தெரிந்தது. சுமுகபாவமும், துருத்திய கண்களும், நரைத்த தலையும் மீசையுமாகக் காட்சி அளித்தான் அவன்.

நிகலாய் அந்தத் தொட்டியை உள்ளே இழுத்து அவனுக்கு உதவி செய்தான். தொட்டி உள்ளே வந்த பிறகு, நெட்டையான கூனிப்போன அந்த மனித உருவத்தை அவர்கள் கண்டார்கள். தாடியற்ற கன்னத்தைப் புடைக்கச் செய்யும் பலத்த இருமலோடு அவன் இருமியவாறு துப்பினான், பிறகு தன் விருந்தாளிகளைப் பார்த்து வர

## "துப்பியோடினால் அவர்கள் சுட்டுத்தள்ள மாட்டார்களா?"

வேற்றான்.

"உங்களுக்கு நலம் உண்டாகட்டும்."

"இதோ, இவனையே கேள்" என்று சொன்னான் நிகலாய்.

"என்னை என்ன கேட்கிறது?"

"சிறையிலிருந்து தப்புவது பற்றி."

"ஆஹா!" என்று அந்தத் தகரத் தொழிலாளி சொல்லிவிட்டுத் தனது கறை படிந்த விரல்களால் மீசையைத் தடவிவிட்டுக் கொண்டான்.

"யாகவ் வசீலியவிச்! அது எவ்வளவு சுலபமான காரியம். சொன்னால் இவள் நம்பமாட்டேன் என்கிறாள்."

"நம்பவில்லையா? ஹூம்! அப்படியானால் அவளுக்கு இதில் விருப்பமில்லை என்றுதான் தோன்றுகிறது. உனக்கும் எனக்கும் விருப்பம் இருக்கிறது: அதனால், நாம் இதை நம்புகிறோம்!"என்று அமைதியாகச் சொன்னான் அவன். திடீரென்று அவன் முதுகைக் குனிந்து இருமத் தொடங்கினான். அவனது தொண்டைப் புகைச்சல் ஓய்ந்து அடங்கியதும் அவன் தன் நெஞ்சைக் கையால் தடவிக் கொடுத்தவாறே அறையின் மத்தியிலேயே நின்று, தனது முண்டைக் கண்களால் தாயையே கவனித்துப் பார்த்தான்.

"பாவெலும் அவனது தோழர்களும் இந்த விஷயத்தைத் தீர்மானிப்பார்கள்." என்றாள் தாய்.

நிகலாய் ஏதோ சிந்தித்தவாறே தலையைத் தொங்கவிட்டான்.

"யார் அது– பாவெல்?" என்று கேட்டுக் கொண்டே ஓர் இடத்தில் அமர்ந்தான் அந்தத் தொழிலாளி.

"என் மகன்."

"அவன் முழுப் பெயர்?"

"பாவெல் விலாசவ்."

அவன் தலையை அசைத்தான்; புகைக்குழாயை எடுத்து அதல் புகையிலையை நிரப்பத் தொடங்கினான்.

"அவனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்," என்றான் அவன்; "என் மருமகனுக்கு அவனைத் தெரியும். என் மருமகனும் சிறையில் தான் இருக்கிறான். அவன் பேர் எவ்சென்கோ. கேள்விப்பட்டிருக்கிறாயா? என் பேர் கோபுன். அவர்கள் போகிற போக்கிலே கூடிய சீக்கிரத்தில் ஊரில் இருக்கிற இளைஞர்களை எல்லாம் பிடித்து சிறையில் தள்ளிவிடுவார்கள். நம்மைப் போன்ற கிழடுகட்டைகளுக்கு வெளியே தாராளமாய் இடம் இருக்கும்! என் மருமகனை அவர்கள் சைபீரியாவுக்கு அனுப்பப் போவதாக ஒரு பொலிஸ்காரன் என்னிடம் சொன்னான். செய்வார்கள்– நாய்கள்!"

அவன் நிகலாயிடம் திரும்பி, புகைக்குழாயைத் 'தம்' பிடித்து இழுத்துக் கொண்டே அடிக்கொரு தடவைதரையில் காறித்துப்பிக் கொண்டிருந்தான்.

"அப்படியானால் அவளுக்கு இதில் விருப்பமில்லை. இல்லையா? அது அவள் பாடு). ஒருவன் சுதந்திரமாயிருந்தால்தான், உட்கார்ந்து களைத்துப் போனாலும் கொஞ்ச தூரமாவது நடந்து பார்க்கலாம்: நடந்து நடந்து களைத்துப் போனாலும் கொஞ்சநேரமாவது உட்கார்ந்து பார்க்கலாம். ஆனால் அவர்கள் உன்னைக் கொள்ளையடித்தால், கண்ணை மூடிக் கொள், அடித்தால் பட்டுக்கொள், அழாதே, கொன்றால் அப்படியே செத்துப்போ. இது எல்லோருக்கும் தான் தெரியும். என்ன ஆனாலும் சரி, நான் என் மருமகனை வெளியே கொண்டு வரத்தான் போகிறேன். நிச்சயம் கொண்டுவந்து விடுவேன்."

அவன் அந்தச் சின்னஞ்சிறு வாக்கியங்களைச் சொன்ன விதத்தைக் கண்டு தாய் வியப்படைந்தாள்: இறுதி வார்த்தைகளால் ஒரு விதத்தில் பொறாமை உணர்ச்சிக்கூட ஏற்பட்டது.

தெருவழியாகக் குளிர் காற்றிலும் முகத்தில் அறையும் மழையிலும் நடந்து வரும்போதும்கூட, அவள் நிகலாயைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தாள்:

"அவன் எவ்வளவு மாறிவிட்டான். எப்படி மாறினான்! நினைத்துப் பார்த்தால்!...."

அவள் கோபுனைப் பற்றியும் நினைவு கூர்ந்தாள். பிரார்த்திப்பது போல, தன்னுள் தானே பணிவுடன் நினைத்துக் கொண்டாள்.

"வாழ்க்கையைப் பற்றிப் புதிய அபிப்பிராயம் கொண்டிருப்பவள் நான் ஒருத்தி மட்டும்தான் என்பதல்ல. அது மட்டும் தெளிவாகத் தெரிகிறது."

அதே சமயத்தில் அவளது இதயத்தில் மகனைப் பற்றிய சிந்தனையும் நிரம்பியிருக்கிறது:

"அவன் மட்டும் சம்மதித்தால்!"

அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று அவள் சிறைச்சாலை ஆபீசில் பாவெலைச் சந்தித்துவிட்டு விடைபெற்றுக் கொண்டிருந்தாள்: அந்தச் சமயத்தில் அவன் அவளது கைக்குள் ஒரு காகித உருண்டையைவைத்து அழுத்துவதைத் தாய் உணர்ந்தாள்.

(தொடர்ந்து வரும்)



சீக்கிரத்தில் ஊரில் இருக்கிற இளைஞர்களை எல்லாம் பிடித்து சிறையில் தள்ளி விடுவார்கள்.

# இருட்டு

## ரூபராணி



ஈஸிச் சேரில் சாய்ந்து படுத்திருந்தாள் செல்லம்மா. அந்த அறையில் நிலவிய இருட்டை அகற்ற ஒரு மெழுகுதிரி உருகிக் கொண்டிருந்தது. தினமுரசுப் பத்திரிகை செல்லம்மாவின் நெஞ்சில் கவிழ்ந்து கிடந்தது. அதில் வெளியாகி இருந்த 'மண்பாசம்' கதையைப் படித்த அவள் மனசு சங்கடத்தில் ஆழ்ந்தது.

பத்து மாதங்களுக்கு முன்புதான், பிறந்த மண்ணை விட்டுத் தான் வந்ததைப் பற்றிச் சிந்தித்தாள். எல்லாவற்றையும் விட்டுவர மனமில்லைத்தான், ஆனால் என்ன செய்வது? மண்பாசத்தை மகளின் பாசம் வென்றுவிட்டதே. இப்படித்தான் செல்லம்மா தன் மனசை ஆறுதல் படுத்தினாள்.

"செல்லம்மா.. பிள்ளை சுமதி.."

வாசல் கேற்றில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டுச் செல்லம்மா தன் பருத்த சரீரத்தை அசைத்துக் கஷ்டப்பட்டு எழுந்து எட்டிப் பார்த்தாள். அவள் குரலில் உற்சாகம் பிறந்தது. "ஆரு சங்கரப்பிள்ளையண்ணையோ உள்ள வாங்கோ" என்று சாய்மனைக்கருகில் கிடந்த கதிரை ஒன்றை இழுத்துப்போட்டாள்.

"யாழ்ப்பாணம் போனியளாமெண்டு அறிஞ்சன். எங்கடவீட்டுப்பக்கமும் போனியளோ?" பேச்சைத் தொடங்கினாள் செல்லம்மா.

"அதச் சொல்லிற்றுப் போகத்தான் வந்தநான், உங்களின்ர வீடு பாழடைஞ்சி கிடக்கு. யன்னல் கதவு ஒண்டையுங் காணம். வீட்டுக்குள்ள சாமான்கள் ஒண்டுமில்ல." சங்கரப்பிள்ளையண்ணை சொல்லி முடிக்கு முன்னர் "என்ர கதிரவேலப்பா, உன்னக் கையெடுத்துக் கும்பிட்டதுக்குப் பலனா இது? செல்லம்மா கண் கலங்கினாள், சங்கரப்பிள்ளையண்ணை எழும்பி விட்டார். "போதும், செல்லம்மா, புலம்பி ஒண்டும் நடவாது. ஏதோ போய் ஆக வேண்டியதக் கவனி நான் வாறன்" என்றார்.

செல்லம்மா மௌனமாக அழுதாள், முந்தானையால் கண்களைத்துடைத்துக் கொண்டு நிலைப்படியில் சாய்ந்தபடி சிந்தனையிலாழ்ந்தாள்.

'மீண்டும் போய் என்ன செய்வது? வீட்டைப் பழைய நிலைக்குக் கொண்டு வாறதெண்டால் முடிஞ்ச அலுவலா?' வலிகாமத்தில் பலியான தன் கணவனை நினைத்தபோது அவள் நெஞ்சு வலித்தது. சுமதி– நேர்ந்து பெற்ற ஒரே பிள்ளை. அவளைவிட்டால் வேறு நாதியில்லை, 'நல்ல வேளை சுமதிர படிப்புச் சோறு போடுது'... நினைவுகளில் நீந்தி அசைவாட்டமற்று இருந்த செல்லம்மா, செருப்புச் சத்தங்கேட்டு விழித்துக்கொண்டாள்

சுமதி, "அம்மா" என்றாள். படியருகே இருந்தாள். அவள் நெற்றியில் பனித்திருந்த வியர்வைத் துளிகளைச் செல்லம்மா தன் முந்தானையால் ஒற்றித்துடைத்தாள். 'பாவம் குமர்ப்பிள்ளை ஓடியோடி உழைக்குது' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். 'சங்கரப்பிள்ளையண்ணே சொன்ன செய்தியைச் சுமதியிடம் சொல்லப்படாது' என்று எண்ணினாள் செல்லம்மா. "அம்மா, இதைக் கேளுங்கோவன்" என்று அவசரப்பட்டாள் சுமதி.

"ரஞ்சித் ஐயாவின் அப்பா இருட்டில் கதிரையெண்டு எண்ணி நிலத்தில விழுந்து இடுப்பெலும்பு உடஞ்சு போச்சாம், கன்னத்திலயும் காயமாம். பேபி அன்ரி பாவம் தனியக் கஷ்டந்தானே, கார் பிடிக்கவும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லவும் லைற் இல்ல, இருட்டுக்க ஏதுமெண்டா ஒண்டும் செய்ய ஏலாம இருக்கு: ரியூட்டரி நிண்டு வாற வழியில சேத்துங்க அங்கிள் சொன்னார்", பரிதாபப்பட்டாள் சுமதி.

"அதுசரி பாவந்தான். பட்டுத்தெறிய நமக்கு இருட்டு பழகிப்போன சங்கதி, தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தானே தெரியும்?" செல்லம்மா நிதானமாகக் கூறிய வார்த்தைகள் சுமதியைச் சிந்திக்க வைத்தது. ■



வாரமலர் தினமுரசு ஜூன்.30–ஜூலை.06,1996

படிப்பகம்

www.padippakam.com

# அவன் பெயர் கண்ணன்

**தமிழினியன்**



> "என்ன, நெஞ்சழுத்தம் இந்தப் பிள்ளைக்கு? ஆனாலும், இந்த வீம்பு கூடாதும்மா"

**கி**ழிசல் சேலையுடன் ஒரு பெண்.

'ஙொய்.. ஙொய்' என அழுது கொண்டே ஒரு சிறுவன். ஐந்து வயது.

கலைந்த தலை, அடர்ந்த மீசையுடன் ஒரு வாலிபன்.

குடும்ப சகிதமாய் அந்த ஓட்டலுக்குள் நுழைந்தார்கள்.

தீபாவளிக்கு துணிமணி வாங்க வந்திருக்க வேண்டும். கையில் பிடித்திருந்த பார்சல் பையின் விளம்பர வாசகம் அதைப் பட்டவர்த்தனமாய் உறுதிப்படுத்தியது.

"இந்த ராஸ்கலை வீட்டிலேயே விட்டுட்டுவான்னு சொன்னேன், கேட்டாயா?"

மனைவியைக் குற்றம் சாட்டிக் கொண்டே, மகனைத் தூக்கி நாற்காலியில் 'நங்' கென்று வைத்தான் அவன்.

உள்ளூர்தான்.

நகரின் ஒரு மூலையில் பீடி சுற்றிப் பிழைப்பவர்கள்.

வருமானத்துக்கும், வயிற்றில் விழும் பள்ளத்துக்கும் ஏதேனும் ஒரு திட்டம் வராதா என்று ஏங்கும் குடும்பம்.

அழுக்கு.. ஆங்காங்கே ஒட்டுத் தையல்.

இந்த இலட்சணத்தில் தீபாவளி.

வறியவர்களுக்கு பண்டிகை என்பது ஒரு தீ மிதிபோல. கால் பொசுங்கினாலும், அதைக் கடந்துதான் ஆக வேண்டும்.

உடம்புக்கு அல்லது இடுப்புக்கு ஏதேனும் ஒரு கோடித் துணி, தேடி அணிந்தால் தான், நாலு பேருக்கு முன்னால் நாங்களும் வாழ்கிறோம் என்பதைக் காட்டிக் கொள்ள முடியும்.

பீடிக் கொம்பனி முதலாளியிடம் ஐந்நூறு ரூபாய் அட்வான்ஸ் கேட்டான், தங்கப்பன்.

முந்நூறு தான் கொடுத்தார் முதலாளி.

எந்த மூலைக்கு?

என்றாலும், இடக்கு நினைக்காமல் பணத்தை வாங்கிக் கொண்டான், தங்கப்பன்.

"வா புள்ளே புடவை எடுக்கப் போகலாம்."

புருஷன்காரன் உற்சாகமாகக் கூப்பிட்டதும் பொல பொல வென்று பணம் உதிரும் நம்பிக்கையில் தனலட்சுமி (அட கடவுளே-இந்த ஏழைகளுக்கு ஏன் தான் இப்படி ஐஸ்வர்ய பெயராக வைக்கிறார்களோ? தெரியவில்லை.) மகனையும் இழுத்துக் கொண்டு வேகமாகப் புறப்பட்டு வந்தாள்.

பையன் பெயர் என்ன தெரியுமா?

பக்கத்து வீட்டில் கேள்விப்பட்டோ அல்லது பகவானை நினைத்தோ தெரியவில்லை; எப்படியோ அவன் பெயர் கண்ணன்.

காற்சட்டையும், சேட்டும் வாங்கிக் கொடுக்கும் போதே அவன் முகம் விடியவில்லை.

"ஏண்டா இழவெடுத்த மூதேவி. உனக்குத்தான் புதுத்துணி எடுத்தாச்சே? ஏண்டா இப்படி தொங்கப் போட்டுட்டு வர்றே?" என்று அப்பனும் அம்மாவும் அதட்டினார்கள் அவனை. என்னவோ தெரியவில்லை.

அவன் அப்படியேதான் மூட்டமாய் இருந்தான். முதுகில் ஒரு அறை கொடுத்தான் தங்கப்பன். பிஞ்சு உடம்பு. வலி தாங்காமல் அழ ஆரம்பித்தான், கண்ணன்.

வேறொரு துணிக் கடைக்குப் போனார்கள்.

"யார்... இது... உங்கள் பையனா? ஏன் இப்படி அழுதுகிட்டே இருக்கான்?" யாரோ முகம் சுளிக்க-

"இன்னொரு முறை கொடுத்தால் தான், ராஸ்கல் சரிப்பட்டு வருவான்" தங்கப்பன் மகனை முறைத்துக் கொண்டு பார்க்க-

தனலட்சுமி ஒரு நூல் புடவையும், அந்த நிறத்துக்குத் தகுந்த மாதிரி ரவிக்கைத் துணியும் எடுத்துக் கொண்டாள்.

கடையைவிட்டு வெளியேறினார்கள்.

மீதிப் பணம் தொண்ணூறு ரூபாயைப் போல் கைவசம் இருந்தது.

பண்டிகைச் செலவுக்கு வேண்டுமே.

பத்திரப்படுத்திக் கொண்டான்.

இவ்வளவு தூரம் டவுனுக்கு வந்து விட்டு, சும்மா வீட்டுக்குத் திரும்பலாமா?

ஓட்டலில் ஏதாவது சாப்பிடத் தோன்றியது.

"வாடா அழுகுனி... வந்து கொட்டிக்க..." என்று கண்ணனை தரதர வென்று இழுத்துக் கொண்டுதான் அந்த ஓட்டலில் நுழைந்திருந்தான், தங்கப்பன்.

இட்டிலிக்கு ஓடர் கொடுத்த பிறகும் கண்ணனின் அழுகை ஓய்வதாக இல்லை. சொல்லப்போனால் அழுகையின் நாதம் சற்று அதிகரித்தது போல் இருந்தது.

"டேய் தத்தாரி பயலே.. இப்ப நீ அழுகையை நிறுத்தறியா? கன்னத்திலே சாத்தட்டுமா?" ஆத்திரத்துடன் பார்த்தான், தங்கப்பன்.

ஊஹூம். பிரயோசனப்படவில்லை!

இரண்டிரண்டு இட்டிலி வைத்து இரண்டு தட்டுக்களைக் கொண்டு வந்து வைத்தான் சர்வர். வெங்காயச் சட்னி, தேங்காய்ச் சட்னி வகையறாக்களுடன் மணக்க மணக்க சாம்பாரும் வந்தது.

ஆர்டர் கொடுக்கும் போதே தனக்கு வேண்டாம் என்று சொல்லி இருந்தான், தங்கப்பன். மூன்று ரூபாய் மிச்சமாகும் இல்லையா?

தனலட்சுமி இட்லியை பிய்த்து சட்னியில் தோய்த்துச் சாப்பிட ஆரம்பித்தாள்.

"டேய் கண்ணா.. சீக்கிரமாய்த் தின்னுடா." என்று மகனை நோக்கி முறைத்தாள்.

அவன் திருதிருவென்று முழிப்பதும், தேம்புவதுமாகவே இருந்தானே தவிர இட்லியில் கை வைக்க வில்லை.

மீண்டும் அவள், "டேய் தின்னுடா. வீட்டுக்கு வந்தால் அப்பா முதுகுத் தோலை உரிச்சுடுவார்" என்று பயமுறுத்தினாள்.

அவன் யாரையும் சட்டை பண்ணவே இல்லை.

அவன் தேம்பிக் கொண்டே இருந் தான். இட்டிலியை நோக்கிக் குனிவதும்.. அப்பாவின் முகத்தைப் பார்க்க நிமிர்வதும்..

தனலட்சுமி சாப்பிட்டு முடித்து, கை அலம்பிவிட்டு வந்தாள்.

"ஏண்டா தடி முண்டம்! இன்னுமா நீ இட்டிலி சாப்பிடல்லை?" ஆத்திரமும், ஆச்சரியமுமாகப் பார்த்தாள், அவள்.

"என்ன நெஞ்சழுத்தம் இந்தப் பிள்ளைக்கு? ஆனாலும் இவ்வளவு வீம்பு கூடாதும்மா." சாப்பிட்டுக் கொண்டிருந்த யாரோ ஒரு பெண் அருவருப்புடன் அங்கலாய்த்தாள்.

தகப்பனுக்கு தலையே வெடிப்பது போல் இருந்தது.

அவனது தன்மான உணர்வுக்கு அச்சம்பவம் சோதனையாய் அமைந்துவிட்டது.

குபீரென்று எழுந்தான்.

தன் பலத்தையெல்லாம் திரட்டி கண்ணனின் முதுகில், ஓங்கி ஒரு அறைவிட்டான்.

"ஐயோ... அப்பா.." என்று கதறிக் கொண்டே நிலைகுலைந்து கீழே விழுந்தான், கண்ணன். விழுந்த வேகத்தில் மேசை விளிம்பு நெற்றியை உடைத்து, குபுகுபுவென்று இரத்தம் கொட்டியது. அதற்கு மேல், இட்டிலியும் சட்னி வகையறாக்களும் அவனது உடம்பு முழுக்கச் சிதறின.

அப்படியும் தகப்பனின் ஆத்திரம் தணியவில்லை. கோபம் அவன் அறிவையும், கண்களையும் கட்டிப் போட்டு விட்டது. ஓட்டல் என்றும் பாராமல் காலால் உதைத்து, தள்ளினான். செருப்புப் பாதங்களால் மிதித்தான்.

"சாவுடா! செத்து ஒழி! நீ செத்தால் தாண்டா எனக்கு நிம்மதி.." என்று சப்தம் போட்டுக் கொண்டே ஒரு ருத்ரதாண்டவமே ஆடி முடித்து விட்டான்.

திணறலும், தேம்பலுமாய் எழும்பினான், கண்ணன்.

அவனால் நடக்க முடியவில்லை.

மூவரும் ஓட்டல் வாசலுக்கு வந்தார்கள்.

மழை பிடித்துக் கொண்டது.

"பாவம்.. அந்தப் பையன். என்னவோ கேட்டிருக்கிறான். வாங்கிக் கொடுக்க முடியல்லை. ஆற்றாமையிலே அடிச்சுப் போட்டுட்டான் அப்பன்காரன்."

யாரோ பேசியது தகப்பனின் காதில் விழுந்தது.

அதற்குமேல் அங்கு நிற்கப் பிடிக்கவில்லை.

மழையைப் பாராமல் கடைவீதியில் இறங்கி நடந்தான்.

நனைந்து கொண்டே மூவரும் வீட்டுக்கு வந்தார்கள்.

வந்ததுமே பாயில் சுருண்டு படுத்துக் கொண்டான் கண்ணன்.

கண்ணிரண்டும் கோவைப் பழமாய்ச் சிவந்து, கன்னங்கள் துவண்டு போய் உதடுகள் துடித்தன. அவனையறியாமல் "ஐயோ.. அம்மா.. அப்பா.." என்று பிதற்றினான்.

தனலட்சுமி அவனைத் தொட்டுப் பார்த்தாள்.

நெருப்பாய்க் கொதித்தது.

"என்னங்க... பிள்ளைக்கு காய்ச்சல்" என்று பதறினாள்.

"அடிக்கட்டும்... சாகட்டும்."

ஆத்திரம் தீராமல் பேசினான், தங்கப்பன்.

அந்தக் கடுமையான சொற்கள் கண்ணனின் காதில் விழுந்ததோ என்னவோ, புலம்பினான் அவன்:

"நான் செத்துப் போகிறேன். ஆனால், உங்களைப் பார்த்தால் எனக்குப் பாவமாய் இருக்கு. அப்பா, எனக்கும் அம்மாவுக்கும் புதுத்துணி வாங்கிக் கொடுத்தீங்க. உங்களுக்கு வாங்கிக் கொள்ளல்ல. எங்கள் ரெண்டு பேருக்கும் இட்டிலி கொண்டு வரச் சொன்னீங்க. உங்களுக்குக் கொண்டு வரச் சொல்லல. உங்களை விட்டுட்டு நான் மட்டும் எப்படிப்பா சாப்பிட முடியும்? அதான் அழுதேன். உங்களுக்கில்லாமல் நான் மட்டும் புதுசு கட்டலாமா அப்பா? அதான் சாகப் போகிறேன்.!"

# நிறம் மாறும் கரங்கள்



**ஷர்மிளா இஸ்மாயில், கண்டி**

**அ**வன் முகத்திலிருந்த புன்னகை, குதூகலம் நிமிஷத்துள் வடிந்து போனதை அவதானித்தாள் நிரோஷா. "என்ன? சட்டக் கல்லூரியா? நீ சட்டம் படிக்கப் போறியா? எதிர்கால லோயரா? ஏனுனக்கு புத்தி இப்படி பிசகிப் போனது?" அமர் வார்த்தைகளில் நெருப்பு தெளித்தான்.

அவளுக்குள் எரிச்சலும் கோபமும் மண்டியிட்டன. "ஏன் நான் லோ படிக்க கூடாதா? என்னால முடியாதா? எனக்கு தகுதி இருக்கு. அதை முடிக்க திறமையும் இருக்கு. ஏன் வேணான்னு சொல்றீங்க? உங்களுக்கு பொறாமையா இருக்கா, என் தகுதி, தராதரம் அதிகமாயிடும்னு?" ஏளனமாய்க் கேட்டாள்.

அவன் இன்னும் கடுப்பானான். "எனக்கு மனைவியா வர்றவ சாதாரண பெண்ணாயிருந்தா போதும். இந்த மாதிரி வீண் அலட்டல்களை விட்டுடு. சரியா?" அவள் எழுந்து கொண்டாள். "அமர், விளையாடாதீங்க. சீரியஸா சொல்றேன். நான் லோ படிக்கணும், வேண்டாம்னு சொன்னா என்னை மறந்துடுங்க. வேற யாராவது சாதாரண பொண்ணுங்க நிறையப் பேர் கெடைப்பாங்க. போய் ஒண்ண "செலக்ட்" பண்ணிக்குங்க. படபடவென பொரிந்து விட்டு போய்விட்டாள்.

சரியாக மூன்று வாரங்களின் பின் ஒரு திங்களன்று அமரிடமிருந்து கடிதம் வந்திருந்தது. அவன் பெற்றோருடன் பெண் பார்க்க வரப் போவதாக. நிரோஷாவுக்குள் மகிழ்ச்சிப் பூக்கள். மத்தாப்புக்கள். அமர் கோபிக்கவில்லையே; லோ படிக்க சம்மதம் தெரிவித்து விட்டாரே! வியந்து போனாள்.

வந்தார்கள். வழமையான உபசார வார்த்தைகள்- உபசரிப்புக்கள். எல்லாம் முடிந்த பின் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின.

"என்னமோ உங்க மகள் சட்டப்படிப்பு படிக்கப் போறாளாமே? நீங்களும் சம்மதிச்சிட்டீங்களா? இந்தக் காலத்து பொண்ணுங்களே இப்படித்தான். ஏதாவது ஏடாகூடமான வேலைகளை செய்யறதிலேயே ஆர்வம். என்னத்துக்குங்க இந்த சட்டம், படிப்பு இதெல்லாம்? வேண்டான்னு சொல்லிடுங்க... அப்பா பேச்சை தட்டாத பெண்ணாத்தானே அவள வளர்த்திருப்பீங்க?" வார்த்தைகளில் பொடி வைத்து அமரின் அம்மா பேசி முடித்தாள்.

நிரோஷா உட்பக்க அறையிலிருந்து ஜன்னலால் எட்டிப்பார்த்தாள். மனதுக்குள் கோபம் சிலிர்த்துக் கொண்டெழுந்தது. 'ஓ! இதுதானா? தன்னால் சாதிக்க முடியாததை தாய், தந்தையைக் கொண்டு வந்து சாதிக்க நினைக்கிறானோ இந்த ஆதிக்க நாயகன்?' தனக்குள்ளாக சிரித்த நிரோஷா மௌனமாய் பொறுத்திருந்தாள். 'என்னதான் நடக்குமென்று பார்ப்போமே?' நினைத்தவள் மீண்டும் செவி கொடுத்தாள்.

ஆயிற்று. படிப்பு பற்றி வாதிட்டு முடிந்து சீதனம் பற்றிய விசாரிப்புகள். வழக்கமான பல்லவிதான். "இலட்சமாய் பணம், ஒரு வீடு- ரொம்ப குறைச்சலாய்த் தான் கேட்கிறோம். வேறு இடங்களில் இதை விட மேலதிகமாகத்தர ரெடி" என பீற்றல் வேறு. அமர் இன்னும் அமைதியாய் அமர்ந்திருந்தான்.

நிரோஷாவின் மனதுக்குள் 'ப்ளக்' கென எதுவோ ஒன்று உடைந்து போயிற்று. ஆயிரமாயிரம் ஊசிகள் உடலைத் துளைப்பதான வேதனைத் தீ இதயத்தைச் சுட்டது- கொளுத்தியது.

'முடிந்துவிட்டது. என் காதல், நேசம், அவனைப்பற்றிய கனவுகள், எதிர்பார்ப்புக்கள் எல்லாமே கலைந்து, குலைந்து போயிற்று. சிதறிப்போயிற்று சீ.. இவனையா காதலித்தேன்.. இவனையா?' தன்னைத் தானே நொந்தபடி நிரோஷா சாய்ந்து கொண்டாள். அழுகை மட்டும் வரவேயில்லை. ஆச்சரியமாயிருந்தது அவளுக்கே.

அவன் விடைபெறும் போது நிரோஷா அமரை வெறித்துப் பார்த்தாள். "உங்க மகனின் விவாகரத்து கேஸ் வந்தா என் கிட்ட வாங்கம்மா. நிச்சயமா பீஸ் அறவிட மாட்டேன். மறந்துடாதீங்க." அமரின் அம்மாவிடம் உரத்துச் சொல்லி அவர்களை ஒரு கணம் திகைக்க வைத்தாள். பின் வாசல் கதவை அறைந்து சாத்தியபடி உள்ளே வந்தவளைப் பார்த்து, புரிந்து கொண்ட வீட்டார் விலகினர். மௌனமாய் அமர்ந்து ஒரு புத்தகம் பிரித்தாள்- படித்தாள்.

# இன்னொரு ஆசை!

**எம். சுரேஷ்**



> "இந்த விபரீத ஆசையை எப்படி வெளியே சொல்வது? கோவிச்சுப்பாரோ?"

**அ**வர் சம்மதிச்சுட்டார்!

எனக்கு சந்தோஷத்தைக் கட்டுப்படுத்திக்கத் தெரியல. அழலாம்னு தோணிச்சு....

அவர்..... அதான் என்னோட வீட்டுக்காரர்... வேணாம். மொதல்ல என்னைப் பத்திச் சொல்லிடறேன்.

இரத்தினபுரியில்-மலர்ச்சோலை. அது தான் எங்க கிராமத்தின் பெயர். கொழும்பில் மாதிரி ஜனசந்தடியெல்லாம் அதிகமா கெடையாது. எங்க பார்த்தாலும் பச்சைப் பசே லென்ற மரங்கள். வயல்கள்..... கண்ணுக்கு ரொம்பக் குளிர்ச்சியா இருக்கும்.

மலர்ச்சோலை வீதியில் வலது புறம் சின்னதாய் ஒரு போஸ்ட் ஒபீஸ். அதுக்கு எதிர்த்தாப்பில முருகன் கோயில்- அதுவும் சின்னதுதான்.

அந்தக் கோயிலுக்கு ஒட்டினாப்புல இருக்கிறதுதான் எங்க வீடு.

அப்போ நான் அங்கதான் இருந்தேன்.

கோயில்ல பூஜையெல்லாம் எங்க அப்பாதான் செய்வார். அவரைத் தவிர அம்மா, 5ம் வகுப்புப் படிக்கும் தம்பி சிவகுமார், வயதான பெரியப்பா- புஸ்பானந்தக் குருக்கள், மத்தது நான்......

நான்னு சொன்னதும்தான் ஞாபகத்திற்கு வர்றது. என்னோட பேரை இன்னும் சொல்லலியே....எம் பேரு சத்யா வதி..... 'சத்யா'ன்னு எல்லாரும் கூப்புடுவா.

அந்தக் காலத்தில நான் மூக்கும் முழியுமா முயல்குட்டி மாதிரி அழகா இருப்பேன். (இப்போ கூட என் வீட்டுக்காரர் அடிக்கடி சொல்வார்!)

அழகா இருந்தாலே பொண்ணுங்களுக்குத் தொல்லைதானே? ஆம்பிளங்க எல்லாம் என் பின்னாடி சுத்த ஆரம்பிச்சுட்டாங்க.

இருந்தாலும் காதல் கீதல்னு எனக்கு ஒண்ணும் பண்ண முடியல. என்னோட குடும்பம் ரொம்ப ஆச்சாரமான குடும்பம், அப்பா ரொம்பக் கண்டிப்பானவர்.

என் கல்யாணம் எப்படி நடந்திச்சு என்று சுருக்கமா சொல்லிடுறனே.

பொண்ணு பார்க்கிறதும் கண்காட்சி பார்க்கிற மாதிரி ஒரு விஷயமுன்னு ஓங்களுக்குத் தெரியும். ஆனால் அதை நாம நெனைச்சா மட்டும் மாத்தமுடியுமா என்ன?

வராந்தாவில பெரியவர்கள் எல்லாம் இருந்தார்கள். நான் சம்பிரதாய வழக்கப்படி காப்பித் தட்டை எடுத்துண்டு நடுக்கத்தோடு போய்க் கொடுத்து, ஒரே பாய்ச்சலில் உள்ளே வரத் திரும்புறப்போ.....

"சத்யாவதி!"

குரல் கேட்டு நின்றேன். அவர்தான் கூப்புட்டார். அவரை எனக்கு முன்னாடியே தெரியும். பேசினதில்லை. முருகேசுக் குருக்களோட கடைசிப் பையன்.

நம்ம ஆச்சாரம் என்னாவது? ஆனா அவரு அதைப்பத்தி அலட்டிக்கல.

"ஒன்னோட கொஞ்சம் பேசணும். ஒக்காருறியா?" கேட்டார். பெரியவா யாரும் மூச்சு விடல. எனக்குத் தொண்டை அடைச்சது.

"நிண்ணுண்டே பேசறேன்" கஷ்டப்பட்டுச் சொன்னேன்.

"எனக்கு மட்டும் ஒன்னப் புடிச்சா போதாது. ஒனக்கும் என்னைப் புடிக்கணும்." சொல்லிவிட்டு கொஞ்சநேரம் மௌனமா யிட்டார். பின்.....

"நம்ம சம்பிரதாயங்களை நான் ரொம்ப மதிக்கிறவன். அதன்படி வாழனும்னு ஆசைப் படுறவன்..... ஆனா நான் செய்யிற தொழில் காரணமா இப்படிக் கொஞ்சம் நாகரீகமா இருக்கும் படியா ஆயிடுச்சு. ஒஃபீஸ் நேரத்துல நெத்தியில விபூதிகூடப் பூசிக்க முடியுறதில்ல....." மீண்டும் மௌனம் பின் ஏதோ தீர்மானித்தவராய் நிலம் பார்த்திருந்த என் முகம் பார்த்து.....

"உனக்கு என்னைப் புடிச்சிருக்கா?" கேட்டார்.

ஐயர் வீட்டுப் பொண்ணாச்சே. நான் எப்படி அந்தக் கேள்விக்கு உடனே பதில் சொல்வது? ஒரே ஓட்டமாய் உள்ளே ஓடினேன். அங்கே அம்மாவின் தோளில் சாய்ந்து, கொஞ்சமாய் அழுது, கொஞ்சமாய் மௌனித்து-பின்.....

"அவரை எனக்...எனக்கு ரொம்பப் புடிச்சிருக்கு" சொன்னேன்.

எனது பதில் எல்லோருக்கும் இனித்தது.

இன்று எனக்கு ஒரு மகன், ஒரு மகள். கொழும்பில் வாழ்க்கை எந்தக் குறையுமில்லை.

அவர் ஒஃபீசுக்கு ஏத்தமாதிரி உடை அணிஞ்சுக்குவார். நான் நம்ம சம்பிரதாயத்துக்கு ஏத்தாப்புல இன்னும் புடவை, நீண்ட கூந்தல், பெரிய குங்குமப் பொட்டு.... இவற்றை மாத்திக்க எனக்கு இஸ்டமில்ல (அவருக்கும் இது ரொம்பப் பிடிக்கும்.)

இந்த 12 வருட இல்லற வாழ்க்கையில் குறிப்பிடும்படியா எனக்கு எந்த ஆசையும் ஏற்பட்டதில்ல. ஆனா இப்போ- புதிதாய் ஒரு ஆசை. அதாவது இன்னொரு ஆசை!

இந்த விபரீத ஆசையை எப்படி வீட்டுக்காரரிடம் சொல்வது? சொன்னால் சில வேளை கோவிச்சுப்பாரோ?

மனம் சஞ்சலப்பட்டது.

கிட்டத்தட்ட கடந்த ஒரு மாதமாக இதை அவரிடம் சொல்ல நினைத்து, அவரின் முகம் பார்த்ததும் பயத்தில் சொல்லாமல் விட்டுட்டேன். ஆனால் இன்னைக்கு எப்படியாச்சும் இதை அவருக்குச் சொல்லிடணும்.

மனம் உந்தித் தள்ளியது.

இரவு. கட்டிலில் சாய்ந்தவாறே விவேகானந்தரின் புத்தகம் ஒன்றை வாசிச்சிண்டு இருந்தார் அவர். அருகில் நான் படுத்திருந்தேன். அது நம்ம பெட்ரூம்.

குழந்தைங்க அவங்கவுங்க ரூமில் நல்ல தூக்கம்.

எனக்கு இன்னும் தூக்கம் வரல.

'இப்போ கேட்டிடலாமா?' மனசு அலை பாய்ந்தது. மெல்ல அவர் பக்கம் திரும்பி. "என்னங்க....வந்து...." தயங்கினேன்.

வாசிச்சுண்டிருந்த புத்தகத்தை தன்னோட மார்பின் மீது கவிழ்த்துவைத்துவிட்டு என்னைப் பார்த்தார்.

"என்ன சத்யா? எதுன்னாலும் தயங்காமக் கேளு." உற்சாகப் படுத்தினார். நானோ மனத்திற்குள் நடுங்கியபடியே......

"வந்து...ஒரு ஆசை...."

"........"

"அது.... பேண்டு சட்டை போட்டுப் பார்க்கணும்னு.... ஒடம் போட ஒட்டினமாதிரி....."

கட்டிலில் சாய்ந்திருந்தவர் எழுந்து அமர்ந்தார். என்னைத் தீர்க்கமாகப் பார்த்தார். "போட்டுண்டு எங்க போகப் போறே?" குரல் கம்மியது.

"நம்ம...நம்ம...பெட்ரூமுக்..... குள்ள மட்டும்தாங்க.....ஒரே ஒரு தரம்....."

நான் கெஞ்சிண்டே சொல்லியதும் சிரிப்பை அடக்க முடியாதவராக சிரிக்க ஆரம்பித்தார் என் வீட்டுக்காரர்!!

**(ஆரம்ப வரிகளை மீண்டும் வாசியுங்கள்.)**



படிப்பகம்

www.padippakam.com

# கண்கள் சொன்ன கதை

தருவது ரசிகன்



**சொ**ல்லித்தான் ஆகவேண்டும். எப்படிச் சொல்வதென்றுதான் தெரியவில்லை. ராகுலனுக்கு தவிப்பாக இருந்தது.

ராகுலனின் தவிப்பு மேனாகாவுக்கு தெரியாது. மஞ்சத்தில் கிடந்தவனின் மார்பை வருடிவிட்டாள்.

களைத்துப்போய் வந்தவனுக்கு அவள் தன் உடம்பை பிடித்துவிடுவது இதமாக இருந்தது. மார்பை வருட சுகமாக இருந்தது.

அவள் தலையில் சூடியிருந்த பூவின் வாசனை கிறக்கம் தந்தது.

அவள் களைத்துப்போய் இருக்கும் போதும் அவன்தான் உடம்பு பிடித்து விடுவான். அப்போது குறும்பும் செய்வான்.

"போதும் நீங்கள் உடல் பிடித்துவிடும் கரிசனை. விடுங்கள்!" என்பாள்.

"தொழில் சுத்தமாக, திருத்தமாக இருக்கிறதா இல்லையா?"

"பிரமாதம். பிடிப்பெல்லாம் பஞ்சாய் பறந்துவிட்டது!"

"கூலிகொடுக்க மட்டும் மறுத்தால் எப்படி?"

"இல்லை, மனதில் விழுந்தது மன்மத விதை! என் உதட்டில் மலர்ந்தது அதன் விளைச்சல்!"

"பொதுநலச் சிந்தனை போய்விட்ட தாக்கும்?"

"பூவளம் கண்டதால் ஏற்பட்ட மாற்றம்!"

மெல்ல கால் தொட்டு அவள் விரல்களை நீவிவிட்டான். பாதங்களை கைகளில் ஏந்தி, வலது காலின் கட்டைவிரலை உதடுகளால் தொட்டான். மேனகா கண்களை மூடி அவன் செயலை ரசித்தாள்.

ராகுலன் விஷயமறிந்தவன். வீணையின் நரம்புகள் பற்றிய விபரமறிந்தவன். எங்கே தட்டினால் நாதம் எழும் என்று தெரிந்து கொண்டவன்.

தொடர்ந்து மீட்டு, நாத சுகத்தில் என்னை மூழ்கவிடு' என்பதுபோல வீணை ஒத்துழைத்தது.

கால்களின் வழியாக தவழ்ந்து வந்த முகம், மேகலை அணிந்த அவள் வயிற்றில் அமர்ந்தது.

பட்டுப்போன்ற வயிற்றிடைச் சுழியில் உதடுகளின் குறும்பு. மேனகா தன் கரம் நீட்டி அவன் பிடரியில் அழுத்த, அதையும் ஒரு வாய்ப்பாக அவன் எடுத்துக் கொள்வான்.

வீணை தாங்காது. வேண்டாம் என்றும் சொல்லாது.

இல்லம் என்பது சொர்க்கம் என்று உணர்ந்த ஆண்மகன் வெளியே விருந்து தேடமாட்டான்.

ராகுலனுக்கு தொழில் படைக்கு தளபதி. தளபதி ராகுலன் மேனகா முன்னர் அடங்கிப் போவான்.

அடங்கிப்போவதும் இன்பமே. நிர்ப்பந்தம் இல்லாமல் அடங்கிப்போவதும், அந்த ஆனந்தத்தில் பெண் அவனை கட்டிக் கொண்டு களி கொள்வதும் இல்லத்தை சொர்க்கமாக்கும்.

எங்கிருந்தாலும், எந்த இடர் வந்தாலும் இல்லத்தை நினைத்தால் மனம் துள்ள வேண்டும். இல்லம் நரகமாக இருந்தால், சாக்கடை நீரையும் அருந்தச் சொல்லும் மனம்.

சுவை தெரியாது. தனிச் சுகம் புரியாது. வாழ்க்கை தடம் மாறும். மனிதன் மிருகமாகி விடுகிறான்.

ராகுலன் மனிதன். அவன் மனிதனாக இருக்க வீடும் காரணம். கூட்டுக்கு திரும்பும் பறவையைப் போல, வீட்டுக்கு திரும்பினால் தான் அவனுக்கு சுகம்.

நாட்டின் தளபதி. தோளில் சுமை அதிகம். ஓயாத பணிகள். காண்பதும், பேசுவதும், களித்திருப்பதும் கொஞ்ச நேரம் தான்.

அந்த கொஞ்ச நேரம்தான் மேனாகவுக்கு பொன்னான நேரம்.

ஓய்வற்ற பணிகளில் அவன் மூழ்கி யிருப்பதால் மேனகா முகம் சுளிப்பதில்லை.

ஆனால் இப்போது,.. அவன் புறப் பட்டாக வேண்டும். போர் முனை அழைக் கிறது. தளபதி இல்லாமல் படை நகருமா?

புறப்படவேண்டிய செய்தியை எப்படி மேனாகாவிடம் சொல்வது?

தனக்காக உள்ள கொஞ்ச நேரம்கூட இல்லாமல் போகப்போகிறதே என்று வருந்த மாட்டாளா?

போருக்கு செல்பவன் திருப்பி வரும் நாள்வரை, நெஞ்சுக்குள் எத்தனை தவிப்பை சுமக்க வேண்டியிருக்கும்.

மனப்போராட்டத்தில் தவித்தான் ராகுலன். சொல்லிவிடலாம் என்று நினைத் தால் உதடுகள் ஒத்தழைக்க மறுத்தன.

"என்ன கடும் யோசனை?" என்றாள். உற்சாகமான உள்ளத்தோடு இருக்கிறாள்.

அவள் கரங்கள் உடலைப் பிடித்துவிடும் முறையை வைத்தே அவள் உள்ளத்தை படித்துவிடுவான் ராகுலன்.

"என்ன கண்ணா யோசனை? ஏதாவது நாட்டை பிடிக்கப்போகிறீர்களாக்கும்?" கேலியாகச் சொல்லி, மார்பில் தலை சாய்த்து இதழ்களை பதியவைத்தாள்.

"மேனகா!" என்றான்.

"ம்.." என்றாள் அவனின் காதுமடலை தன் இடதுகர விரல்களால் நீவிவிட்டபடியே.

'விடிந்ததும் புறப்படவேண்டும்' என்று சொல்ல நினைத்த வார்த்தைகள் தொண்டை வரை வந்து நின்றுவிட்டன.

அவள் முகத்தை தன் இரு கரங்களிலும் தாங்கி, கண்களுக்குள் பார்த்தான்.



கண்கள் கதை பேசின.

மான் புலியை அழைத்தது. புலியே வா! இந்த மான் உனக்குத்தான்!

உன்னால் உண்ணப்படுவது சுகம்! புலியே புலியே! என்னால் எண்ணப்படு வதெல்லாம் உன்னால் உணரப்பட வில்லையா?

வேட்டையாடு. விருந்துண்ணு. இந்த மான் உன் சொந்தமான்.

கண்களின் பாஷை புலிக்குப் புரிந்தது. புலிக்கும் பசித்தது.

புலி மானை மெல்ல வளைத்தது.

கண்கள் போதும் இந்தப் பெண் களுக்கு! பின்னர் எதற்கு இதழ்கள்? அதனால்தான் இதழ்களுக்கு வேறு உபயோகமும் வைத்தானோ படைத்தவன்? என்று நினைத்தான் ராகுலன்.

கண்களால் ஆசை சொல்வது பெண் ணின் அழகுக்கு அழகு என்று திருவள்ளு வரும் சொல்லியிருக்கிறார்.

**"பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்**
**காமநோய் சொல்லி இரவு."**

குறள்-1280-அதிகாரம்:-128

## இலக்கிய நயம்

"நீங்கள் சுயநலக்காரர்!"

"என்ன சுயநலம்?"

"பிரதிபலன் எதிர்பார்த்து செய்யும் உதவிக்கு வேறு என்ன பெயராம்?"

"அதுதானே! சுயநலத்தை துறந்தேன். பொதுநலமாக யோசிப்போமா? என்ன நீ சவினல் வழியாக மேலே பார்த்து சிரிக் கிறாய்?"

"மழை வருகிறதா என்று பார்க் கிறேன்."

"கேலிதானே! என் பொதுநலச் சிந்தனையை கொட்டினால், நீயே குளிர்ந்து போவாய்!"

"அடடே.. எங்கே கொட்டுங்கள் பார்ப்போம்!"

மஞ்சத்தில் கிடந்தவள் உடலை நிமிர்த்தி அவனைக் கேலியாகப் பார்த்தாள். உடல் நிமிர, அழகுகளும் நிமிர்ந்து போருக்கு தயாரான சேனைபோல மிரட் டின. ராகுலனுக்குள் இருந்த இன்னொரு ராகுலன் மிரளாதே, போர்தொடு என்று உற்சாகமூட்டினான்.

"எங்கே பொதுநல சிந்தைனையைக் காணவில்லையே" என்றாள்.

"சிந்தனை தடைப்படும் சமயங்களும் உண்டு!"

"இப்போது அப்படி என்ன நடந்து விட்டது?"

"குன்றென நிமிர்ந்தது சேனை! கண்டதும் கவிழ்ந்தது மனது!

"ஓ.. கவிதையா?"

# 'கப்டனாக கபில்தேவ்'



உலகின் பிரபல கிரிக்கெட் வீரர்கள் ஓய்வு பெறும்போது அவர்களது ரசிகர் களுக்கு மகா கவலைதான். அந்தக் கவலை யைத்தீர்க்க உருவானதுதான் 'உலக மாஸ்டர் கிரிக்கெட் போட்டி'.

சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற வீரர்கள் கலந்துகொண்டு தூள் கிளப்புவார்கள் 'உலக மாஸ்டர்கள் கிரிக்கெட் போட்டி' கடந்த வருடம் மார்ச் மாதம் முதன் முதலாக நடைபெற்றது.

இரண்டாவது போட்டி இந்தவருடம் நவம்பர் மாதம் 7ம் திகதி இந்தியாவில் பம்பாயில் உள்ள பிராபோர்ன் விளையாட்ட ரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியில் இலங்கை, இந்தியா உட்பட ஆறுநாடுகள் கலந்துகொள்கின்றன.

இந்திய அணிக்கு கபில்தேவ் தலைமை தாங்குவார். 'ஏ' பிரிவில் இந்தியா இடம் பெறும். இங்கிலாந்து, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளும் 'ஏ' பிரிவில் உள்ளன.

'பி' பிரிவில் மேற்கிந்திய அணி, அவுஸ் திரேலியா, இலங்கை ஆகியநாடுகள் உள்ளன.

இலங்கை அணிக்கு திலிப் மெண்டிஸ், அவுஸ்திரேலிய அணிக்கு ஜியோப் லாசன், தென்ஆபிரிக்க அணிக்கு கிளைவ் ரைஸ், மேற்கிந்திய அணிக்கு ஜோயல் கர்னர் ஆகி யோர் கப்டன்களாக இருப்பர்.

சென்ற முறை 'உலக மாஸ்டர்கள் கிரிக்கெட்' போட்டியில் மேற்கிந்திய அணி சாம்பியனாகியது.

சென்றமுறை இந்திய அணியில் சுனில் கவாஸ்கர் விளையாடினார். இம்முறை அவர் விளையாட மாட்டார். உலக மாஸ்டர்கள் கிரிக்கெட் போட்டிக்கு இம்முறை அவர் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### ஜிம்பாவே அணி இலங்கை வரும்

ஆகஸ்ட் 29ம் திகதி முதல் செப்டம்பர் 9ம் திகதிவரை இலங்கையில் சிங்கர் உலகக் கோப்பை ஒரு நாள் போட்டிகள் நடைபெறவுள் ளன. அவுஸ்திரேலிய அணி வர மறுத்துள்ளது.

சிங்கர் போட்டியில் கலந்து கொள்ள வரும் ஜிம்பாவே அணி அதைத் தொடர்ந்து இலங்கை அணியுடன் 2 டெஸ்ட் போட்டி களிலும் விளையாடும்.

இலங்கை அணி டெஸ்ட் போட்டிகளில் பங்குகொள்வது காணாது. அதிக டெஸ்ட் போட்டிகளில் இனிமேல் விளையாட வேண் டும் என்று இலங்கை கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

இங்கிலாந்து அணியை டெஸ்ட் போட்டிக்கு வருமாறு இலங்கை அணி கடந்த பத்தாண்டு களாக வற்புறுத்தி வருகிறது. இங்கிலாந்து அணி இதுவரை சம்மதிக்கவில்லை.

### மைக்கேல் ஜோன்சன் வெற்றி

ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு ஒலிம்பிக் பந்தய வெள்ளோட்டங்கள் நடை பெற்று வருகின்றன.

ஒலிம்பிக் பந்தய வெள்ளோட்டம் மற்றும் அமெரிக்க அணிக்கான 400 மீட்டர் ஓட்ட பந்தய வீரர்கள் தெரிவு 19.6.95 அன்று நடைபெற்றது.

அதில் அமெரிக்க வீரரான மைக்கேல் ஜோன்சன் 400 மீட்டர் தூரத்தை 43.44 விநாடிகளில் கடந்து வெற்றிபெற்றார். அவ ருக்கு அடுத்தபடியாக வந்த புட்ச் ரெனால்ஸ் 43.91 விநாடிகள் எடுத்துக் கொண்டார். அன்றைய வெற்றியோடு மைக்கேல் ஜோன்சன் தொடர்ந்து 53 முறையாக வெற்றி பெற்றுள்ளார்.

தனது ஒலிம்பிக் சாதனையான 43.39 விநாடிகளை வெள்ளோட்டத்தில் முறியடிக்க விரும்பினார் மைக்கேல் ஜோன்சன். அது கைகூடவில்லை. மோசமான துவக்கம் தனது முன்னைய சாதனையை முறியடிக்க முடியா மல் செய்துவிட்டது என்று மைக்கேல் ஜோன்சன் கூறியுள்ளார்.

ஒலிம்பிக் போட்டியில் தனது முன்னைய சாதனையை முறியடிக்கும் உறுதியுடன் காணப்படுகிறார்.

### தங்கம் வெல்ல சதி!

அமெரிக்காவில் அட்லாண்டா நகரில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கு ரசியா சார்பில் 410 வீரர்கள் பங்கேற்கின்றனர். அவர்களில் 32 பேர் கடந்த முறை ஒலிம்பிக் போட்டியில் பதக்கங்களை வென்றவர்கள்.

ரசியாவின் ஒலிம்பிக் அதிகாரி அமெரிக்காமீது குற்றம் சாட்டியிருக்கிறார். "அட்லாண்டாவில் தற்போது கடுமையான வெப்பம் நிலவுகிறது. எங்கள் வீரர்கள் தங்கு வதற்கு சரியான ஏற்பாடுகள் செய்யப்பட வில்லை. பயிற்சி எடுப்பதற்கும் சரியான இடங்கள் வழங்கப்படவில்லை. ஆனால் அமெரிக்க வீரர்கள் தங்கிக்கொள்ள வசதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இம்முறை அதிக தங்கப் பதக்கங்களை அமெரிக்கா பெறுவதற்கு இதுமாதிரியான காரணங்கள் உதவும். ஆனாலும், எமது வீரர்கள் நீச்சல் போட்டி, குத்துச்சட்டை, ஜிம்னாஸ்டிக் ஆகியவற்றில் நிச்சயம் தங்கம் வெல்லுவார்கள்" என்று ரசிய அதிகாரி தெரிவித்துள்ளார்.

# சிந்தியா பதில்கள்

*** டியர் சிந்தியா! நம் நாட்டிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் டைனோசர்களாக மாறி னால் எப்படி இருக்கும்?**

செல்வி. சுந்தரம் சுபத்ரா, கோளாவில்-2.

அதாவது, அழிந்துபோய்விடலாம் என்கி றீர்கள். ஒன்றுபடவே ஒருக்காலும் சம்மதிக்கா மல் அழிந்த இனம் என்று எதிர்காலத்தில் ஆச்சரியமாக நோக்கப்படலாம் என்கிறீர்கள். ஏங்க இந்த விபரீத ஆசை? மெல்ல அழிய லாமே! அதுதானே நடந்துகொண்டிருக் கிறது.

*** டியர் சிந்தியா! வடக்கு-கிழக்கு பிரச்சனை யைத் தீர்த்துவைக்க இந்த நாட்டில் யாராலும் முடியாதா?**

சி. தயானந்தன், பேத்தாழை.




ஏன் 'முடியாது? ஹா ஹா....யார் சொன்னது தீர்த்துவைக்க இயலாது என்று? ஆனால் செய்யமாட்டார்கள்!

*** டியர் சிந்தியா! மின்சார வெட்டு தொடர்ந்து நீடிக்குமானால் சனத்தொகை அதிகரிக்கும் என்று சொல்கிறார்களே உண்மையா?**

மனோ-ஹப்புத்தளை.

மின்சார வெட்டு ஒருபுறம், மின்சாரம் வந்தாலும் தொலைக்காட்சி போன்ற பொழுது போக்குகள் கட். வேறு என்ன பொழுது போக்கு இருக்கிறது என்று யோசித்துப் பார்த்தால், உங்களுக்குக் கிடைத்த தகவல் உண்மையாகும் சாத்தியக்கூறுகள் இருக்கவே இருக்கின்றன மனோ.

*** மின்வெட்டு அமுல்படுத்துவதால் யாருக்கு லாபம்? அரசுக்கா? மண்ணெண்ணெய் வியா பாரிகளுக்கா?**

செல்வி பிரிய நேசி, களுத்துறை (தெற்கு)

அரசுக்கு நஷ்டம்தான். லாபம் சகலவகை யான கொள்ளைக்காரர்கள் மற்றும் திருடர் களுக்கு (இதற்குள் பல ரகத்தினரும் அடக்கம்.)

*** காதலர்கள் சந்தித்துக் கொள்வதற்கு ஏன் மாலைப்பொழுதை தேர்ந்தெடுக்கிறார்கள்?**

அன்சீர். ஏ. மஜீட், கல்கமுவ.

அதெல்லாம் அந்தக்காலம். இப்போது உச்சிவெயிலில்-தகிக்கும் மணலில் இருந்தெல் லாம் எக்கச்சக்கமாகக் காதலித்துக்கொண்டி ருக்கிறார்கள். ஏதேதோவெல்லாம் செய்து கொண்டுமிருக்கிறார்கள்.

*** உலக அழகி சுஷ்மிதா சென் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?**

சோ. ஜெயக்குமார், வவுனியா.

முன்னாள் உலக அழகி இந்நாள் நடிகையாகிவிட்டார். நாகார்ஜுனுடன் ஆறு, கடல், மரம் எல்லாம் தாண்டி ஓடி டூயட் பாடிக்கொண்டிருக்கிறார். என்னைப்பார் என் அழகைப்பார் என்று பம்பாய் சஞ்சிகை களுக்கு பயங்கரமான போஸ் எல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறார். சுஷ்மிதா சென், அவருக்கு இப்போது பணத்தின்மீது தான் கண்.

*** இந்திய கிரிக்கெட் அணியில் இருந்து சித்து ஏன் விலகினார்?**

செல்வி லதா ராஜேஸ்வரன், கம்பஹா.

இந்திய கிரிக்கெட் சபை பிரபலமான வீரர்களுக்கெல்லாம் பிரியாவிடை கொடுத் ததோ இல்லையோ, அவர்களது மனதை உடைத்துத்தான் வெளியே தூக்கிப்போட்டி ருக்கிறது. கபில்தேவ், ஸ்ரீகாந்த், ரவிசாஸ்திரி, மொகிந்தர் அமர்நாத், மனோஜ் பிரபாகர் என்று பல முன்னணி வீரர்கள் கசப்பான அனுபவத்தோடுதான் கழன்றுகொண்டனர். இப்போது பாவம் சித்து. பார்க்க சாதுபோல் தெரிந்தாலும் மனுஷர் படு கோபக்காரர். போங்கடா நீங்களும் உங்கள்....."என்றுவிட்டு திரும்பிவிட்டாரே?

*** முன்னாள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தனது கட்சிக்குள் எதிர்ப்பை சமாளிப்பாரா?**

வி. மகாலிங்கம், கண்டி.

இந்த ஆண்டு இறுதிவரை அவர்தான் தலைவர் என்று காங்கிரஸ் கட்சி அறிவித்தி ருக்கிறது. பாவம் நரசிம்மராவ், அவரை கிரிக்கெட் அணி கப்டன் போலாக்கிவிட்டார் கள். கவுடா அரசுக்கு நேரம் பார்த்து பந்து வீசி 'கிளீன் போல்டாக்க' நரசிம்மராவை விட்டால் வேறு திறமையான ஆள் கிடையாது. அதனால் அவரது கப்டன் பதவி தொடர் கிறது.

*** எதிர்காலத்தில் இலங்கையில் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளில் அவுஸ்திரேலியா கலந்துகொள்ளுமா?**

கே. நடராஜா, மத்துகம.

அவுஸ்திரேலிய அணி இங்கே வர வேண்டுமானால் "குண்டுவீசமாட்டோம், நீங் கள் வந்து பந்தோடு விளையாடலாம்" என்று உத்தரவாதம் கொடுக்கவேண்டும். கொடுக்கவேண்டியவர் லக்ஷ்மன் கதிர்காமரல்ல, வேலுப்பிள்ளை பிரபாகரன்!

*** வடக்கு-கிழக்கு இணைந்திருப்பது நல்லதா? பிரிவது நல்லதா?**

க. விமலேந்திரன், மட்டக்களப்பு.

அடம்பன் கொடி எப்படி இருந்தால் மிடுக்கு?

திரண்டிருந்தால்தானே! திக்குக்கு ஒன் றாக சிதறியிருந்தால்....?

*** நடிகர் ரஜினிகாந்த் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?**

சி. நவீன், கொழும்பு-6.

மகாபாரத யுத்தம் முடிந்ததும் கிருஷ்ணன் என்ன செய்தார்? தன் வேலையைப் பார்க்கப் போய்விட்டாரல்லவா? கலைஞர் தருமராக ஆட்சியை தொடர்ந்தால் ரஜினியின் தலையீடு இருக்கப்போவதில்லை. இப்போது ரஜினி யின் அரசியல் எதிர்காலம் தமிழக முதல்வர் கலைஞரின் கையில்!

*** டியர் சிந்தியா! பெண்களின் மனதை அறியமுடியாதாமே. அவ்வளவு ஆழமா?**

எஸ். எண்டோ கமல், கொழும்பு-13.

ஆழம் தெரியவேண்டுமானால் நீரில் இறங்கவேண்டும்; நீரில் இறங்க நீச்சல் தெரியவேண்டும். என்ன புரிகிறதா?

*** யுத்தம் முடிவுக்கு வரவேண்டுமானால் என்ன செய்ய வேணடும்?**

ப. வசீகரன், கண்டி.

இனப்பிரச்சனையை ஒரு கை பார்க்க வேண்டும்.

*** ரங்கீலா நாயகி ஊர்மிளா என் கனவில் வருகிறார். காரணம் யாது?**

எம். யோகேஸ்வரன், பதுளை.

உங்கள் வயது!



படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 37

இராமபிரான் எதற்காக அவதாரம் எடுத்தாரோ அந்தக்காரியம் நிறைவேறுவதற்கான காலமும் நேரமும் மிக வேகமாக நெருங்கி வந்து கொண்டிருந்தது. இதனால் தான் சிவ பக்தனான இராவணனும் சிந்தை தடுமாறி சீதையின் நினைவால் செயலிழக்கலானான். இராமரிடத்திலிருந்து சீதையைக் கவர்ந்து தன்னுடைய இச்சைக்குரியவளாக்கி அவனிடமிருந்து பிரித்து விட்டால் அவனால் அதனைச் சகிக்க முடியாது. ஆகவே, அந்த சீதையைக் கவர்ந்து வர நீதான் மாமா எனக்குப் பேருதவி தர வேண்டும்!" என்று இராவணன் புலம்பினான்.

மாரீசனுக்கு இராவணனின் உண்மையான உள்நோக்கம் நன்கு புலப்பட்டுவிட்டது. சீதையின் பால் அவனுக்கு ஏற்பட்டிருக்கும் காம வெறியை மறைப்பதற்கு ஏதேதோ

மாரீசன் ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டான். எவ்வகையிலும் தன் முடிவுகாலம் நெருங்கிவிட்டதை அவன் உணர்ந்து கொண்டான். இராவணனின் கோரிக்கைக்கு இணங்காவிட்டால் அவனே கொன்று விடுவான். இராவணனின் விருப்பத்திற்கு இசைந்து சீதையைக் கவர்வதற்கு அவனுக்கு உதவினால் இராமனின் கையால் மரணமடையவேண்டி நேரிடும். இராவணனின்

## மாய மானுருவெடுத்த மாரீசன்

விடத்துடி துடித்தான்; விரகதாப மேலீட்டால் வேதனைப் பட்டான்.

சீதையைக் கவர்வதானால் படையெடுத்துச் சென்று அதனைச் சாதிக்க முடியாது. அதுமட்டுமல்லாமல், இராமபிரானின் வீரபராக்கிரமங்களைப் பற்றியும் ஓரளவு சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய நிலையில் அவனிருந்தான். தன் தங்கை சூர்ப்பணகை கூறியதுபோல், இராமரை அவளுடைய விளையாட்டுப் பொருளாக ஆக்கி விடவும் வேண்டும். எப்படியும் முதலில் சீதையை அடைவது தான் அவனுடைய அப்போதைய அவசிய-அவசரத் தேவையாக இருந்தது. அமைச்சர்களை அழைத்து இதற்கு ஆலோசனை பெற அவனால் முடியாது. ஆகவே தனது தாய் மாமனிடம் மீண்டும் செல்லத் தீர்மானித்தான். சீதையைக் கவர்வது தொடர்பாக ஏற்கனவே மாரீசனிடம் ஆலோசனை கேட்டபோது அவனால் கூறப்பட்ட புத்திமதிகளை அப்போது ஏற்ற போதிலும் இப்போது-சீதைமீது கொண்ட காம வெறி கட்டுக்கடங்காமல் ஏறிவிட்டமையினால்- அப்புத்திமதிகளை உதாசீனம் செய்து விட்டு தனது மாய விமானத்திலேறி விண்ணைத் தாவி மாரீசனின் தவோவனம் நோக்கிப் புறப்பட்டான்.

மீண்டும் இராவணனின் இரதம் தனது ஆசிரமமுன்றிலில் வந்திறங்கும் போதே- தனது தவவலிமையினால் எதிர்காலத்தை ஓரளவு உணர்ந்தவனான மாரீசன்- இராவணனை வரவேற்று உபசரித்தான். இராவணனுடைய உடல் மெலிந்திருந்தமையையும் அவனுடைய கண்கள் ஏக்க முற்றுத் தூக்கமிழந்து தவித்தமையையும் மாரீசன் அவதானித்தான். முன்பு சீதையைக் கவர்வது தொடர்பாகத் தன்னிடம் வந்த போதிருந்ததை விட இலங்கையர்கோனின் தோற்றத்தில் ஏற்பட்டிருந்த பெரு மாற்றத்தைக் கண்ட மாரீசன், அவன் காமப் பித்துக் கொண்டு சித்தம் தடுமாறிவிட்டான் என்பதைச் சுலபமாகக் கண்டு கொண்டான்.



### மாமனின் உதவி நாடிய மருமகன்

மாரீசனால் அளிக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்த இராவணன், தழுதழுத்த குரலில், "மாமா உன்னைத் தவிர எனக்கு உதவக் கூடியவர் வேறு எவருமில்லை. எப்படியாவது அந்த மாநிடன் இராமனின் மனைவியை இராமனிடமிருந்து பிரித்தேயாக வேண்டும். என் தம்பிமாரான கரன், தூடணன், திரிசிரன்,, ஆகிய மூவரையும் ஏராளமான அரக்கர் படையையும் அழித்துள்ளான் என்பது மட்டுமல்ல, என் உடன் பிறப்பான என் அருமைத் தங்கை சூர்ப்பணகையின் அங்கங்களையும் அரிந்து அவளை அவலட்சணமாக்கி விட்டார்கள். இந்த அவமானத்தைத் துடைப்பதானால் துறவு வேடம் பூண்டு கானில் வாசம் செய்யும் அந்த இராம-இலக்குவனுடன் படை கொண்டு போர் புரிய முடியாது. அவர்கள் இருவருக்கும் சரியான பாடம் புகட்டாவிட்டால், நான் வலிமை பொருந்திய அரசனாக ஆட்சி செலுத்துவதால் எதுவித பலனுமில்லை. இத்தகைய அவமானத்துடன் என் குடிமக்கள் முன் எப்படித்தான் தலை நிமிர்ந்து நடக்க முடியும்?

"இராமனோ தன் தந்தையால் நாட்டை விட்டே விரட்டப்பட்டவன். தவ வாழ்க்கை மேற்கொண்டவனானால் தன் மனைவியையும் ஏன் கானகத்துக்கு அழைத்துவரவேண்டும்? அது மட்டுமல்லாமல் தண்டகாரணியத்திலுள்ள ரிஷிகளெல்லாம் இதுவரை நம்மைக் கண்டு நடுநடுங்கிக் கொண்டிருந்தார்கள். இன்று இராமனைப் போற்றிக் கொண்டாடுகிறார்கள். ஆகவே இனிமேல் தாமதமின்றி அவர்களைத் தண்டிக்க வேண்டும். இராமனிடம் இருக்கும் ஒரேயொரு உயர்வான பொருள் சீதை மட்டும்தான். அவளை

கதைகளைக் கூறி மழுப்புகிறான் என்பதனையும் புரிந்து கொண்டான். இருப்பினும் மீண்டும் ஒருமுறை புத்திமதிகளைக் கூற முற்பட்டான்.

"அருமை மருமகனே! இராமனை நீ சாதாரண மனிதனாகக் கணித்து விடாதே! தன்னுடைய சிறிய தாயாருக்கு தனது தந்தையார் கொடுத்த வாக்கைக் காப்பாற்றவே இராமன் தனது அரசபோகத்தைத் துறந்து துறவறம் பூண்டு கானகம் புகுந்தான். மேலும் அவனுடைய வீரபராக் கிரமத்தையிட்டுத் தப்புக்கணக்குப் போட்டுவிடாதே. முனிவர்கள் செய்த வேள்வியைக் குழப்புவதற்காக எனது தாயாருடன் எனது உறவினர்கள் பலர் ஆகாயத்தில் மிதந்து ஊனையும் உதிரத்தையும்யாக குண்டங்களில் கொட்டுவதற்கு எத்தனித்தார்கள். என்தாயை ஒரே பாணத்தினால் இராமன் கொன்றொழித்தான். மறு பாணத்தினால் என்னை சமுத்திரத்தில் வீழ வைத்தான். அந்தத் தெய்வீக பாணம் பட்டுத்தான் நான் இன்று கண்ணியனாகிக் கடைத்தேறினேன். மேலும் இராமன் எமது அரக்கர் குலத்தினை அழித்தொழிக்கவே அவதரித்தவன் என்று அறிகிறேன். ஆகவே, சீதை எனும் நெருப்பைத் தீண்டி நீயும் அழிந்து, நமது வம்சத்தையும்

# இராஜகுமாரி

வேரோடு அழித்துவிட வழி தேடாதே!" இவ்வாறு உருக்கமாக நீண்ட தொரு வேண்டுகோளை இராவணனிடம் விடுத்தான் மாரீசன்.

மாரீசனின் அறிவுரை முன்புபோல இராவணனின் மனமாற்றத்தை ஏற்படுத்தாமல் அவனுடைய மனப் புண்ணை மேலும் கிளறிவிட்டது. சினமடைந்தவனாகச் சீறினான்.

### சினமடைந்தவனின் சீற்றம்

"சிவபெருமான் வாசம் செய்கின்ற திருக்கயிலாய மலையையே என் தோள்களால் பெயர்த்தெடுத்தவன் யான்! அட்டத்திக்கு வாரணங்களே என்னுடன் பொருத முடியாமல் ஓடி ஒளிந்து கொண்டன. தேவர்க்கரசனான தேவேந்திரனே எனக்குக் குற்றேவல் செய்யக்காத்துக் கிடக்கிறான். பத்துத்திக்குகளிலும் எனக்கு ஈடும் இணையுமில்லாத நிலையில் பத்துமகுடங்களைச் சூடிக் கொண்டு அரசாளும் என்னை- கேவலம் இரு மாநிடர்களைக் காட்டி அச்சமுறவைக்கிறாய்! மாமா! என்னுடைய கட்டளைப்படி நீ நடக்காவிட்டால் உன் உடலில் உன் தலை இருக்காது. ஆகவே, என்னுடன் தண்டகவனத்துக்கு இப்போதே வா! அந்தச் சீதையை மாயமாகக் கவர்ந்தெடுத்து வர நீதான் உதவ வேண்டும். என்ன வரப்போகிறாயா? அல்லது உயிர்துறக்கப்போகிறாயா?" என்று அதிகார தோரணையில் இராவணன் ஆர்ப்பரித்தான்.

கையால் மரிப்பதைவிட இராமனின் கைகளால் மரணமடைவதே மேலானது என்று மாரீசன் முடிவெடுத்தான். அதனால் தனக்கு நற்பதவி-ஆன்ம ஈடேற்றம் ஏற்படும் என்றும் தீர்மானித்துக் கொண்டான்.

"மருமகனே! விதியை வெல்ல எவராலும் முடியாது. அரக்கர் குலத்துக்கும் இலங்காபுரிக்கும் ஏற்படப்போகும் பேராபத்தின் அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. இனத்தை அணைத்து வழிநடத்த வேண்டிய தலைவனான நீயே அவ்வினத்தின் அழிவுக்கு வழிதேடும் போது அதனைத் தடுக்க எவர் நினைத்தாலும் முடியாது. ஆகவே, உன்னுடைய எண்ணப்படியே உன் நாட்டுக்குடிமகனாகிய நானும் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய கடமைப்பாடுடையவன். நான் எவ்வாறு உன் திட்டத்துக்கு உதவலாம் என்பதை விபரிப்பாயாக," என்றான் மாரீசன்.

### பொன்மான் வேடமிட மன்னன் முன்யோசனை

இவ்வாறு மாரீசன் கூறியதுமே சீதை தன்னருகே ஓடி வந்து விட்ட மாதிரி இராவணன் கருதினான். மாமனாரை அணைத்துத் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டான். "மாமா! எப்படியும் நான் அந்தச் சீதையை அடைந்தேயாக வேண்டும். இதற்கு உன் உதவியைத் தவிர வேறு எவருடைய உதவியையும் நாடிச் செல்ல என்னால் முடியாது. அதனாலேயே கடிய வார்த்தைகள் சிலவற்றை உதிர்த்துவிட்டேன். மன்னியுங்கள் மாமா!

"சீதையை வர்ணித்த என் தங்கை சூர்ப்பணகை அவளை ஓர் அழகிய பொன்மானாகத்தான் முதலில் வர்ணித்தாள். எந்த உருவினையும் நினைத்த மாத்திரத்தில் எடுக்கும் ஆற்றலைப் பெற்ற நீயும் சீதையின் சிந்தையைக் கவரும் அழகிய பொன்மானாக அவள் முன்போய்ப் பாய்ந்து விளையாட வேண்டும். உன் அழகில் மயங்கி உன்னைப் பிடித்து தன்னிடம் ஒப்படைக்கும்படி சீதை தன் கணவன் இராமனிடம் கோரவேண்டும். எப்படியும் இராமனை வெகு தூரத்துக்கப்பால் இழுத்துச் சென்றுவிடு. தொடர்ந்து அண்ணனைத் தேடி இலக்குவனும் வருவான். சீதை தனித்திருக்கும்போது நான் அவளைத் தூக்கி என் புட்பக விமானத்தில் ஏற்றிக் கொண்டு இலங்கை மாநகர் திரும்பி விடுகிறேன். இதுதான் என் திட்டம்." இவ்வாறு இராவணன் அவசர அவசரமாகக் கூறி முடித்து மாரீசனின் பதிலுக்காகக் காத்திருந்தான்.

"இராவணா! நான் பல வருடங்களுக்கு முன்னரும் விசுவாமித்திர மாமுனிவரின் யாகசாலையில் நடைபெற்ற வேள்விகளைக் குலைப்பதற்குச் சென்றிருந்தேன் என்பதை முன்னர் சொல்லியிருந்தேன். மற்றும் இருவருடன் மான்வேடமிட்டுத்தான் சென்றேன். என்னுடன் வந்த அவ்விருவரும் இராமனின் கணைகளுக்கு இரையானார்கள். நான் இராமனின் பாணத்தால் ஏனோ கொல்லப் படாமல் சமுத்திரக்கரைவரை தூக்கி எறியப் பட்டேன். அன்றுடன் எனது துன்மார்க்கங்களைத் துறந்து எஞ்சிய எனது ஆயுள் காலத்தைப் பயனுள்ளதாக்க தவவாழ்க் கையினை மேற்கொண்டேன். இனி இந்த வாழ்க்கையும் போதும் என்ற நிலைக்கு வந்துவிட்டது. உன் இஷ்டப்படியே நடக்கச் சித்தமாகி விட்டேன்," என்றான் மாரீசன். இருவரும் இராவணனின் மாய இரதத்தி லேறி வான் மார்க்கமாக தண்டகாரணியத்தை அடைந்தனர்.

அழகிய காலைப் பொழுதில் நந்தவனத்தில் பூக்களைப் பறித்துக் கொண்டிருந்த சீதையின் அருகில் அழகிய பொன் வண்ண மான் ஒன்று துள்ளிக்குதித்து விளையாடியது. என்றுமே கண்டிராத அந்த அதிசய மானை வைத்த கண் வாங்காமல், சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்த சீதை அதனைப் பிடிக்க முயன்றாள். அது ஓடிச் சென்று சற்றுத் தூரத்துக்கப்பால் நின்று சீதையையே பார்த்தது. ஓடிப் பிடிக்கச் சென்ற போதெல்லாம் துள்ளி ஓடிவிடுகிறது. தன் கணவன் இராமனை அணுகி அந்த அழகிய-அதிசய மானை சீதை சுட்டிக்காட்டினாள்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி : 35**

**சரியானவிடை:- சூர்ப்பணகையின் சூல்ச்சி.**

1. G.வாமதேவன்
   20/1, பழையவாடி வீட்டுத் தெரு, மட்டக்களப்பு.
2. கலாயுவன் தாஜுதீன்.
   AD-6/8,நன்பொகுன, நிட்டம்புவ.
3. பொ.ராஜமோகன்.
   தேவாபுரம் வந்தாறுமூலை.
4. R.செல்வி.
   52/2 செட்டி விதி, புத்தளம்.
5. செல்வி.க. சிவலிங்கம். மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, திருகோணமலை.

**போட்டி இல. 37** கேள்வி:- மாரீசனின் முடிவிற்குக் காரணம் யாது?

ஜூலை.06 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.37, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# பயோடேட்டா



பெயர்:- குமாரர்
தொழில்:- சட்டத்தரணி.
பொழுதுபோக்கு:- அரசியல்.
அப்பா சேகரித்த கார்கள்.
பிடித்த மொழி:- ஆங்கிலம்
அரசியலுக்காக படித்த மொழி:- தமிழ்
பிடித்த இடம்:- மலேசிய திராட்சைத் தோட்டம்.
தகுதி :- அப்பாவின் பெயர்.
ஏமாற்றம்:- 1977 இல் தேர்தலில் போட்டியிட கூட்டணி ரிக்கெற் கிடைக்காதது.
அனுபவம்:- 77 பொதுத்தேர்தலில் சுய இச்சையாக போட்டியிட்டது. தமிழ் ஈழக்கோரிக்கையை கிண்டலடித்தது.
சாதனை:- தொடர் தோல்விகள்.
எதிரிகள்:- தமிழ் கட்சிகள்.
நண்பர்கள்:- தற்போது புலிகள்.
நிரந்தர எதிரி:- கூட்டணி.
நிரந்தர நண்பர்கள்:- யாரு மில்லை.
கட்சியின்பெயர்:- த.கா.க.
கட்சியின் பலம்:- தேர்தல் நேரத்தில் வேட்பாளர்களை தேடிப்பிடிக்கக்கூடியளவுக்கு.
கட்சியின் சாதனை:- ஒருவரே செயலாளராக, பொருளாளராக, பொதுக்குழுவாக நீண்டகாலம் தனித்துநின்று தாக்குப்பிடிப்பது.
உடனடி இலட்சியம்:- புலிகளிடம் நல்ல பெயர் எடுப்பது.
எதிர்கால இலட்சியம்:- ஒரே ஒரு முறையாவது தேர்தலில் வெற்றி.

# காதில பூ கந்தசாமி

கவுண்டமணி வீட்டில் ஒரு கோடி ரூபாய் கறுப்புப்பணம் மாட்டியிருக்கிறது. செந்தில் வீட்டிலும் சோதனை நடந்தது. 10 இலட்சம் ரூபாய் கறுப்புப் பணம் மட்டுமே இருந்தது. கவுண்டமணியும், செந்திலும் அதன்பின்னர் சந்தித்திருந்தால் என்ன பேசியிருப்பார்கள்? கற்பனை செய்வோமா?

செந்தில்:- அண்ணே எப்படியண்ணே இருக்கீங்க?
கவுண்டமணி:- வாடா, பரதேசி நாயே, பார்த்தா தெரியலயாடா? இதில கேள்விவேறயா?
செந்தில்:- அண்ணே. கவலைப்படாதீங்க அண்ணே! குடியா முழுகிப் போச்சு.
கவுண்டமணி:- அடே, தேங்காய்தலையா, குடிமுழுகினாக்கூட கவலைப்படமாட்டேண்டா, கோடியை விழுங்கிட்டாங்களேடா.
செந்தில்:- எத்தனை கோடியண்ணே?
கவு:- சொன்னா நீ தரப்போறியாடா நாயே! வந்துட்டாங்க. எவன் மாட்டுவான், எவனெவன் கவிழுவான் எண்ணு பார்த்துக்கிட்டிருக்கிறதே பிழைப்பாபோச்சுடா. உங்களையெல்லாம் கட்டி வைச்சு உதைக்கணுமடா.
செ:- அண்ணே.
கவு:- என்னடா மாங்காய் தலையா?
செ:- (பாடுகிறார்) போனால் போகட்டும் போடா. வந்தது பல கோடி. போனது ஒரு கோடி, டேக் ஈஸி விட்டுவிடு. இனி வருவது வரட்டும், கோடிகள் கிடைக்கும் கவலையை நீயும் துறந்துவிடு.
கவு:- ஏண்டா, உன்னை பாட்டுப்பாடாவா சொன்னேன்.
செ:- ஆடிப்பாடி வேலை செய்தா அலுப்பிருக்காது. நான் 'திங்' பண்ணுறதும் அப்படித் தானண்ணே. அண்ணே. ஐடியா வந்திருச்சு.
கவு:- இவரு பெரிய கல்யாணராமன். ஐடியாவைச் சொல்லுடா எருமைத் தோலா.
செ:- யாமிருக்கப்பயம் ஏன் அண்ணே?
கவு:- ஏண்டா இன்னைக்கு யார் முகத்தில முழிச்சே? உதைபட்டே சாகப்போறேபார்.
செ:- அவசரப்படுறீங்கண்ணே. சில விஷயங்களில அவசரப்படக் கூடாதண்ணே. நிதானமா யோசியுங்க. நான் ஏன் அப்படிச் சொன்னேன் எண்ணு புரியும்.

## கவுண்டமணியின் 'ஒருகோடி'



செ:- ஒண்ணு சொன்னா கோபிச்சுக்க மாட்டீங்களே?
கவு:- நீ சொல்ல நினைக்கிறதை சொல்லுடா. கோபிக்கலாமா வேண்டாமா எண்ணு அப்புறமா பார்த்துக்கலாம்.
செ:- எதை எங்க வைக்கணும் எண்ணு உங்களுக்கு சரியாத் தெரியல்லையண்ணே.
கவு:- ஏன்டா, குத்திக் காட்டுறியா?
செ:- குத்திக்காட்ட வேண்டிய நேரத்தில குத்திக்காட்டித்தானேயாகணும். தப்பா அண்ணே?
கவு:- நீ எங்கடா வைச்சாய்?
செ:- எங்க வைக்கணுமோ அங்க.
கவு:- அதான் எங்கேடா? உதைபடப்போறே நீ. ஒழுங்கா சொல்லிடு.
செ:- வருமானவரிக்காறங்க காதில விழுந்திடப்போவுது. நான் சொன்னா அவங்க ஈசியா கண்டுபிடிச்சிடுவாங்கண்ணே.
கவு:- பத்து இலட்சத்தை மட்டும் ஏண்டா வெளியே வைச்சிருந்தே? எங்க வைக்கணும் எண்ணு தெரிந்தவன் அதையும் சரியா வைச்சிருக்கலாமல்ல.
செ:- அங்க தானண்ணே பிழை விடுறீங்க?
கவு:- ஏண்டா?
செ:- எதுவுமே மாட்டேல்லேயண்ணா அங்க இங்க கையைப் போட்டு தேடிக்கிட்டே யிருப்பானுங்க. இப்ப பாருங்க, பத்து கிடைச்ச திருப்தியில போயிட்டாங்களே.
கவு:- சட்டித்தலையா, மண்டையில களிமண் இருக்கோன்னு நினைச்சேன்டா, இப்பதான் தெரியுது நீ எங்கேயோ போயிட்டாயடா.
செ:- இன்னைக்குத்தான் அண்ணே முதன் முதலா உங்கள் வாயால நாலு நல்ல வார்த்தை கேட்டிருக்கேன். தாங்யூ வெரிமச்.
கவு:- என்ன சொன்னே?
செ:-தாங்யூ வெரிமச்.
கவு:- அது இங்கிலீசுங்களா?
செ:- அப்படித்தான் சொல்லுறாங்கண்ணே.
கவு:- எல்லாம் நேரம்ண்டா. நேரம்.
செ:- டேக் இட் ஈஸியண்ணே.
கவு:- எங்க திருப்பிச் சொல்லு
செ:- டேக் இட் ஈஸி
கவு:- (எட்டி உதைக்கிறார்) நாயே! எவனெவன் இங்கிலீஸ் பேசறதெண்ணு இல்லையாடா? (உதைக்கிறார்)
செ:- அண்ணே விட்டுடுங்கண்ணே. இனிபேசவேயில்லை அண்ணே. உங்களுக்கு 'குட் ஐடியா' சொல்லத்தான் வந்தேன் அண்ணே.
கவு:-(உதைப்பதை நிறுத்துகிறார்) ஐடியாவா? நீயா? ஐயோ ஐயோ தாய்க்குலமே, தந்தைக் குலமே, என் சோகக் கதையைக் கேளுங்கம்மா. இந்த மாங்கொட்டை தலையன் எனக்கு ஐடியா சொல்லுற நிலமை வந்திடுச்சே. இந்த நிலை என் எதிரிக்கும் வரக் கூடாதும்மா. சொல்லித்தொலையடா கொள்ளிவாயா?
கவு:- நான் நிதானமா யோசிச்சேன் எண்ணுவை, நீ காணாமப்போயிருவே.
செ:- வேணாம் அண்ணே. சொல்லிடுறேன். உதைபட நானிருக்கேன் அண்ணே. நீங்க எத்தனைவாட்டி என்னை உதைச்சாலும் ரசிக்க ஆள் இருக்காங்க. ஒரு கோடி போனா என்ன, உழைச்சா சம்பாதிச்சிங்க? உதைச்சு சம்பாதிச்ச பணம்தானே. நியாயமா பார்த்தா நான்தான் கவலைப் படணுமண்ணே. நஷ்டப்பட்டதையெல்லாம் திருப்பியெடுக்கணுமென்னா நான்தானே உதை வாங்கணும். உதைங்கண்ணே. உதைங்க. உங்களுக்காக என் உடம்பை எருமையா மாற்றித்தர தயாரா இருக்கேன் அண்ணே.
கவு:- (குலுங்கிக் குலுங்கி அழுகிறார்) அடே செந்தில்.
செ:- பெயரைச் சொல்லி கூப்பிட்டு பிழைப்பில மண் அள்ளிப் போட்டுடாதேங்கண்ணே.
கவு:- ஏண்டா.
செ:- ஜனங்க ரசிக்கமாட்டாங்கண்ணே. ஏன் அண்ணே அழுவறீங்க?
கவு:- இல்லேடா செந்... இல்லேயில்லை.. பன்னித்தலையா இது ஆனந்தக்கண்ணீரடா. ஆனந்தக்கண்ணீர்.
செ:- ரொம்ப உணர்ச்சிவசப்படாதீங்கண்ணே. காரியம் கெட்டிடும். நான் போயிட்டுவரவா அண்ணே.
கவு:- சென்றுவா மகனே, சென்றுவா.
செ:- அண்ணே. நான் உற்சாகமாக செல்ல வேண்டுமானால் நீங்கள் ஒரு உதை உதைக்கணும்.
கவு:- (உதைக்கிறார். செந்தில் ஒரு பல்டி யடித்து எழுந்து ஓடுகிறார்.)



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11

# பேய்கள் நடுத்தெருவில்

➡ தடிக்குப் பதிலாக துப்பாக்கி. அதுவும் யாரிடம்? படிக்க வேண்டிய வயதில் உள்ள சிறுவர்களிடம். விளைவு: விபரீதம். வீதியில் வேட்டை.

அம்மன் ஜுவல்
AMMAN JEWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11



தருவது


விபோடை

⬅ படத்தில் உள்ள நெஞ்சை உலுக்கும் கொடுமை லைபீரியா நாட்டின் வீதியில் கண்ட காட்சி. கருத்தை கருத்தால் சந்திக்கும் பொறுமை இல்லை. கருவிகளால் பிரச்சனையைத் தீர்த்துக்கொள்கிறார்கள்.

கையில் இருப்பதால் அடிக்க மட்டும்தான் தெரியக்கூடிய வயது. என்ன செய்கிறோம், எதற்காகச் செய்கிறோம் என்பதைவிட, தம்மால் அடுத்தவரை அடிக்க முடியும்; ஓட ஓட விரட்ட முடியும் என்பதுதான் ஆனந்தம். கொல்லப்படுகிறவன் எதிரியா? நண்பனா, சோதரனா? என்பது பற்றியெல்லாம் நின்று நிதானிக்கும் வயதுமல்ல. ஆயுத கலாச்சாரத்தின் விளைச்சலில் வெளிப்படும் விபரீதங்களில் ஒன்று இது.

தூரநோக்கி கமராவால் இந்த வீதிப் பேய்களின் தாண்டவத்தை படமாக்கிய கமராக்காரர் துணிச்சல்காரர்தான்.

## வெறிக்க வியக்க



⬅ சில பரிசுகள் மறக்கவே முடியாத பரிசுகளாக இருக்கும். பரிசு வாங்கியவரை மட்டுமல்ல, ஏனையோரையும் வியப்படைய வைக்கும் பரிசுகள் அபூர்வமானவை.

படத்தில் இருப்பதும் அபூர்வ பரிசுதான். இங்கிலாந்தில் உள்ள எட்வின் சாக்கெல்ரன் என்னும் எழுத்தாளருக்கு (படத்தில் இருப்பவர்) வழங்கப்பட்ட பரிசு இது. உலகில் மிகப் பெரிய, விஸ்கி போத்தல் வடிவில் செய்யப்பட்ட பலூன் இது. பெல்ஸ் விஸ்கி நிறுவனம் இதனை பரிசாகக் கொடுத்தது. விஸ்கி போத்தல் வடிவில் இப்படியொரு ராட்சத பலூனை பறக்கவிட்டது உலக சாதனை.

பெல்ஸ் நிறுவனத்திற்கு கல் ஒன்று மாங்காய் இரண்டு. பரிசும் கொடுத்த திருப்தி. விளம்பரமும் கிடைத்தது.

# சரிகிறார் சக்கரவர்த்தி

➡ இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் என்பது சாதாரணப்பதவியல்ல. ஒரு சிறந்த கிரிக்கெட் வீரனின் உச்சக்கனவு அதுதான். கனவு எல்லோருக்கும் கைப்படுவதில்லை. ஒரு சிலருக்குத்தான் அந்த உயரத்தை எட்டமுடிகிறது. அவர்களில் ஒருவர் அசாருதீன்.

அவரோடு கப்டன் பதவிக்கு போட்டியிடக்கூடிய சீனியரான வீரர்கள் பலர் ஓய்வு பெற்றுவிட்டதால், போட்டியே இல்லாத கப்டனாக இருந்தார் அசார்.

கப்டன் பதவி அசாருக்கு கிடைத்தது அதிஷ்டவசமாக அல்ல. அதற்குரிய தகுதி, அனுபவம் என்பவை அவரிடம் இருந்தன. தனது தலைமையில் அணிக்கு பல வெற்றிகளை தேடிக்கொடுத்ததுமூலம், தான் ஒரு சிறந்த கப்டன் என்பதை நிரூபித்தும் காட்டினார். இந்திய அணிக்கு வாய்த்த கப்டன்களிலேயே அசாருதீன்தான் ராசியான கப்டன் என்று சொல்லப்பட்ட காலமும் இருந்தது.

இப்போதுதான் கதை மாறிவிட்டது. அசாருதீனின் கப்டன் பதவிக்கு குறிவைத்து முதல் பந்தை வீசியவர் சுனில் கவாஸ்கர். ஏனோ தெரியாது அந்த முன்னாள் கப்டனுக்கும் அசாருதீனுக்கும் ஒட்டுவதேயில்லை.

சுனில் கவாஸ்கரை அடுத்து மனோஜ்பிரபாகர் அசாரை [illegible] போல்ட்டாக்கும் வேகத்தோடு குற்றச்சாட்டுக்களை வீசினார். அதன்பின்னர் சித்துவின் அதிரடியான குற்றச்சாட்டுக்கள். போதாக்குறைக்கு கபில்தேவும் அசாருதீனை எதிர்த்து வார்த்தைகளை வீசியிருக்கிறார்.

இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் இந்திய அணி வாங்கிய அடிகளும், சமீபகாலத்தோல்விகளும் சேர்ந்து அசாருதீனின் புகழில் சரிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

விரைவில் தானாகவே ஓய்வுபெற நினைத்துள்ளார் அசாருதீன் என்று இந்திய பத்திரிகைகள் எழுதிவருகின்றன. கப்டன் பதவி இல்லாமல் போனால் தொடர்ந்து அணியில் விளையாடுவது அவருக்கு சங்கடமாக இருக்கும் என்று காரணம் கூறப்படுகிறது.

தனது தலைமையில் பல வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்தவரை ஒதுங்கவேண்டாம் என்று குரல் கொடுக்க ஆள் இல்லாமல் போனதுதான் கவலைக்குரிய விஷயம்.

வெற்றிகளைக் குவிக்கும்போது வேண்டப்பட்டவராக இருந்த ஒருவர் அணி முழுவதும் பொறுப்பேற்க வேண்டிய தோல்விகளுக்கான பழியையும் தன் தலையில் சுமக்க வேண்டியதாகிவிட்டது.

அசார் நிலை வருத்தத்துக்குரியதுதான்.



# பூ...பூ...பூசணி

## எடை மட்டும் 990 இறாத்தல் அடேங்கப்பா!




கின்னஸ் புத்தகத்தில் லேட்டஸ்டாக இடம்பிடித்துள்ள பெரிய பூசணிகளில் ஒன்று இது.

இதன் எடை 990 இறாத்தல். கனடாவில் ஒன்ராறியோ மாநிலத்தில் உள்ள அஸ்ரொன் என்ற ஊரில் உள்ள தோட்டத்தில் விளைந்தது. எச்.பாக்ஸ் என்னும் விவசாயியின் தோட்டம் அது.

'அய்' பெரிய பூசணி. துள்ளி விளையாடுகிறான் பாக்ஸின் மகன்.

தினமுரசு வாரமலர்



[illegible] தினமுரசு பதிப்பகத்தாரால் 28, வெல்லாற, நாவலையில் உள்ள சமலை அச்சகத்தில் ஜூன் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்